மின்னிதழ்
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2022 ஏப்ரல் 23 சனிக்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்







வரு. 90 இல. 94 | Saturday 23, April, 2022 | 15பக்கங்கள் | 30/-

எரிபொருள் விலை அதிகரிப்பு விவகாரம்:

## நிதியமைச்சரின் உத்தியோகபூர்வ அறிவிப்பு விரைவில் சபையில்

ஹர்ஷ எம்.பிக்கு பிரதமர் மஹிந்த சபையில் பதில்

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



எரிபொருள் விலை அதிகரிப்பு தொடர்பில் நிதியமைச்சரினால் வழங்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ அனுமதி விரைவாக சபையில் சமர்ப்பிக்கப்படுமென பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா நேற்று சபையில் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும் 06

SJP மற்றும் சுயாதீன MP க்கள் குழுவால்

## அரசியலமைப்பு திருத்தம் குறித்து பல யோசனைகள் முன்வைப்பு

சட்ட மாஅதிபரின் கவனத்துக்கு வரவுள்ளதாக அறிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

21 ஆவது அரசியலமைப்பு திருத்தத்துக்கான நகல் சட்ட வரைபு சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் விஜேதாச ராஜபக்ஷவினால் அண்மையில் சுயேட்சையாக மாறிய 06



பொருளாதார நெருக்கடியை தணிக்க

## இலங்கைக்கு உதவி வழங்க UNDP ஆதரவு வழங்கும்

அமைச்சர் அலி சப்ரியிடம் அச்சிம் ஸ்டெய்னர் உறுதி

இலங்கையின் பொருளாதார நெருக்கடியின் விளைவுகளைத் தணிக்க ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்டம் (UNDP) தனது ஆதரவை வழங்கியுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைக்காக வொஷிங்டனிலிருக்கும் நிதியமைச்சர் அலி சப்ரி மற்றும் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி திட்ட 06




பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணும்:

# அரசின் பயணப் பாதை வேலைத்திட்டம் விரைவில்

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை

IMF மற்றும் உலக வங்கியுடன் நிதி அமைச்சர் நடத்திவரும் பேச்சுவார்த்தைகள் வெற்றி



சபையில் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன நேற்று தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்,ஷம்ஸ் பாஹிம்**

பொருளாதாரத்தில் வீழ்ச்சியடைந்துள்ள நாட்டை மீளக் கட்டியெழுப்பும் வகையிலான அரசாங்கத்தின் பொருளாதார பயணப் பாதை வேலைத்திட்டம் நிதி அமைச்சர் நாடு திரும்பியதும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமென சபை முதல்வரும் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன நேற்று தெரிவித்தார். 06

பிரதமர் மற்றும் அமைச்சரவை பதவி விலகி...

## சர்வ கட்சிகளின் ஒத்துழைப்புடன் புதிய அரசை அமைப்பது அவசியம்

சவால்களை வெற்றி கொள்ளும் சந்தர்ப்பத்தை பாராளுமன்றத்துக்கு வழங்க வேண்டும்



ஜனாதிபதிக்கு முன்னாள் அமைச்சர் டலஸ் அழகப்பெரும எம்பி கடிதம்

பிரதமர் மற்றும் அமைச்சரவை பதவி விலகி, தேசிய நிகழ்ச்சி நிரலை அடிப்படையாகக் கொண்ட சர்வ கட்சிகளின் ஒத்துழைப்புடன் புதிய அரசாங்கத்தை அமைத்து சவால்களை வெற்றிகொள்வதற்கான சந்தர்ப்பத்தை பாராளுமன்றத்திற்கு வழங்க வேண்டும் என தெரிவித்து பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும ஜனாதிபதிக்கு கடிதமொன்றை எழுதியுள்ளார்.

நெருக்கடி நிலைமையில், பொதுமக்களையும் ஜனநாயகத்தையும் அரச கொள்கைகளையும் பாதுகாத்து, நாட்டின் பொருளாதாரம் மற்றும் அரசாங்க கட்டமைப்பை மீண்டும் ஸ்தாபிப்பதற்கு சரியானதும் தூர நோக்குடையதுமான தீர்மானத்தை எடுப்பதற்கு தாம் பின்னிற்பதில்லையென அவர் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து கட்சிகளின் பிரதிநிதிகளும் உண்மையான இணக்கப்பாட்டுடன் சிறிய அமைச்சரவையை அதிகபட்சமாக ஒரு வருட காலத்திற்கு அமைப்பதற்கு தாமதமின்றி செயற்பட வேண்டும் என டலஸ் அழகப்பெரும ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

## சீனா இலங்கைக்கு தொடர்ந்தும் உதவும்

அமைச்சர் பீரிஸிடம் தூதுவர் உறுதி



சீன அரசாங்கத்தின் நேரடி ஆதரவு, பிராந்திய அரசாங்கத்தின் ஆதரவு மற்றும் செஞ்சிலுவைச் சங்கம் மூலம் சீனாவின் ஆதரவு உட்பட சாத்தியமான எல்லா வழிகளிலும் சீன அரசாங்கம் 06

## 13 ஆம் திருத்தச் சட்டத்தை விட்டுக்கொடுக்க முடியாது

அமைச்சர் டக்ளஸ் திட்டவட்டமாக அறிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்ச்சியாக அமுல்படுத்தப்பட வேண்டுமென்பதில் ஈ.பி.டி.பி. உறுதியாக இருப்பதாக கட்சியின் செயலாளர் நாயகம் 06

ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்ட

## 30 பேர் பேராயருடன் வத்திக்கான் புறப்பட்டனர்

பாப்பரசரின் அழைப்பின் பேரில் பயணம்



பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை மற்றும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களில் பாதிக்கப்பட்ட 30 பேர் நேற்று (22) காலை வத்திக்கான் பயணமாகினர். 06

## G.C.E ( O/L), (A/L) பரீட்சை திகதிகள் நேற்று அறிவிப்பு

2022 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள க.பொ.த சாதாரண தர மற்றும் உயர்தர பரீட்சைகளுக்கான திகதிகளை பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. இதற்கமைய க.பொ.த சாதாரண தரப் பரீட்சை மே 23 முதல் ஜூன் 01 வரையிலும், க.பொ.த உயர்தரப் பரீட்சை ஒக்டோபர் 17 முதல் நவம்பர் 12 வரையிலும் நடைபெறவுள்ளது.

இந்திய மத்திய வங்கியால்

## இலங்கைக்கான கடன் நாணய பரிமாற்ற கால எல்லை நீடிப்பு

இலங்கைக்கான 400 மில்லியன் டொலர் கடன் நாணயப்பரிமாற்ற கால எல்லை இந்திய மத்திய வங்கியினால் நீடிக்கப்பட்டுள்ளது. இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயம் இந்த விடயத்தை தெரிவித்துள்ளது. 06

## யாழ்., மன்னாரிலிருந்து மேலும் 18 பேர் தமிழகத்தில் தஞ்சம்

இது வரை 60 பேர் அகதிகளாக சென்றுள்ளனர்



**மன்னார் குறூப், யாழ். விசேட, பருத்தித்துறை விசேட நிருபர்கள்**

இலங்கையிலிருந்து மேலும் 04 குடும்பத்தைச் சேர்ந்த 17 பேரும் தனி நபர் ஒருவர் உட்பட 18 பேர் அகதிகளாக தமிழகத்தில் தஞ்சமடைந்துள்ளனர். 06

## கட்டாரில் சிறையிலிருந்த 20 இலங்கையர் விடுதலை

புனித ரமழான் மாதத்தில் கரிசனை



கட்டாரில் சிறைத் தண்டனை அனுபவித்து வந்த 20 இலங்கையர் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது. 06




## அடுத்த வாரம் முதல் மீண்டும் பால் மா விலை அதிகரிக்கும் சாத்தியம்



அத்தியாவசியப் பொருட்களின் விலை பாரியளவில் அதிகரித்துள்ள இச்சந்தர்ப்பத்தில் இறக்குமதி செய்யப்படும் பால் மாவின் விலை அடுத்த வாரம் முதல் மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக பால் மா இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர். 06

## நீர்த்தேக்கங்களில் நீர் மட்டம் அதிகரிக்கும் வரை மின்வெட்டு தொடரும்

நாட்டில் தற்போது பெய்து வரும் மழையினால் நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் அதிகபட்ச கொள்ளளவை எட்டும் வரை மின்சார விநியோகத்தை அவ்வப்போது நிறுத்த வேண்டியிருக்குமென இலங்கை மின்சார சபை குறிப்பிட்டுள்ளது.

தற்போது 25 சத வீத மின்சாரம் நீர் மின் நிலையங்களிலிருந்து உற்பத்தி செய்யப்படுவதாகவும், மேலும், நுரைச்சோலை அனல் மின் நிலையத்திலிருந்து 900 மெகாவோட் மின்சாரம் தேசிய மின் கட்டமைப்பில் சேர்க்கப்படுமெனவும் இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளர் டி.சி.ஆர். அபேசேக்கர 06

நிலத்தில் புதைத்து வைத்துள்ளதாக சந்தேகம்

## புலிகளின் ஆயுதங்களைத் தேடி முல்லைத்தீவில் STF வேட்டை

நீதிமன்ற அனுமதியுடன் தோண்டும் பணிகள் முன்னெடுப்பு



முல்லைத்தீவு மாவட்ட குற்றவியல் பிரிவு பொலிஸாரின் தகவலுக்கமைய புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்குட்பட்ட உடையார்கட்டு குரவில் பகுதியில் விடுதலைப்புலிகளின் ஆயுதங்கள், முக்கிய பொருட்கள் தேடப்பட்டுள்ளன. இப்பகுதியில், புதைத்து வைத்துள்ளதாக நம்பப்படும் இடத்தை நீதிமன்ற உத்தரவுக்கமைய 06




## சமையல் எரிவாயு விலை அதிகரிக்கப்படவில்லை

அரசாங்கம் அறிவிப்பு



லிற்றோ சமையல் எரிவாயு விலை அதிகரிப்பை அரசாங்கம் நிராகரித்துள்ளது.விலையை அதிகரிப்பதற்காக லிற்றோ எரிவாயு நிறுவனத்துக்கு அனுமதி வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே நேற்று நள்ளிரவு முதல் 12.5 கிலோ எடைக்கொண்ட சமையல் எரிவாயுவின் 06

யாழ். கொடிகாமத்தில் கொடூரம்

## பொலேரோ ரக வாகனம் ரயிலுடன் மோதி விபத்து

12 வயது மகன் பலி, தந்தையும் மற்றொரு மகனும் படுகாயம்

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் கொடிகாமம் பகுதியில் இடம்பெற்ற புகையிரதம் பொலேரோ ரக வாகன விபத்தில் சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ள நிலையில் 06



## ஸஹ்ரானுடன் செயற்பட்ட இருவருக்கு விடுதலை

சம்பந்தமில்லா பலரும் இன்னும் சிறையில்

முஜிபுர் ரஹ்மான் எம்.பி



ஸஹ்ரானுடன் இணைந்து செயற்பட்ட இருவரை அரசாங்கம் விடுதலை செய்துள்ளது. ஆனால் ஸஹ்ரானை வீதியில் கண்டவர்கள், தேநீர் அருந்தியவர்கள் இன்றும் சிறையிலுள்ளனர். சாரா உயிருடன் உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன் அவரை சர்வதேச பொலிஸ் ஊடாக கைது செய்ய அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லையென ஐக்கிய மக்கள் சக்தியின் 06

# சர்வதேச செய்திகள்

## மரியுபோல் நகருக்கு அருகில் பாரிய புதைகுழி: செய்மதி படங்கள் அம்பலம்

### ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டதாக குற்றச்சாட்டு



கடந்த பல வாரங்களாக ரஷ்யப் படையின் தாக்குதலுக்கு இலக்காகி வரும் உக்ரைனின் மரியுபோல் நகருக்கு அருகில் சுமார் 200 கல்லறைகள் கொண்ட பாரிய அடக்கஸ்தலம் ஒன்றை அமெரிக்க செய்மதி நிறுவனம் ஒன்று அடையாளம் கண்டுள்ளது.

கடந்த மார்ச் கடைசியில் இருந்து இந்த அடக்கஸ்தலம் விரிவடைந்து வருவதாக மக்சர் என்ற அந்த செய்மதி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

ரஷ்ய துருப்புகளால் கொல்லப்பட்ட மரியுபோல் பொது மக்களை ரஷ்யர்கள் இங்கு அடக்கம் செய்வதாக உக்ரைனிய உள்ளூர் அதிகாரிகள் குற்றம்சாட்டியுள்ளனர். ரஷ்யா இது பற்றி உடன் எந்த பதிலும் அளிக்கவில்லை.

கடந்த பல வாரங்களாக உக்கிர தாக்குதலை நடத்திய ரஷ்ய துருப்புகள் மரியுபோலின் பெரும் பகுதியை கைப்பற்றி இருந்தபோதும், சில உக்ரைனிய படையினர் நகரில் இருக்கும் உருக்கு ஆலை ஒன்றில் சிக்கியுள்ளனர். அந்த உருக்காலையை கைப்பற்றும் திட்டத்தை ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் கைவிட்டிருப்பதோடு அந்தப் பகுதியை மூடும்படி ரஷ்ய துருப்புகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

குறிப்பிடப்பட்டுள்ள பரிய புதைகுழி மரியுபோலின் மேற்காக சுமார் 20 கிலோமீற்றர் தொலைவில் இருக்கும் மன்ஹுஷ் என்று அழைக்கப்படுகின்ற அருகாமை கிராமம் ஒன்றிலேயே அமைந்துள்ளது. இங்கு சுமார் 85 மீற்றர் நீளமுள்ள நான்கு நேர் வரிசைகள் காணப்படுவதாக மக்சர் குறிப்பிட்டுள்ளது.

இந்த இடத்தில் ரஷ்யர்கள் பொது மக்களை புதைப்பதாக மரியுபோல் நகர சபை முன்னதாக குற்றம்சாட்டி இருந்தது.

ரஷ்யர்கள் பள்ளங்களை தோண்டி குப்பை லொரிகளை பயன்படுத்தி உடல்களை கொண்டுவந்து இங்கு புதைப்பதாக அந்தத் தளத்தின் வானில் இருந்து எடுக்கப்பட்ட படங்களை மேற்கோள்காட்டி மரியுபோல் நகரசபை அறிக்கை ஒன்றை வெளியிட்டது. இந்த அடக்கஸ்தலத்தின் அளவை விட ஏற்கனவே அது இரண்டு மடங்காகி இருப்பதாக அது குறிப்பிட்டது.

மரியுபோல் நகரில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என்று நகர மேயர் அஸொவ்ஸ்டால் தெரிவித்துள்ளார். இராணுவக் குற்றங்களை மறைக்க, சண்டையில் கொல்லப்பட்ட உக்ரைனிய மக்களை ரஷ்யத் துருப்புகள் புதைப்பதாக அவர் குற்றஞ்சாட்டினார்.

உக்ரைன் மற்றும் மேற்கத்திய நாடுகள் கூறிவரும் இந்தக் குற்றச்சாட்டை ரஷ்யா தொடர்ந்து மறுத்து வருகிறது.

இதனிடையே மரியுபோல் நகர மேயர், அஸொவ்ஸ்டால் உருக்குத் தொழிற்சாலையிலிருந்து பொதுமக்களை வெளியேற்றுவதற்கான சாத்தியம் ஏதும் இல்லை என்று கூறியுள்ளார். நிலையான போர் நிறுத்தம் நடப்பில் இல்லாதது அதற்குக் காரணம் என்றார் அவர்.

அந்தத் தொழிற்சாலைக்குள் உக்ரேனியத் துருப்புகள் இன்னமும் உள்ளனர். அவர்களுடன் சுமார் 1000 பொதுமக்களும் அங்கு தஞ்சம் நாடியுள்ளனர்.

## சிறு விமானம் வீதியில் விழுந்ததில் அறுவர் பலி



ஹெய்டி தலைநகர் போர்ட் அயு பிரின்ஸின் பிரதான வீதி ஒன்றில் சிறிய விமானம் ஒன்று விழுந்து விபத்துக்குள்ளானதில் குறைந்தது ஆறு பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

தலைநகரில் இருந்து தென் கிழக்கு துறைமுக நகரான ஜக்மேலுக்கு பயணித்துக் கொண்டிருந்த வேளையிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. தரையில் இருந்த பலரும் காயம் அடைந்துள்ளனர்.

விமான ஓட்டி ஆரம்பத்தில் உயிர் தப்பி இருந்தபோதும் மருத்துவமனையில் பின்னர் உயிரிழந்துள்ளார்.

இயந்திரக் கோளாறே இந்த விபத்துக்குக் காரணம் என்று அதிகாரிகள் குற்றம்சாட்டியுள்ளனர்.

விமானம் புறப்பட்டு 20 நிமிடங்களில் உதவி கோரி அழைப்பு விடுத்திருந்ததாக ஹெய்டி சிவில் விமான அதிகாரசபை குறிப்பிட்டிருந்தது.

## உக்ரைனுக்கு அமெ. கூடுதல் ஆயுத உதவி



உக்ரைனுக்குக் கூடுதலாக 800 மில்லியன் டொலர் மதிப்பிலான ஆயுதங்களை வழங்க விருப்பதாக அமெரிக்கா கூறியுள்ளது.

டொன்பாஸ் வட்டாரத்தில் ரஷ்யத் துருப்புகளைச் சமாளிக்க அது கைகொடுக்கும்.

அத்துடன், உக்ரைனிய அரசாங்கத்துக்குக் கூடுதலாக 500 மில்லியன் டொலரை நேரடிப் பொருளாதார உதவியாக வழங்க விருப்பதாகவும் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அறிவித்தார்.

அதையும் சேர்த்து, அமெரிக்கா வழங்கியிருக்கும் மொத்த நிதியுதவியின் மதிப்பு 3 பில்லியன் டொலரைத் தாண்டியுள்ளது. ரஷ்யாவை எதிர்க்கும் உக்ரைனுக்கு அமெரிக்கா தொடர்ந்து ஆதரவு வழங்க வேண்டும் என்றால் எதிர்காலத்தில் இன்னும் அதிகப் பணம் தேவைப்படும் என்றுபைடன் அமெரிக்க பாராளுமன்றத்தில் கூறினார்.

## வட, தென் கொரிய தலைவர்கள் நட்புரீதியான கடிதப் பரிமாற்றம்



வட கொரியத் தலைவர் கிம் ஜொங் உன், தென் கொரிய ஜனாதிபதி மூன் ஜே இன்னுடன் நட்பார்ந்த கடிதங்களைப் பறிமாறிக்கொண்டுள்ளார்.

உறவுகளை மேம்படுத்த மூன் எடுத்த முயற்சிகளுக்குத் கிம் நன்றி தெரிவித்ததாக வட கொரியாவின் அரச செய்தி நிறுவனம் தெரிவித்தது.

2018இல் நடந்த வரலாற்றுச் சிறப்புமிக்க உச்சநிலைச் சந்திப்பு, எதிர்காலத்துக்கு நம்பிக்கை தந்ததாகவும் கிம் குறிப்பிட்டார்.

இரு சாராரும் நம்பிக்கையுடன் அயராது முயற்சிகளை எடுத்தால் உறவுகள் மேம்படும் என்று இருவரும் ஒப்புக்கொண்டனர். இணைவதற்கான அடித்தளத்தை அமைக்கத் தாம் தொடர்ந்து முயற்சிகளை எடுக்கவிருப்பதாக மூன் உறுதியளித்திருந்தார்.

மூனின் ஜனாதிபதி பதவிக்கான தவணைக் காலம் அடுத்த மாதம் 9ஆம் திகதி முடிவடையவிருக்கும் வேளையில் கடிதங்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டுள்ளன.

வட கொரியாவில் ஜனாதிபதி ஒருவர் ஐந்து ஆண்டுகள் தவணைக்கு மாத்திரமே பதவி வகிக்க முடியும் என்ற நிலையில் புதிய ஜனாதிபதியாக தேர்வாகி இருக்கும் யுன் சுக் யிவோல் வரும் மே மாதம் 10 ஆம் திகதி ஜனாதிபதியாக பதவி ஏற்கவுள்ளார்.

கொரிய தீபகற்பத்தில் பதற்ற சூழல் அதிகரித்திருக்கும் நிலையிலேயே இந்த கடிதப் பரிமாற்றம் இடம்பெற்றுள்ளது. வட கொரியாவின் அணு சோதனைத் தளமான புங்கி ரியில் புதிய அகழ்வு வேலைகள் இடம்பெற்று வருவதும் அங்கு எடுக்கப்பட்ட செய்மதிப் படங்கள் காட்டுகின்றன.

2018 ஆம் ஆண்டு மூடப்பட்ட இந்தத் தளத்தில் வட கொரியா மீண்டும் தனது அணு செயற்பாடுகளை ஆரம்பித்திருப்பதற்கான சமிக்ஞைகளை இது காட்டுவதாக உள்ளது.

வட கொரியா அண்மைக் காலத்தில் தனது ஏவுகணைச் சோதனைகளையும் அதிகரித்துள்ளமை குறிப்பித்தக்கது.

## ஆப்கானில் நான்கு குண்டு தாக்குதல்களில் பலர் பலி



ஆப்கானிஸ்தானில் நேற்று இடம்பெற்ற நான்கு குண்டுவெடிப்புகளில் டஜன் கணக்கிலானோர் கொல்லப்பட்டதாகவும், பலர் காயமடைந்ததாகவும் உள்ளூர் அதிகாரிகள் மற்றும் செய்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மசார் இ ஷெரிப் நகரில் உள்ள ஷியா பள்ளிவாசலில் முதல் குண்டுவெடிப்பு நிகழ்ந்தது. இந்த குண்டுவெடிப்பில் குறைந்தது 31 பேர் கொல்லப்பட்டதாகவும், 87 பேர் காயமடைந்ததாகவும் சுகாதார அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த தாக்குதலுக்கு பொறுப்பேற்றுள்ள ஐ.எஸ் அமைப்பு, ஷியா பள்ளிவாசல் வழிபாட்டாளர்களால் நிரம்பியிருந்தபோது, பை ஒன்றில் இருந்த வெடிகுண்டை வெடிக்கச் செய்ததாகக் கூறியுள்ளது.

ஐ.எஸ் முன்னாள் தலைவர் மற்றும் செய்தித் தொடர்பாளரின் மரணங்களுக்கு "பழிவாங்கும்" உலகளாவிய பிரச்சாரத்தின் ஒரு பகுதி என இந்த தாக்குதல் குறித்து ஐ.எஸ். தெரிவித்துள்ளது.

மற்ற மூன்று குண்டு வெடிப்புகள் குறித்து ஐ.எஸ். அமைப்பு கூறவில்லை, மேலும், அந்த குண்டுவெடிப்புகளுடன் ஐ.எஸ். அமைப்புக்கு தொடர்பு உள்ளதா என்பதும் தெளிவாக தெரியவில்லை.

இரண்டாவது குண்டு வெடிப்பானது, குண்டூஸ் பகுதியில் உள்ள பொலிஸ் நிலையம் அருகே வாகனம் ஒன்று வெடித்ததன் மூலம் நிகழ்ந்தது. இதில், 4 பேர் உயிரிழந்தனர், 18 பேர் காயமடைந்தனர் என, பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## எதிர்கால வைரஸ் பரவலுக்கு புதிய நிதியை அமைக்க ஜி20 நாடுகள் நடவடிக்கை



எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய வைரஸ் தொற்றுச் சூழல்களை உலகம் இன்னும் மேம்பட்ட நிலையில் சமாளிக்க ஏதுவான புதிய நிதியை அமைக்க, ஜி20 உறுப்பு நாடுகள் ஒருமித்த கருத்தை எட்டியுள்ளன.

அமெரிக்காவும் இந்தோனேசியாவும் அதற்கு ஆதரவு தெரிவித்துள்ளன. அந்த நிதி, உலக வங்கியில் வைக்கப்படக்கூடும். எனினும் அத்தகைய நிதியை அமைப்பது, உலக சுகாதார அமைப்பை அல்லது மற்ற சர்வதேச சுகாதார அமைப்புகளைப் பலவீனமடையச் செய்யும் என்ற அக்கறைகள் நிலவுகின்றன.

ஜி20 உறுப்பு நாடுகளின் சுகாதார அமைச்சர்கள் எதிர்வரும் ஜூன் மாதத்தில் சந்திக்கும்போது நிதி குறித்த விபரங்களை முடிவுசெய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஜி20 அமைப்பு, எவ்வளவு நிதியைத் திரட்ட விரும்புகிறது என்பது தெரியவில்லை.

வைரஸ் பரவல் தயார்நிலைக்காக ஆண்டுதோறும் சுமார் 10.5 பில்லியன் டொலர் தேவைப்படும் என்று உலக சுகாதார அமைப்பும் உலக வங்கியும் முன்னதாக மதிப்பிட்டன.

நிதி தொடர்பான முடிவுகளை எடுக்கும் பொறுப்பில் தனக்குப் பங்கிருப்பது முக்கியம் என்றும் நிறுவனம் குறிப்பிட்டது.

## ஷங்ஹாயில் வைரஸ் கட்டுப்பாடுகள் தீவிரம்



சீனாவின் ஷங்ஹாய் நகர அதிகாரிகள், கொவிட்19 வைரஸ் பரவல் கட்டுப்பாடுகளைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.

அவற்றின்படி, நகரம் முழுதும் வைரஸ் பரவல் பரிசோதனைகள் மீண்டும் மேற்கொள்ளப்படும்.

நோய்த் தொற்று முற்றிலும் நீங்கிய பின்னரே 3 வார முடக்கநிலை கட்டங்கட்டமாகத் தளர்த்தப்படும் என்று அதிகாரிகள் எச்சரித்தனர்.

நகரின் வைரஸ் தொற்றுச் சூழலில் ஆக்ககரமான போக்கு தென்பட்டாலும் சமூகத்தில் யாரும் நோய்வாய்ப்படாமல் இருப்பதே தங்களின் இலக்கு என்று அதிகாரிகள் கூறினர்.

கடுமையான விதிமுறைகளுக்கு மக்கள் உட்பட்டு நடந்தால் வாழ்க்கை விரைவில் வழக்கநிலைக்குத் திரும்பிவிடக்கூடும் என்று அவர்கள் வலியுறுத்தினர்.

ஷங்ஹாயில் புதிதாக 15,000 வைரஸ் தொற்றுச் சம்பவங்கள் பதிவாயின. மேலும் 11 பேர் உயிரிழந்துள்ளனர்.

## 84 ஆண்டுகள் வேலை செய்து உலக சாதனை



பிரேசிலைச் சேர்ந்த முதியவர் ஒருவர் 84 ஆண்டுகள் ஒரே நிறுவனத்தில் பணியாற்றி கின்னஸ் சாதனை படைத்துள்ளார்.

பிரேசிலின் பிரஸ்க் நகரை சேர்ந்த 100 வயதான வோல்டர் ஆர்த்மான், தனது 16 வயதில் ரெனக்ஸ் வியூ என்ற புடவை தொழிற்சாலையில் சாதாரண ஊழியராக வேலைக்குச் சேர்ந்த நிலையில் தற்போது அதே நிறுவனத்தின் வியாபார பிரிவின் முகாமையாளராக உள்ளார்.

மெல்ல மெல்ல பணி உயர்வு, அத்துடன் கூடிய சம்பள உயர்வால் நிறுவனத்தை விட்டு வெளியேற மனமில்லாத அவர், 84 ஆண்டுகள் அங்கேயே பணியாற்றி வருகிறார்.

"வேலையை விரும்பிச் செய்ய வேண்டும். நான் விருப்பத்துடனும் உத்வேகத்துடனுமே வேலையை ஆரம்பித்தேன்" என்று ஆர்த்மான் குறிப்பிட்டார்.

## சக விமானப் பயணிக்கு குத்துவிட்ட மைக் டைசன்



பிரபல முன்னாள் குத்துச்சண்டை வீரரான மைக் டைசன் தம்முடன் விமானத்தில் பயண செய்த ஒருவரைச் சரமாரியாக குத்தும் காட்சி சமூக தளங்களில் பரவிவருகிறது.

அடிவாங்கிய நபர் டைசனின் விசிறி என நம்பப்பகிறது. விமானத்தில் டைசனைப் பார்த்ததும் அவருக்கு ஒரே ஆனந்தம். டைசனுடன் பேசி புகைப்படமும் எடுத்துக் கொண்டார். ஆனால், அந்த நபரின் வாய் ஓயவில்லை. கலகலப்பாகத் ஆரம்பித்த உரையாடல், பின்னர் டைசனுக்கு எரிச்சலூட்ட தொடங்கியது. பலமுறை டைசன் அவரை வாயை மூடச்சொல்லியும் அவர் காதில் வாங்கவில்லை.

அடையாளம் தெரியாத அந்த நபர் தண்ணீர்ப் புட்டியை டைசன் மீது தூக்கியேறிந்ததாகவும் கூறப்பட்டது. கோபமடைந்த அந்த நபரின் முகத்தைஓங்கி பலமுறைகுத்தினார். நபரின் நெத்திலியிருந்து இரத்தம் மளமளவென கொட்டியது.

அவருக்கு முதலுதவி அளிக்கப்பட்டு, சம்பவம் குறித்து பொலிஸில் புகார் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2022 ஏப்ரல் 23 சனிக்கிழமை

தினகரன்
THINAKARAN
තිනකරන්



**தொழுகை நேரம்**

19முதல் 24 வரை

| | |
|---|---|
| சுபஹ் | 04.44 |
| ளுஹர் | 12.11 |
| அஸர் | 03.21 |
| மஃரிப் | 06.19 |
| இஷா | 07.30 |

**இன்றைய சுபதினம்**

சுபகிருது வருடம் சித்திரை 10

ராகுகாலம் : பகல் : 09.00 - 10.30வரை
சுபநேரம் : காலை : 07.30 - 09.00வரை

யோகம்: சித்தயோகம்

திதி: அஷ்டமி

# எதிர்க்கட்சித் தலைவரின் கூற்று பிரதமர் மஹிந்தவினால் நிராகரிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்,ஷம்ஸ் பாஹிம்**

ரம்புக்கணை சம்பவம் தொடர்பில் ஆராய்வதற்காக கூடிய பாதுகாப்புச் சபையில் பிரதமருக்கு அழைப்பு விடுக்கப்படவில்லையென நேற்று சபையில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்த கூற்றை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நிராகரித்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் கேள்விக்கு பதிலளித்த பிரதமர்,

"எனக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. எனினும் நான் அந்த அமர்வுக்கு செல்லவில்லை. அன்று பிற்பகல் அங்கு நடைபெற்ற பேச்சுவார்த்தை தொடர்பில் எனக்கு தெளிவு படுத்தப்பட்டது" என்றும் சபையில் தெரிவித்தார்.

சபை முதல்வர் அமைச்சர் தினேஷ் குணவர்தன உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் சபையில் உரையாற்றிய போது,

அன்றைய காலகட்டத்தில் நடைபெற்ற பாதுகாப்புக் குழு கூட்டத்துக்கு அன்றைய பிரதமர் அழைக்கப்பட்டிருக்கவில்லை.

நாட்டுக்கு மிகவும் பாதிப்பான ஒரு காலகட்டத்தில் பிரதமர் அழைக்கப்படாமலேயே பாதுகாப்பு சபைக் குழு கூடியுள்ளது என்றார்.

அதனையடுத்து உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, ரம்புக்கனை சம்பவம் தொடர்பில் கூடிய பாதுகாப்பு சபை குழு கூட்டத்துக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. அவர் அதில் பங்குபற்றவில்லை என்ற கருத்தை தெரிவித்தார்

அதற்குப் பதிலளிக்கும் போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அதன் போது குறுக்கிட்ட முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, உங்கள் வசமிருந்த பொலிஸ் துறையை நீங்கள் ஜனாதிபதியிடம் வழங்கி விட்டீர்கள் என்பதே உண்மையென பிரதமரைப்பார்த்து குறிப்பிட்டார்.




## முக்கிய காலப்பகுதியில் முஸ்லிம்கள்

இறைவிசுவாசிகளான முஸ்லிம்கள் ரமழான் மாதத்தின் முக்கியத்துவம் மிக்க காலப்பகுதியைத் தற்போது அடைந்துள்ளனர். அது தான் ரமழான் மாதத்தின் இறுதிப் பத்து நாட்களாகும். இந்த நாட்களில் உள்ள ஒற்றைப் படையான ஒரு இரவில் தான் லைலதுல் கத்ர் இரவு அமைந்திருக்கின்றது. அதாவது நன்மை, தீமைகளைப் பிரித்தறிவித்து நேர்வழிகாட்டக்கூடிய வசனங்களை உடைய அல்லாஹ்வின் அருள் மறையாம் அல் குர்ஆன் அருளப்பட்ட இரவாகும். அந்த இரவை அவன் ஆயிரம் மாதங்களை விடவும் மேலானதாக ஆக்கி வைத்திருக்கின்றான்.

அதன் காரணத்தினால் முஹம்மத் (ஸல்) அவர்கள் ரமழானின் இறுதிப் பத்து நாட்கள் காலப்பகுதியை அடைந்து கொண்டதும் அதிக உத்வேகத்துடனும் தீவிர ஆர்வத்துடனும் செயற்படக் கூடியவர்களாக இருந்துள்ளார்கள். இந்த நாட்களது இரவுகளைத் தாமும் உயிர்ப்பித்ததோடு தம் குடும்பத்தினரையும் தூக்கத்தில் இருந்து எழுப்பி இறை வணக்கங்களில் ஈடுபடச் செய்துள்ளார்கள். அத்தோடு தம் ஆடைகளை வரிந்துகட்டிக்கொண்டு செயற்பட்டுள்ளார்கள். அந்தளவுக்கு பெறுமதியானதும் முக்கியத்துவம் கொண்டதுதான் இந்த லைலதுல் கத்ர் இரவு. இதனை அறிந்து, தெரிந்து, உணர்ந்து கொள்பவர்கள் நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டல்களின் அடிப்படையில் இக்காலப்பகுதியில் செயற்பாடுகளை அமைத்துக் கொள்வதற்கு ஒரு போதும் பின்நிற்க மாட்டார்கள்.

அதனால் ஆயிரம் மாதங்களை விடவும் பெறுமதியான இரவின் மகத்துவத்தையும் சிறப்பையும் அடைந்து கொள்வதில் உச்சபட்ச கவனமும் முயற்சியும் எடுத்துக்கொள்வது அவசியம். அதுவும் உலகம் இருக்கும் வரைக்கும் உயிரோட்டத்துடன் திகழும் இறைவழிகாட்டலான அல் குர்ஆன் அருளப்பட்ட இரவாக இவ்விரவு விளங்குகிறது. ரமழானின் இக்காலப்பகுதியில் நபி (ஸல்) அவர்கள் எவ்வாறு செயற்பட்டார்கள் என்பதற்கான தெளிவான ஆதாரங்களை அன்னாரின் நபிமொழிகள் வழங்கிக் கொண்டிருக்கின்றன.

ஆகவே அவற்றின் அடிப்படையில் செயற்பாடுகளை அமைத்துக்கொண்டு இக்காலப்பகுதியைப் பயன்படுத்துவோம். அதன் ஊடாக லைலதுல் கத்ர் இரவை அடைந்து கொண்ட பாக்கியத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

மர்லின் மரிக்கார் ...

# பிரச்சினைக்கு தீர்வு காண சம்பிரதாய அரசியல் கொள்கையில் இருந்து கட்சிகள் விடுபட வேண்டும்



## முன்னாள் பிரதமர் ரணில் கோரிக்கை

தற்போதைய அரசியல் மற்றும் பொருளாதார பிரச்சினைகளுக்கு தீர்வு காண அனைத்து அரசியல் கட்சிகளும் பாரம்பரிய சம்பிரதாய அரசியல் கொள்கையிலிருந்து விடுபட வேண்டும்.

மக்கள் எதிர்க்கொண்டுள்ள பிரச்சினைக்கு வெகுவிரைவில் தீர்வு காணாவிடின் நாமும் காலி முகத்திடலில் உணவு உட்கொள்ள நேரிடுமென முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று வெள்ளிக்கிழமை உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சர்வதேச நாணய நிதியத்தின் பேச்சுவார்த்தை தொடர்பில் பாராளுமன்றத்துக்கு அறிவிக்க வேண்டும். நாணய நிதியத்தின் பேச்சுவார்த்தையில் சீனாவுடனான கடன் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. மேற்குலக நாடுகள் கடன் வழங்கும் போது கடனை மீளச் செலுத்த கால அவகாசம் வழங்கும் அல்லது கடன் நிவாரணம் வழங்கும்.

எதிர்வரும் மாதம் முதல் எரிபொருள், எரிவாயு பிரச்சினை தொடரும். இந்தப் பிரச்சினை குறித்து கவனம் செலுத்த வேண்டும். மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் தற்போதைய பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது. சம்பிரதாய அரசியல் முறைமையில் இருந்து விடுப்பட்டால் மாத்திரமே தீர்வு காண முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவிற்கு சாட்சியமளிக்கும் போது முஸ்லிம் பெண்கள் ஹிஜாப் அணிவதற்கு எதிர்ப்பு தெரிவித்தது தொடர்பில் என்னிடம் வினவப்பட்டது. நான் ஹிஜாப் நீக்கத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தேன். முஸ்லிம் பெண்கள் குண்டுத்தாக்குதலை மேற்கொள்ளவில்லையென்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

சிரேஷ்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் ரவி செனவிரத்ன தலைமையில் முக்கிய விடயங்களை அறிய முடிந்தது. அவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்வது முறையற்ற விடயமாகும். குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் சீனா, இந்தியா, பாகிஸ்தான் மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகள் அறிக்கை சமர்ப்பித்துள்ள நிலையில் அந்த அறிக்கைகளை ஆராயுமாறும் அவற்றை சபையில் சமர்ப்பிக்குமாறும் அவர் கோரினார்.

# பிரான்ஸ் மாநகர சபையில் யாழ். மாநகர சபை முதல்வர்

## சபை நிர்வாக அனுபவங்கள் பகிர்வு

யாழ். மாநகர சபை முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன், நல்லூர் பிரதேச சபை தவிசாளர் பத்மநாதன் மயூரன் மற்றும் யாழ். மாநகர சபை உறுப்பினர் வரதராஜன் பார்த்தீபன் ஆகியோர் பிரான்ஸிலுள்ள Aubervillers

06



வாய்மூல விடைகளை எதிர்பார்த்து சமர்ப்பிக்கும்

# வினாக்களை ஒழுங்கு பத்திரத்தில் உள்ளடக்குவதில் புதிய நடைமுறை



## சபாநாயகர் அறிவிப்பு

பாராளுமன்ற உறுப்பினர்கள் வாய்மூல விடைகளை எதிர்பார்த்து சமர்ப்பிக்கும் வினாக்களை ஒழுங்குப்பத்திரத்தில் உள்ளடக்குவதில் புதிய நடைமுறை பின்பற்றப்படுவதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன நேற்று (22) அறிவித்தார்.

பின்வரிசை உறுப்பினர்கள் வாய்மூல விடைகளை எதிர்பார்த்து சமர்ப்பிக்கும் வினாக்கள், பாராளுமன்றத்தின் ஒழுங்கு பத்திரத்தில் உள்ளடக்கப்படும்போது தற்போது பின்பற்றப்படுகின்ற முறை காரணமாக பாராளுமன்ற அமர்வுகள் நடத்தப்படுகின்ற அனைத்து நாட்களிலும் ஒருசில பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மட்டுமே

06

# உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்; சந்தேகங்களை தீர்க்க அரசு தயார்

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பிலான விசாரணை நடவடிக்கைகள் தொடர்பில் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகைக்கோ அல்லது அருட்தந்தையர்களுக்கோ சந்தேகங்கள், நம்பிக்கையீனங்கள் அல்லது சிக்கல்கள் காணப்படுமானால் அதனை தெளிவுபடுத்துவதற்கு அரசாங்கம் தயார் என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.



அவ்வாறு அவர்கள் கோரும் பட்சத்தில் எத்தகைய சந்தர்ப்பத்திலும் நான் எனது அதிகாரிகள் சகிதம் சென்று அவர்களின் சந்தேகங்களை தீர்த்து வைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க முடியும் என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் கடந்த இரு தினங்கள் நடைபெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பான விவாதத்திற்கு பதிலளிக்கும் வகையிலேயே அமைச்சர் நேற்று சபையில் இவ்வாறு தெரிவித்தார் .

மேற்படி தாக்குதல் சம்பவம் மலேசியாவில்

06

# மாத்தறை, கொஸ்கொட துப்பாக்கி சூட்டில் இளைஞர் ஒருவர் பலி

மாத்தறை கொஸ்கொட பகுதியில் நேற்று (22) இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த இளைஞனின் சடலம் தெல்கஹ பிரதேசத்தில் காட்டுப்பகுதியொன்றிலிருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளது.

அஹுங்கல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயதான இளைஞர் ஒருவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தனிப்பட்ட பகை காரணமாக துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டிருக்கலாமென சந்தேகம் வெளியிட்டுள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# பாடநூல்கள் அச்சிடும் பணிகள் யாவும் பூர்த்தி

## அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவிப்பு

பாடசாலைகளுக்குத் தேவையான பாடப் புத்தகங்களை அச்சிடும் பணி தற்போது பூரணமடைந்துள்ளதாக அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளார்.

பாடநூல்களை பாடசாலைகளுக்கு பகிர்ந்தளிக்கும் வேலைத்திட்டமும் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அடுத்த மாதம் நடுப்பகுதியின் போது மின்சார நெருக்கடியை இயலுமான அளவு தீர்க்க முடியுமென்றும் அமைச்சர் ரமேஷ் பத்திரன நம்பிக்கை தெரிவித்தார்.

நேற்று முன்தினம் பாராளுமன்ற அமர்வின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள கல்விப் பொதுத் தராதர பத்திர சாதாரண பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் மின்சார நெருக்கடியினால் பாதிப்படைவார்கள் என்று எதிர்க்கட்சி பாராளுமன்றத்தில் சுட்டிக்காட்டியது.

இதற்கு பதிலளித்த அமைச்சர் அடுத்த மாதத்தை அண்மிக்கும் போது தினமும் இரண்டு மணி நேரம் மாத்திரம் மின் துண்டிப்பு இடம் பெறலாமென்றும் கூறினார்.

# அரசாங்கத்தை கடுமையாக விமர்சித்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் உரை

## சபை 10 நிமிடங்களுக்கு ஒத்திவைப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

சபாநாயகரின் அறிவுறுத்தல்களையும் பொருட்படுத்தாது அரசை கடுமையாக விமர்சித்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று சபையில் ஆற்றிய உரையினால் சபையில் கூச்சல் குழப்பம் ஏற்பட்டதுடன் நிலைமையை கட்டுப்படுத்த சபையை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன 10 நிமிடங்களுக்கு சபை நடவடிக்கைகளை ஒத்தி வைத்தார்.



பாராளுமன்றம் நேற்றுக் காலை 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவின் தலைமையில் கூடியது. வழமையான நடவடிக்கைகளுக்குப் பின்னர் விசேட கூட்டொன்றை முன்வைத்து எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச சபையில் உரையாற்றினார். அதன் போது அவர் அரசாங்கத்தை கடுமையாக விமர்சித்தும் பல கேள்விகளை எழுப்பியும் கருத்துக்களை முன்வைத்தார்.

அதன் போது குறுக்கிட்ட சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, அன்றாட சபை நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கோரினார். அத்துடன் பாராளுமனறத்தின் செயற்பாடுகளுக்கு இடையூறு விளைவித்து சபையை கேலிக்குள்ளாக்க வேண்டாம் என்றும் எதிர்க்கட்சித் தலைவரிடம் அவர் கேட்டுக் கொண்டார்.

சபாநாயகரின் அறிவுறுத்தல்களை பொருட்படுத்தாது எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தொடர்ந்தும் அரசாங்கத்தை விமர்சித்து உரையாற்றிக் கொண்டிருந்தமையால் அரச தரப்பு எம்.பிக்கள் எழுந்து நின்று கூச்சலிட்டு தமது எதிர்ப்பினை வெளியிட்டனர்.

அதனையடுத்து எதிர்க்கட்சி உறுப்பினர்களும் அரசாங்க தரப்பினருக்கு எதிர்ப்பு தெரிவித்து கூச்சலிட்டனர்.

அதன்போது சபை நடவடிக்கைகளை இயல்பாக முன்னெடுத்துச் செல்வதற்கு எதிர்க்கட்சித் தலைவர் ஒத்துழைப்பு வழங்காவிட்டால் சபையை ஒத்திவைக்க நேரிடுமென சபாநாயகர் பலமுறை அறிவுறுத்திய போதும்

06

# அனைவரும் ஒன்றாக வாழக்கூடிய அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டும்



## அதாவுல்லா எம்.பி

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்)**

இன,மத பேதமின்றி அனைவரும் ஒன்றாக வாழும் வகையிலான புதிய அரசியலமைப்பு ஒன்று உருவாக்க வேண்டும் என தேசிய காங்கிரஸ் தலைவர் ஏ.எல்.எம்.அதாவுல்லா எம்.பி தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர், வரலாற்றில் என்றுமில்லாதவாறு பொருளாதார நெருக்கடியும் வறுமையும் ஏற்பட்டுள்ளது. வருங்கால தலைவர்கள் வீதியில் இருக்கிறார்கள். முதலில் இனவாதம் ஒழிக்கப்பட்ட வேண்டும் அனைத்து மக்களும் புலம்புகின்றனர்.

இன,மத பேதமின்றி அனைவரும் ஒன்றாக வாழும் யாப்பை உருவாக்க வேண்டும்.

ஜே.ஆர் கொண்டு வந்த யாப்பு பற்றியும் 18,20,21 ஆம் திருத்தம் பற்றி பேசுகிறோம். அனைவரையும் வாழ வைக்கும் யாப்பை பற்றி நாம் சிந்திக்கவில்லை.

06

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 238.54 | 249.41 |
| கனடியன் டொலர் | 256.80 | 267.07 |
| யூரோ | 340.83 | 352.42 |
| ஜப்பான் யென் | 2.5659 | 2.6696 |
| சிங்கப்பூர் டொலர் | 239.52 | 248.06 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 423.68 | 438.67 |
| சுவிஸ் பிராங்க் | 344.01 | 357.45 |
| அமெரிக்க டொலர் | 322.72 | 334.99 |


| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரைன் டினார் | 831.93 | கட்டார் ரியால் | 85.92 |
| குவைத் டினார் | 1,028.76 | சவூதி ரியால் | 83.64 |
| ஓமான் ரியால் | 814.75 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 85.39 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் சித்திரை மாதம் 10ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ரமழான் பிறை 21

## குறள் தரும் சிந்தனை



மடியை மடியா ஒழுகல் குடியைக்
குடியாக வேண்டு பவர்

குலம் சிறக்க வேண்டுமானால், சோம்பலை ஒழித்து, ஊக்கத்துடன் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

# போலியான தோற்றப்பாட்டை காண்பிக்கும் பொறுப்பற்ற செயல்!

ஊடகத்துறை கலாசாரம் இப்போது அதன் விழுமிய எல்லையைத் தாண்டி தறிகெட்டுச் சென்று கொண்டிருக்கின்றது. பழம்பெரும் ஊடகங்கள் வரம்பெல்லை மீறாமல் அவற்றின் தடத்தின் வழியே சென்று கொண்டிருக்கையில், புதிதுபுதிதாக முளைத்துள்ள ஊடகங்களோ விழுமிய வரம்பெல்லை கடந்து தான்தோன்றித்தனமாக செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

உலகெங்கும் தற்போது இவ்வாறுதான் ஊடகக் கலாசாரம் தொடருகின்றது. அச்சு ஊடகங்களான பத்திரிகைகளை பெரிதாக குற்றம் சொல்வதற்கில்லை. அவற்றில் பெரும்பாலானவை பத்திரிகை தர்மத்தை ஓரளவு கடைப்பிடித்தபடிதான் பயணித்துக் கொண்டிருக்கின்றன. ஆனால் இலத்திரனியல் ஊடகங்கள் பலவற்றிடம் அவ்வாறான ஊடகப்பண்பைக் காண முடியாதிருக்கின்றது.

இவற்றில் சில தொலைக்காட்சிகளையும், பெரும்பாலான இணையத்தளங்களையும் குறிப்பிட்டுக் கூற முடியும். எமது நாட்டின் சில தொலைக்காட்சிகள் எவ்வேளையிலும் பிரதிகூலமான செய்திகளையும், காட்சிகளையுமே ஒளிபரப்பிக் கொண்டிருக்கின்றன. அவற்றில் கூடுதலானவை அரசாங்கத்துக்கு பாதகமான செய்திகளாக அமைந்துள்ளன.

நாட்டின் பொருளாதார நெருக்கடியை மையப்படுத்தியதாக அத்தகவல்கள் உள்ளன. மக்களின் சிரமங்களை மிகைப்படுத்தியதாக அவை அமைகின்றன. நாடு மிக மோசமான நெருக்கடிக்குள் உள்ளதாக திரிபுபடுத்தி செய்திகளை அவை ஒளிபரப்பிக் கொண்டிருக்கின்றன. மக்கள் மத்தியில் அச்சத்தையும், குழப்பத்தையும் ஏற்படுத்தும் விதத்தில் அச்செய்திகள் அமைந்திருக்கின்றன.

மறுபுறத்தில் இணையத்தளங்களின் அபத்தமான காரியங்களை இங்கே குறிப்பிடுதல் வேண்டும். ஏராளமான இணையத்தளங்கள் ஆங்காங்கே முளைத்துவிட்டன. அவற்றின் ஊடகக் கலாசாரம் மிகவும் அருவருப்பாகவே உள்ளது. அவை வெளியிடுகின்ற பெரும்பாலான தகவல்களுக்கு ஆதாரங்கள் எதுவும் கிடையாது. பரபரப்பை ஏற்படுத்த வேண்டுமென்பதிலேயே அவை குறியாக நிற்கின்றன.

பக்கச்சார்பான முறையில் செய்திகளையும் தகவல்களையும் வெளியிடுவதன் மூலம் மக்களை திசை திருப்புவதற்கு அவை முற்படுகின்றன. அதுமாத்திரமன்றி ஏதாவதொரு அரசியல் கட்சியைச் சார்ந்த வகையிலேயே பெருமளவான இணையத்தளங்கள் செயற்பட்டு வருவதைக் காண முடிகின்றது.

சமீப நாட்களாக பத்திரிகைகள் சிலவற்றிலும், தமிழ் இணையத்தளங்களிலும் விசேடமான செய்தியொன்று அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு அடிக்கடி வெளியிடப்பட்டு வருவதைக் காண முடிகின்றது. அதாவது இலங்கையில் பெரும் உணவுப் பஞ்சம் நிலவி வருவதால் நாட்டின் வடக்கிலிருந்து தமிழர்கள் படகுகள் மூலம் தமிழ்நாட்டுக்கு இடம்பெயர்ந்து வருவதாக செய்திகள் வெளியிடப்படுகின்றன.

இச்செய்தியின் உண்மைத் தன்மை குறித்து உறுதிப்படுத்தப்படாத போதிலும், அதற்கு அதிக முக்கியத்துவம் அளித்து இணையத்தளங்கள் சிலவற்றிலும், ஓரிரு பத்திரிகைகளிலும் அடிக்கடி செய்திகள் வெளியாகின்றன. அதேசயம் தமிழ்நாட்டின் ஊடகங்களும் இச்செய்திக்கு முக்கியத்துவம் அளித்து வருவதைக் காண முடிகின்றது. அச்செய்திகளைப் பார்க்கின்ற போது இலங்கையின் வடபகுதியில் இருந்து தமிழ் மக்கள் வகைதொகையாக தமிழ்நாட்டுக்குப் படையெடுக்கத் தொடங்கியதைப் போன்ற மாயத்தோற்றம் காண்பிக்கப்படுகின்றது.

இந்த விடயத்தைப் பொறுத்தவரை சில விடயங்களை இவ்விடத்தில் குறிப்பிட வேண்டிய தேவை உள்ளது. இலங்கையின் வடக்கில் இருந்து தமிழர்கள் சட்டவிரோதமான முறையில் தமிழ்நாட்டுக்கு படகுகளில் செல்வதும், அங்கிருந்து திரும்புவதும் காலம் காலமாக நடந்து கொண்டுதான் இருக்கின்றது. 1983 இனவன்செயலுக்குப் பின்னர் இந்த இடம்பெயர்வு சாதாரணமாக இடம்பெற்று வருகின்றது. அக்காலத்தில் யுத்தசூழலுக்கு அஞ்சி தமிழகத்துக்கு இலங்கைத் தமிழர்கள் படையெடுக்கத் தொடங்கியதில் இருந்து இந்த இடம்பெயர்வு நடந்து வருகின்றது.

யுத்தம் ஓய்ந்த பின்னர் இலங்கை அகதிகளில் சிலர் படகுகளில் தமிழகத்தில் இருந்து தாயகம் திரும்பியதுமுண்டு. அதன் பின்னர் அவர்களில் சிலர் இலங்கையில் தொழில்வாய்ப்புகள் கிடைக்காத காரணத்தால் மீண்டும் தமிழகத்துக்கு படகில் சென்றதாக தகவல்கள் வெளிவந்தன. இவ்வாறான சம்பவங்கள் அருகருகே அமைந்துள்ள இரு அயல்நாடுகளுக்கிடையில் அவ்வப்போது சாதாரணமாக இடம்பெறுகின்ற சம்பவங்களாகும்.

ஏற்கனவே தமிழகத்தில் அகதிகளாக நீண்ட காலம் வாழ்ந்து விட்டு இலங்கை திரும்பியிருந்தவர்கள், வேலைவாய்ப்புக் கருதியும் அங்கு சென்றிருப்பதற்கு இடமுண்டு. பதினாறு பேர் மாத்திரம் தமிழகத்துக்கு சென்றுள்ள சம்பவத்தை அடிப்படையாக வைத்துக் கொண்டு இலங்கையில் உணவுப் பஞ்சம் நிலவுவதாக போலியான தோற்றப்பாட்டை விதைப்பதற்கு தமிழகத்தின் சில சக்திகள் முனைவதும், இங்குள்ள சில ஊடகங்கள் அதற்கு முன்னுரிமை கொடுப்பதும் முறையல்ல.

தமிழகத்தின் சில அரசியல் சக்திகளின் நிகழ்ச்சித் திட்டங்களுக்கேற்ப இங்குள்ள சில ஊடகங்கள் செயற்படுவது தவறாகும். எமது தேசம் மீண்டும் சுமுகநிலைமைக்குத் திரும்ப வேண்டுமென்பதே நம் அனைவரினதும் விருப்பாக அமைய வேண்டும் அதற்கேற்றவாறே இணையத்தளங்கள் செயற்படுவது பொருத்தம்.

editor.tkn@lakehouse.lk

# மலையக மக்கள் பதினைந்து இலட்சம் பேரையும் பிரதிநிதித்துவம் செய்யும் பொறுப்பில் உள்ளேன்

## கடமைகளைப் பொறுப்பேற்ற பின்னர் வீடமைப்பு, சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் கருத்து







மலையக மக்கள் பதினைந்து இலட்சம் பேரையும், ஆளும் கட்சி சார்பில் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில், தான் மட்டுமே இருந்து வருவதாக தோட்ட வீடமைப்பு, சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார், மேற்படி அமைச்சில், இந்து சமய ஆகம விதிப்படி பூஜைகளும், வழிபாடுகளும் இடம்பெற்றதை தொடர்ந்து, அமைச்சுப் பொறுப்புக்களை பொறுப்பேற்றார். இதற்கான அனைத்து செயற்பாடுகளையும், அமைச்சின் பதில் செயலாளர் என். தீப்தி குணவர்தன மேற்கொண்டிருந்தார்.

இந்நிகழ்வில், மேற்படி அமைச்சின் உயர் அதிகாரிகளும், உத்தியோகத்தர்களும் பதுளை மற்றும் நுவரெலியா மாவட்ட முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

அமைச்சுப் பொறுப்புகளையேற்ற இராஜாங்க அமைச்சர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் "என் மீது கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. மக்கள் என்னை வசைபாடுகின்றனர். ஆனாலும், காலப்போக்கில் எனது நிலைப்பாடு மிக மிக சரியானவையென்று அவர்கள் புரிந்து கொண்டு, என்னை பாராட்டுவார்கள்.

பதினைந்து இலட்சம் மலையக மக்களின் அபிலாசைகளை, தேவைகளை, விருப்புகளை இயன்ற வரையில் நிறைவேற்றுவதற்கு, ஆக்கபூர்வ நடவடிக்கைகளை மேற்கொள்வேன். முழு மலையகத்தையும் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, மலையக மக்களுக்கான அமைச்சுக்களை என்னிடத்தில் ஒப்படைத்துள்ளார். பெரும் நம்பிக்கையின் மத்தியில் அமைச்சுப் பொறுப்புக்களை வழங்கியுள்ள ஜனாதிபதிக்கு, நான் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

நாடு இன்று பெரும் நெருக்கடி நிலையினை எதிர்நோக்கியிருக்கின்றது. இன்று பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இளையவர்கள் மற்றும் பெரியவர்கள் என சகலரும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுப்பட்டுள்ளனர். ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்வதற்கு அவர்களுக்கு உரிமையுண்டு. அதனை நான் மதிக்கின்றேன். ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்களென்று ஒருபுறம் இருக்க, நாட்டை வழிநடத்திச் செல்ல வேண்டிய பாரிய பொறுப்புக்களும் இருந்து வரவே செய்கின்றன.

அதற்கு அமைவாகவே, தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சை, ஜனாதிபதி எனக்கு வழங்கியிருக்கின்றார். இவ்வமைச்சு, எனக்கு புதினானதொன்று அல்ல. 1995 ஆம் ஆண்டு காலப்பகுதியில் எனது தலைவரான அமரர் சந்திரசேகரன் கண்ட கனவை நனவாக்கும் பொருட்டு அவரால் ஆரம்பித்து வைக்கப்பட்டதே இந்த தோட்ட வீடமைப்பு அமைச்சாகும். ஆகையினால், அந்த அமைச்சில் கடமையாற்றியவன் என்ற வகையில், இந்த அமைச்சு தொடர்பான பூரண அனுபவங்கள் எனக்கு இருக்கவே செய்கின்றன. ஆகையினால், இந்த அமைச்சைக் கொண்டு நடத்துவதென்பது எனக்கு இலகுவானதாகும்.

இந்திய அரசின் உதவிகளையும் பெற்று, எனக்கு வழங்கப்பட்ட அமைச்சுக்களின் கடப்பாடுகளை வெற்றிகரமாக முன்னெடுக்க முடியுமென நான் எதிர்பார்க்கின்றேன். எனது எதிர்ப்பார்ப்புகளுக்கு, அமைச்சின் உயர் அதிகாரிகள் உள்ளிட்ட உத்தியோகத்தர்கள் அனைவரும் எனக்கு பூரண ஒத்துழைப்புக்களையும், பங்களிப்புக்களையும் வழங்கவே செய்வர்" எனத் தெரிவித்தார்.

எம்.செல்வராஜா...
(பதுளை தினகரன் விசேட நிருபர்)

# காரைதீவு விபுலானந்த முன்பள்ளி பாடசாலையின் வருடாந்த விபுல விண்மணிகளின் விடுகை விழா





காரைதீவு விபுலானந்த மொன்டிசேரி முன்பள்ளிப் பாடசாலையின் 24 ஆவது வருடாந்த விபுல விண்மணிகளின் விடுகை விழா பாடசாலையின் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா தலைமையில் இ.கி.மி.பெண்கள் பாடசாலையில் அண்மையில் நடைபெற்றது.

அன்புகூர் அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் கலந்து சிறப்பித்தார்.

ஆளுமைசார் அதிதிகளாக காரைதீவு பிரதேசசபையின் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், பிரதேசசெயலாளர் சிவ.ஜெகராஜன், பொலநறுவை மாவட்ட செயலக பிரதம கணக்காளர் சிவசுந்தரம் சசிகரன்இ சிரேஷ்ட விவசாய போதனாசிரியர் இராஜநாயகம் விஜயராகவன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

மொன்டிசோரியில் பயின்று தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற ஆ.கபிஷேக், ர.ஷஸ்விகா, ப.கிருத்திகன், ஜெ. ஆரபி, ச.குகேஷ், அ.அர்ச்சிகாயினி, ஹ.சிமேஹரினி, சு.மேனுஜா, பு.ஜஷ்விகள், ரகு.தசாப்தனா, ச.மேனிஷா, கி.கவின்யா, ஆ.கேதுஷன், சு.தரிஷ்ணவி, சி.நிதஸ்கா, ரு.வர்ஜனா, ச.பேமரெட்சன் ஆகிய 17 புலமையாளர்கள் தங்கப்பதக்கம், நினைவுச்சின்னம் வழங்கி பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

விடுகை பெறும் மாணவர்களான பி.மதுபாஷினி, மோ.அபிஸ்னா, ர.மினிஸ்கா, வி.தேஜஸ்விகா, ஜெ.வேணுக்ஷா, பி.கரேஷ்னா, கி.ஸங்கீர்த்தனா, கு.கிருத்தியன், ந.டினுக்ஷன், கீ.அகீஷ் ஆகியோர் பரிசுகள், சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

சிறுவர் சிறுமியரின் கண்கவர் கலைநிகழ்ச்சிகள் மேடையேறின. பெற்றோர் சார்பில் கேதீஸ், ரஜி தலைமையிலான குழுவினர் சிறப்பாகச் செயற்பட்டனர். ஆசிரியைகளான ஜெயநிலாந்தினி, ரம்யா ஆகியோர் பாராட்டப்பட்டனர்.

வி.ரி.சகாதேவராஜா...
(காரைதீவு குறூப் நிருபர்)








# பத்திரிகைத்துறையில் பலருக்கும் ஆசானாக திகழ்ந்த 'தினமலர்' நாளிதழ் ஆசிரியர் பார்த்திபன் காலமானார்

## தமிழகத்தில் பத்திரிகையாளர் பலரை உருவாக்கிய பெருமைக்குரியவர்; பிரபலங்கள் பலரும் இரங்கல்



தமிழ்நாட்டில் பத்திரிகைத்துறையில் பலருக்கும் ஆசானாக திகழ்ந்த 'தினமலர்' நாளிதழ் ஆசிரியர் பார்த்திபன் உடல்நலக் குறைவால் காலமானார்.

இதையடுத்து அவரது உடல் தமிழ்நாடு திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள அவரது சொந்தக் கிராமமான பட்டிவீரன்பட்டியில் தகனம் செய்யப்பட்டது.

30 ஆண்டு காலத்திற்கும் மேலாக பத்திரிகைத்துறையில் பயணித்த அவரிடம் செய்திகளை தொகுப்பது தொடர்பாக பாலபாடம் கற்ற பலர், இன்று பல்வேறு ஊடக நிறுவனங்களில் உயர் பொறுப்புகளில் உள்ளனர்.

தினமலர் நாளிதழின் மதுரை, திருச்சி, வேலூர் உள்ளிட்ட அலுவலகங்களில் ஆசிரியராக பணியாற்றியவர் பார்த்திபன் மகாராஜன். செய்திகளை தொகுப்பதில் வார்த்தை ஜாலம் காட்டக் கூடிய திறமை மிக்கவர். அதேபோல் தனக்கு கீழ் உதவி ஆசியர்களாகவும், ஜூனியர் செய்தியாளர்களாகவும் பணியாற்றிய பலரை பட்டை தீட்டிய வைரம் போல் ஜொலிக்க வைப்பதிலும் அதிக கவனம் செலுத்தியவர். இதனால் தான் இவரிடம் பாலபாடம் கற்ற பலர், இன்று முன்னணி ஊடகங்கள் பலவற்றில் நல்ல பொறுப்புகளில் உள்ளனர்.

இதனிடையே அண்மைக் காலமாக பார்த்திபன் மகாராஜனுக்கு ஏற்பட்ட உடல்நலக் குறைவு காரணமாக மதுரை அப்போலோ மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். இந்நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்றுமுன் தினம் அவர் காலமானதை அடுத்து அவரது மறைவுக்கு முதல்வர் ஸ்டாலின், எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி மற்றும் பா.ஜ.க உள்ளிட்ட அரசியல் கட்சித் தலைவர்கள் பலர் இரங்கலும் அவரது குடும்பத்தினருக்கு ஆறுதலும் தெரிவித்துள்ளனர்.

மறைந்த மூத்த பத்திரிகையாளர் பார்த்திபன் மகாராஜனுக்கு ரேவதி என்ற மனைவியும், காவ்யா என்ற மகளும் உள்ளனர். இவர்களுக்கு தமிழக அரசு சார்பில் உரிய நிதி உதவி வழங்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

பார்த்திபனுக்கு 58 வயது மட்டுமே ஆகின்ற நிலையில் அவரது திடீர் மறைவு அவரை நெருங்கி அறிந்த பத்திரிகையாளர்களுக்கு அதிர்ச்சியையும் சோகத்தையும் அளித்துள்ளது.

அவரது மறைவு குறித்து 'ஒன் இந்தியா' குழுமத்தின் தலைமை ஆசிரியர் ஏ.கே.கான் கூறுகையில், ''பார்த்திபன் சார் என்னைப் போன்ற எத்தனையோ பத்திரிகையாளர்களுக்கு முதல் ஆசானாக விளங்கியவர். அவர் மதுரை பல்கலைக்கழகத்தில் நடத்திய ஊடகத்துறை வகுப்புகள், வகுப்புகளைத் தாண்டி அவருடன் நடந்த உரையாடல்கள், படித்துக் கொண்டிருந்த போதே தினமலரில் 'இன்டர்ன்ஷிப்' செய்ய வாய்ப்பு தந்தது, படிப்பை முடித்தவுடன் அவருடனேயே பணியாற்றவும் ஏற்படுத்தித் தந்த வாய்ப்பு என பின்னோக்கிய நினைவுகள் கலங்கடிக்கின்றன. நான் பின்னர் தினமணிக்கும் ஒன் இந்தியாவுக்கும் இடம் மாறினாலும் பார்த்திபன் சார் என்ற ஒற்றை ஆளுமையின் தாக்கம் எங்களிடம் மறைந்ததே இல்லை. மறையப் போவதும் இல்லை.

என்னைப் போல பலர் அவரிடம் பெற்ற பயிற்சியே தினமணியின் முன்னாள் ஆசிரியர் மறைந்த ஆர்.எம்.டி. சம்பந்தம் போன்ற ஜாம்பவானிடமும் தாக்குப் பிடித்து பணியாற்ற உதவியது. பார்த்திபன் சார் என்றால் நிதானம், நேர்மை. ஆர்.எம்.டி என்றால் வேகம், நேர்மை. இருவரும் இன்று இல்லை. அவர்கள் இல்லாத இந்த தனிமையான பயணம் ரொம்பவே வலிக்கிறது'' என்று தெரிவித்தார்.

தினமலர் நாளிதழில் பார்த்திபன் மகாராஜன் எழுதும் நான்காம் பக்கம் கட்டுரை மிகவும் பிரபலமானது என்பது குறிப்பிடத்தக்கது. பார்த்திபனின் எழுத்துக்களை குறிப்பிட்டு அவரை அறியாதவர்களும் கூட அவரது குடும்பத்தினருக்கு இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

# கால் நூற்றாண்டு காலம் கடந்தும் கனவுகளுடன் இலங்கை அகதிகள்



இலங்கையில் நிலவிய உள்நாட்டு யுத்தம் காரணமாக புலம்பெயர்ந்து தமிழ்நாட்டில் அமைந்திருக்கும் மறுவாழ்வு முகாம்களில் வசித்து வரும் இலங்கைத் தமிழர்கள், தங்களுக்கு இந்திய குடியுரிமை வழங்க வேண்டும் என்று பல்வேறு கவன ஈர்ப்பு நிகழ்வுகளை நடத்தி வருகின்றனர்.

அதன் ஒரு அங்கமாக இந்தியாவின் 73 வது குடியரசு தினத்தை முன்னிட்டு ‘முகாம் தன்னார்வலர்கள் இணைந்த விழிப்புணர்வு குழு’ என்ற குழுவினர் மூலம் முகாம்களுக்கு இடையேயான மாநில அளவிலான கலை இலக்கியப் போட்டிகள் நடத்தப்பட்டன. இப்போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு தமிழக அரசின் சிறுபான்மையினர் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சரான செஞ்சி மஸ்தான் அவர்கள் தலைமையில் பரிசளிப்பு மற்றும் பாராட்டு சான்றிதழ் வழங்கும் வைபவம் சென்னையில் நடைபெற்றது.

இதில் சிறுகதைப் பிரிவில் முதல் பரிசினை பெற்ற தாப்பாத்தி முகாமைச் சேர்ந்த ரிசானா என்பவர் எழுதியிருந்த சிறுகதையின் சுருக்கம் பின்வருமாறு அமைந்திருந்தது.

**கால் நூற்றாண்டாகியும் முகாம்...**

நகர வாழ்க்கையிலிருந்து தள்ளி 400 குடும்பங்கள் கொண்ட இலங்கைத் தமிழர்கள் வாழும் ஊர் அது. யாரும் ஊர் என்று அழைத்து பழக்கமில்லை முகாம் என்றால்தான் அனைவருக்கும் எளிதில் புரிந்து கொள்ள முடியும். அதிகாலைப் பொழுதில் 5 மணிக்கு முகாமின் பிள்ளையார் கோயிலில் ஒலிக்கும் ஓன்பதுகோளும் எனத் தொடங்கும் பாடல்தான் அனைவருக்குமான பொது அலாரம்.

பத்துக்கு பத்து வீட்டிற்குள் தொடங்குகிறது நிலவனின் அன்றைய வழக்கமான வாழ்க்கை. தெருக்குழாயில் தண்ணீர் பிடித்து முடித்து குளிக்க தயாராகிக் கொண்டிருந்தான் நிலவன்.

காய்கறி வெட்டிக் கொண்டிருந்த நிலவனின் மனைவி மதி “ஏங்க ஞாபகம் இருக்கா 30 ஆம் திகதி மகிழினிக்கு 4வது பிறந்தநாள்” என்றாள்.

துண்டை தோளில் போட்டபடி “பிள்ளையோட பிறந்தநாளை மறப்பேனா” என்று கூறிவிட்டு சோப்பை தேடிக் கொண்டிருந்தான் நிலவன்.

“சோப்பு தேடுறீங்களா அந்த ஜன்னல் ஓரம் இருக்குது பாருங்க” என்றாள் மதி. ஜன்னல் விளிம்பில் தேய்ந்திருந்த சோப்பு நிலவனுக்கு மாதக்கடைசியை ஞாபகப்படுத்துவதாக இருந்தது. படகு போல் வளைந்திருந்த சோப்பைப் பார்த்ததும் “மதி இங்க பாருங்க உங்கட அம்மா அப்பா இலங்கையிலிருந்து வந்த ஃபோட்” என்றான் நிலவன்.

“அது எங்க அம்மா அப்பா வந்த ஃபோட் இல்ல. எங்க மாமா மாமி வந்த ஃபோட். பத்திரமா குளிங்க” என்று சமையலறையிலிருந்து பதில் குரல் கொடுத்தாள் மதி.

மதியின் பதிலைக் கேட்டுக் கொண்டே கொல்லைக் கதவை சாத்தினான் நிலவன். கொல்லைக் கதவை சாத்தியவுடன் நிலவனின் மனக்கதவு திறந்தது. மகளுக்கு பிறந்த நாளுக்கு என்ன கொடுக்கலாம்? ஏதேதோ நினைவில் வந்தது. பரிசு பொருட்கள் நினைவில் வரும் போதே அதன் பட்ஜெட்டும் மனத்திரையில் வந்தது. சாத்தியமில்லாதவைகளை தவிர்த்து கொண்டே வந்தான். இறுதியில் ஒன்றில் நின்றான். கடந்த வாரம் தனது வயதொத்த யாழினி வீட்டிலிருப்பது போன்ற கரடி பொம்மை வேண்டுமென்று கேட்டாளே. விலை 2000 ரூபாய் என்று யாழினியின் அப்பா சொன்னதும் நிலவனுக்கு ஞாபகம் வந்தது.

குளித்து விட்டு வந்து துவட்டிக் கொண்டிருந்தவனிடம் “பிறந்தநாளுக்கு மகளுக்கு என்ன வாங்கிக்கொடுக்கப் போறீங்க?” என்றாள் மதி. தலையை சிலுப்பிக் கொண்டே கரகர குரலில் “கரடி பொம்மை” என்றான்.

“சரிதான் துரை உடம்புக்கு முடியாம இருந்துட்டு ஒருவாரத்திற்கு பிறகு இன்றைக்குதான் வேலைக்கு போறீங்க. அந்த கரடி பொம்மை 2000 ரூபாய்னு யாழினி அப்பா சொன்னது ஞாபகம் இருக்கா?” என்று கேட்டாள் மதி.

“ஞாபகம் இருக்கு மதி. இன்றைக்கு திகதி 24 தான் ஆகுது. வேலைக்குத்தான் போறேன். 29 ஆம் திகதி திரும்பி வரும்போது கரடி பொம்மையோடுதான் வருவேன்” என்றான் நிலவன்.

“வீட்டில் எந்த பொருளும் இல்லை காலையில குளிக்கும் போது சோப்பை பார்த்ததீங்கதானே□ சோப்பு மட்டும் இல்ல வீட்ல நிறைய பொருளுக்கும் அதுதான் நிலமை. நிறைய செலவிருக்கு விளையாடாதீங்க. வீட்டுச் செலவுக்கு வச்சிருந்த காசிலதான் பாதியைத்தான் உங்களுக்கு பஸ்சுக்கு தாரேன்” என்றாள் கொஞ்சம் கோபத்தோடு.

எப்பவுமா மதி இப்படி செலவு செய்யுறோம்? குழந்தைப் பருவத்தில் பிள்ளைகளை எதுக்கும் ஏங்க வைக்க கூடாது மதி. அகதியா வந்த புதிதில் நீயும் நானும் குழந்தை பருவத்தை எவ்வளவு ஏக்கத்தோடு கடந்திருப்போம்னு நினைச்சிபாரு. நான் சொல்றது உனக்கு புரியும்? என்று நிலவன் சொல்லி முடித்தபோது, மதியும் நிலவனோடு உடன்பட்டிருந்ததை அவளது அமைதி உணர்த்தியது.

“என்னமோ பாத்துக்குங்க வீட்டு செலவுகளும் நிறைய இருக்கு” என்று சொல்லிமுடித்து நிலவனின் கையில் சாப்பாட்டு தட்டை கொண்டு வந்து கொடுத்தாள் மதி. சாப்பிட்டு முடித்தவன் தூங்கிக் கொண்டிருந்த மகளை உச்சி முகர்ந்து கொஞ்சி விட்டு “போய்ட்டு வருகிறேன் பிள்ளையை கவனமா பாத்துக்கோ மதி” என்று கூறிவிட்டு வீட்டை விட்டு வெளியேறி நடந்தான் நிலவன்.



29 ஆம் திகதி வீட்டுக்கு திரும்புவதையும், கரடி பொம்மையை கண்ட மகளின் மகிழ்ச்சியையும் மனதிற்குள் நினைத்து மகிழ்ந்து கொண்டே நடந்தவன் பேருந்து நிறுத்தத்திற்கு வந்து சேர்ந்திருந்தான். நிலவன் வரவும் அவன் செல்ல வேண்டிய பேருந்து வரவும் சரியாக இருந்தது. பேருந்தில் ஏறி வேலைக்கு பயணமானான் நிலவன்.

வீட்டில் அப்போதுதான் சோம்பல் முறித்து அழுது எழுந்தாள் மகள் மகிழினி. மகிழினியின் அழுகை சத்தம் கேட்டு துணி மடித்துக் கொண்டிருந்த மதி எழுந்து ஓடி வந்தாள். “அச்சச்சோ செல்லம், ஏன் அழுறீங்க? பிள்ளைக்கு யாழினி பாப்பா வீட்ல இருக்கிற மாதிரி பெரிய கரடிபொம்மை வாங்கி வர அப்பா போயிருக்காங்க” என்று மதி சொல்ல மகிழினியின் அழுகை மெல்ல அடங்கியது. அழுகை அடங்கிய கையோடு மகிழினியை குளிப்பாடடுவதற்கு தயாரானாள் மதி.

“முகாம் மக்களுக்கு ஓர் அறிவிப்பு” என்று பொது ஒலிபெருக்கி அலறியது. நின்று அறிவிப்பை கவனித்தாள் மதி. வருகிற 26 ஆம் திகதி குடியரசு தினம் என்பதால் முக்கிய தலைவர்கள் தமிழகம் வரவிருக்கிறார்கள். ஆகவே முகாம் மக்கள் அனைவரும் 25,26,27 ஆகிய மூன்று தினங்கள் முகாமில் ஆஜரில் இருக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது” என்று அலறி அடங்கியது பொது ஒலிபெருக்கி.

ஓலிபெருக்கியின் அலறல் முடிந்து சிறு அமைதிக்குப்பின் தனது நைட்டி பாக்கெட்டிலிருந்த போனை எடுத்து அழுத்தினாள் மதி. பேருந்தில் பயணமாகிக் கொண்டிருந்த நிலவனின் பாக்கெட்டில் இருந்த போன் அலறியது. போனின் பச்சை பொத்தானை அழுத்தி “சொல்லு மதி” என்று கேட்டவனிடம் “என்னங்க நாளையிலிருந்து மூணு நாளைக்கு முகாமில் செக்கிங்காம். எல்லோரும் கண்டிப்பா இருக்கனும்னு சொல்றாங்க. அடுத்த ஸ்டாப்ல இறங்கி வீட்டுக்கு வந்திருங்க” என்று கூறிவிட்டு போனை அணைத்தாள் மதி.

நிலவன் பயணமாகிக் கொண்டிருந்த பேருந்தில் பாடல் ஒலிக்க ஆரம்பித்தது “தமிழா தமிழா நாளை நம் நாளே... தமிழா தமிழா நாடும் நம் நாடே..”

பெரும் ஏமாற்றத்தோடு அடுத்த நிறுத்தத்தில் இறங்கி சாலையின் எதிர்த்திசை நோக்கி நடந்தான் நிலவன்.

இன்னும் எத்தனை காலத்திற்குத்தான் சிறு கனவுகளை கூட இந்த முகாம் வாழ்க்கை சிதிலமாக்கப் போகிறது என்ற பெருமூச்சுடன் வெந்நீர் கலந்து வைத்திருந்த நீரை மகிழினியின் மேல் ஊற்றினாள் மதி.

“அம்மா எனக்கு சுடுது என்றாள் மழலை மொழியில் மகிழினி. எனக்கும் சுட்டது, உனக்கும் சுடுகிறது, நாளை உனது குழந்தைக்கும் சுடுமோ? இந்த முகாம் வாழ்க்கை” என்ற கேள்வியை தனக்குத்தானே மனதிற்குள் கேட்டுக் கொண்டவாறு கலந்து வைத்த நீரில் மீண்டும் தண்ணீர் கலந்து மகிழினியை குளிப்பாட்டி முடித்து கொல்லைக் கதவை சாத்தி வெளியே வருகையில் வீட்டு வாசலில் வந்து நின்றான் நிலவன்.

நிலவனைக் கண்டதும் “கரடி பொம்மை எங்கப்பா?” என்றாள் ஏக்கத்தோடு மகிழினி. பதில்கள் ஏதுமின்றி கால் நூற்றாண்டு முகாம் வாழ்க்கையில் கனவுகள் சிதைந்த சாட்சியாக நின்றிருந்தான் நிலவன். அழுகையை ஆரம்பித்திருந்தாள் மகிழினி. ஏமாற்றம் மகிழினிக்கு இன்னும் பழகவில்லை.

குழந்தையிடமிருந்து பொம்மையை பறித்துக் கொள்வதுபோல் அனைவரின் எதிர்காலத்தையும் பறித்து வைத்துக் கொள்கிறது கால் நூற்றாண்டு முகாம் வாழ்க்கை.

**(முதல் பரிசு பெற்ற சிறுகதை, எழுதியவர்: ரிசானா, தாப்பாத்தி முகாம்)**

**வாஸ் கூஞ்ஞ...**
*(தலைமன்னார் விஷேட நிருபர்)*

# அட்டாளைச்சேனை சுப்பர்சொனிக் விளையாட்டுக் கழகத்தின் முன்னாள் தலைவர் மர்ஹூம் அப்துல் பத்தாஹ் நினைவு நிகழ்வு

அட்டாளைச்சேனை சுப்பர்சொனிக் விளையாட்டுக் கழகத்தின் முன்னாள் தலைவரும், அட்டாளைச்சேனை தேசிய பாடசாலை பிரதி அதிபருமான மர்ஹூம் ஏ.எல்.அப்துல் பத்தாஹ் அவர்களுக்கான சமய நிகழ்வுகள் அட்டாளைச்சேனை தேசிய பாடசாலை கூட்ட மண்டபத்தில் நடைபெற்றன. சுப்பர்சொனிக் விளையாட்டுக் கழகத் தலைவர் எம்.ஐ.எம்.அஷ்ரஃப் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், முன்னாள் தலைவர் மர்ஹூம் அப்துல் பத்தாஹ் நினைவாக அல்குர்ஆன் தமாம் செய்யப்பட்டு, பிரார்த்தனையும் இடம்பெற்றது.

இந்நிகழ்வில், அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலக ஆசிரிய ஆலோசகர் (இஸ்லாம் பாடம்) மௌலவி என்.ரீ.நஸீர் பிரார்த்தனையை நிகழ்த்தினார். முன்னாள் அட்டாளைச்சேனை பிரதேச சபை உறுப்பினரும், சுப்பர்சொனிக் விளையாட்டுக் கழகத்தின் பிரதித் தலைவருமான ஐ.எல்.அப்துல் முனாப் மர்ஹூம் அப்துல் பத்தாஹ் நினைவுரையை ஆற்றினார்.

1984ம் ஆண்டு விளையாட்டுக் கழகமாகத் தோற்றம் பெற்று, அட்டாளைச்சேனை பிரதேசத்தில் விளையாட்டு, கல்வி, சமூகசேவை போன்ற துறைகளில் தன்னை முழுமையாக அர்ப்பணித்து வரும் அட்டாளைச்சேனை சுப்பர்சொனிக் விளையாட்டுக் கழகத்தின் வெற்றிப் பயணம் நீண்டது. சுப்பர்சொனிக் விளையாட்டுக் கழக ஆரம்பகர்த்தாக்கள் இன்று பல்வேறு துறைகளில் உயர்ந்து நிற்கின்றனர். இதற்கு தலைவர்கள், நிர்வாகிகளின்

சிறந்த வழிகாட்டுதல்களே பிரதான காரணம் எனலாம். அவர்களது நன்நோக்கம், முயற்சி வீண் போகாதவாறு கழகத்தின் பணிகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை கண்கூடு.

கடந்த 2013 ஆம் ஆண்டு சுப்பர்சொனிக் விளையாட்டுக் கழகத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட மர்ஹூம் அப்துல் பத்தாஹ், தொடர்ந்து சுமார் 08 வருடங்கள் தலைவராகக் கடமையாற்றி, கழகத்தின் வளர்ச்சிக்கு அரும்பணியாற்றினார். அவரது பதவிக் காலத்தில் கழகம் பல்வேறு துறைகளில் வளர்ச்சி கண்டது என்றால் அது மிகையாகாது.







சுப்பர்சொனிக் விளையாட்டுக் கழக வீரர்களின் விளையாட்டு விருத்தியிலும், ஒழுக்கத்திலும் அவர் நிறைவான பங்களிப்பு நல்கினார். பணம், பொருள், காலநேரத்தை அவர் அதிகம் செலவிட்டுள்ளார். அன்னாரின் மறுமை ஈடேற்றத்திற்காக நாங்கள் அதிகம் இறைவனைப் பிரார்த்திக்க வேண்டும். அதுவே நாங்கள் அன்னாருக்குச் செய்யும் கைமாறாகும் என பிரதித் தலைவர் அப்துல் முனாப் தனது உரையின் போது தெரிவித்தார்.

அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. அஹமட் ஸாபிர், அம்பாறை மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் எம்.ஐ.எம்.அமீரலி, அட்டாளைச் சேனை பிரதேச சபைச் செயலாளர் எம்.ஐ.எம். பாயிஸ், அட்டாளைச்சேனை தேசிய பாடசாலை அதிபர் எம்.ஏ.சி.ஹரீஸ், அட்டாளைச்சேனை பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் எம்.எச்.எம். அஸ்வத், மர்ஹூம் அப்துல் பத்தாஹ் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள், சுப்பர்சொனிக் விளையாட்டுக்கழக நிர்வாகிகள், விளையாட்டு வீரர்கள், கழக அங்கத்தினர்கள் ஆகியோர் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

**முகம்மட் றிஸான்...**
*(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)*

# சூரிய சக்தி மின்னுற்பத்தி உபகரணங்களை பாடசாலைகளில் நிறுவும் செயல் திட்டம்

உலகளாவிய காப்புறுதி வர்த்தக நாமமான அலியான்ஸ் லங்கா, நிலைபேற்றியல் கொண்ட பொருளாதாரங்கள் மற்றும் சமூகங்களைத் தோற்றுவித்து, வளர்ப்பதற்கு உதவும் நிறுவனத்தின் உலகளாவிய மற்றும் உள்ளூர் குறிக்கோளை உண்மையாக நிலைநாட்டும் வகையில் தனது 2 ஆவது பாரிய நிலைபேற்றியல் முயற்சியை மஹியங்கனை பிரதேசத்தில் வெற்றிகரமாக பூர்த்தி செய்து கையளிப்பது தொடர்பில் அறிவித்துள்ளது.

இந்தத் திட்டமானது, மஹியங்கனையிலுள்ள பிபிலை/மஹியங்கனை/சேனானிகம ஆரம்பப் பாடசாலையில் ஒளிமின்னழுத்த சூரிய மின் உற்பத்தித் தொகுதியை பொருத்துதல் மற்றும் தொழிற்படுத்தல் ஆகியவற்றை உள்ளடக்கியது. இந்தத் திட்டம் இப்போது பாடசாலை தனது தினசரி எரிசக்தித் தேவைகளை புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலத்திலிருந்து பெற முடியும் என்பதை உறுதிப்படுத்தும் அதே நேரத்தில், உற்பத்தி செய்யப்படும் தேவைக்கதிகமான மின்சாரத்தை தேசிய மின் விநியோகத்திற்கும் பங்களிக்கிறது.

அலியான்ஸ் லங்கா நிறுவனம் மஹியங்கனையில் தனது 2 ஆவது நிலைபேற்றியல் முயற்சியை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது

இத்திட்டம் பற்றி கலந்துரையாடிய அலியான்ஸ் லங்கா நிறுவனத்தின் தலைமை சந்தைப்படுத்தல் அதிகாரியான மங்கள பண்டார, “உள்ளேயும், வெளியேயும் எங்களின் அனைத்து முயற்சிகளிலும் நிலைபேற்றியலை உள்வாங்குவதற்கும் மேம்படுத்துவதற்கும் நாங்கள் அர்ப்பணிப்புடன் உள்ளோம். மஹியங்கனை நகரிலிருந்து சுமார் 15 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ள சேனானிகம ஆரம்பப் பாடசாலைக்கு இந்த புதிய சூரிய சக்தி மின்னுற்பத்தி தொகுதியை ஆரம்பித்து வைப்பதன் மூலம், அந்தப் பாடசாலை தற்போது புதுப்பிக்கத்தக்க மின்சக்தி மூலத்தை அனுபவிப்பது மட்டுமன்றி, புதிய சூரிய மின்னுற்பத்தித் தொகுதி மூலமாக தேவைக்கு அதிகமாக உற்பத்தி செய்யப்படுகின்ற மின்சாரத்தை தேசிய மின் விநியோக கட்டமைப்புக்கு வழங்கி அதற்கு உதவவும் முடியும்.

நிலைபேற்றியல் கொண்ட எரிசக்தி என்பது காலத்தின் முக்கிய தேவையாக இருப்பதால், படிம எரிபொருட்களிலிருந்து விலகி, புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை நோக்கிய உலகளாவிய மாற்றத்திற்கு உதவ நாம் முயல்வதால், எதிர்காலத்தில் இதுபோன்ற பல திட்டங்களுக்கு உதவுவதன் மூலம் எங்கள் நிறுவனப் பொறுப்பைத் தொடர்ந்து முன்னெடுத்துச் சென்று, நிறைவேற்ற விரும்புகிறோம்” என்று குறிப்பிட்டார்.

புதிய சூரிய சக்தி மின்னுற்பத்தி தொகுதியை நிறுவுதல் மற்றும் செயல்படுத்தல் ஆகியவற்றுடன், 2022 ஆம் கல்வி ஆண்டுக்கான மாணவர்களின் கல்வித் தேவைகளுக்கு உதவுவதற்காக, அலியான்ஸ் லங்கா நிறுவனம், சேனானிகம ஆரம்பப் பாடசாலை மாணவர்களுக்கு புத்தகத் தொகுதிகளையும் நன்கொடையாக வழங்கியுள்ளது. பாடசாலையிலுள்ள மொத்தம் 72 மாணவர்களுக்கு புத்தகத் தொகுதி வழங்கப்பட்ட அதே வேளையில், அலியான்ஸ் லங்கா நிறுவனம் இந்த பாடசாலை மாணவர்களுக்கு வழங்கும் வசதிகளை மேலும்







**மின்சார நெருக்கடியை குறைப்பதற்கான ஏற்பாடு**

மேம்படுத்துவதற்காக, பாடசாலைக்கு தண்ணீர் சுத்திகரிப்பான் வடிகட்டி மற்றும் முதலுதவித் தொகுதிகளையும் நன்கொடையாக வழங்கியுள்ளது.

அலியான்ஸ் லங்கா என்று கூட்டாக அழைக்கப்படுகின்ற அலியான்ஸ் இன்சூரன்ஸ் லங்கா லிமிட்டெட் மற்றும் அலியான்ஸ் லைஃப் இன்சூரன்ஸ் லங்கா லிமிட்டெட் ஆகியன ஜேர்மனியின் மூனிச் மாநகரத்தில் தலைமையலுவலகத்தைக் கொண்டு, பிரதானமாக காப்புறுதி மற்றும் சொத்து முகாமைத்துவ வர்த்தகத்தில் சர்வதேச அளவில் நிதியியல் சேவைகளை வழங்கி வருகின்ற நிறுவனமான Allianz SE இன் முழுமையான உரிமையாண்மையின் கீழான துணை நிறுவனங்களாகும்.

அலியான்ஸ் குழுமத்தின் உலகளாவிய பலம் மற்றும் உறுதியான மூலதனம் ஆகியன உள்ளூர் நிபுணத்துவம் மற்றும் வணிக அறிவு ஆகியவற்றுடன் இணைந்து, அலியான்ஸ் லங்கா நிறுவனத்தின் வெற்றிக்கான சக்திவாய்ந்த சூத்திரமாக உள்ளது.

## அரசாங்கத்தை ...

(03ஆம் பக்கத் தொடர்)

எதிர்க்கட்சித் தலைவர் அதனை பொருட்படுத்தாது தொடர்ந்தும் அரசை விமர்சித்து உரையாற்றிக் கொண்டிருந்ததால் காலை 10 .30 மணியளவில் சபை நடவடிக்கைகளை 10 நிமிடங்களுக்கு ஒத்திவைப்பதாக சபாநாயகர் சபையில் அறிவித்தார்.

அதனையடுத்து சபை நடவடிக்கைகள் மீண்டும் முற்பகல் 10.55 மணியளவில் மீண்டும் ஆரம்பமானது.

## வினாக்களை ஒழுங்கு ...

(03ஆம் பக்கத் தொடர்)

வினாக்களைக் கேட்பதற்கான வாய்ப்பு கிடைப்பதனால் இத்தீர்மானம் எடுக்கப்பட்டிருப்பதாக சபாநாயகர் சபையில் அறிவித்தார். இந்த நிலையில் கீழ் பாராளுமன்றத்தில் வினாக்களைச் சமர்ப்பித்துள்ள ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சம வாய்ப்பு கிடைக்கப்படுவதில்லையெனத் தெரிவித்து அவ்வுறுப்பினர்கள் பாராளுமன்ற சபாமண்டபத்திலும் தனிப்பட்ட முறையிலும் சபாநாயகரிடம் முன்வைத்த எழுத்துமூல மற்றும் வாய் மூலமான கோரிக்கைகள் அண்மையில் நடத்தப்பட்ட பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டங்களில் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

இதற்கமைய மே மாதத்தின் முதலாவது பாராளுமன்ற அமர்வு தினம் தொடக்கம் இந்தப் புதிய நடைமுறை செயற்படுத்தப்படும். இதற்கமைய வாய்மூல விடைகளை எதிர்பார்த்து சமர்ப்பிக்கும் வினாக்கள் ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்கப்படும்போது கடைப்பிடிக்கப்படும் புதிய நடைமுறை தொடர்பில் சபாநாயகரின் அறிவிப்பு வருமாறு, பின்வரிசை உறுப்பினர்கள் வாய்மூல விடைகளை எதிர்பார்த்து சமர்ப்பிக்கும் வினாக்கள், பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்கப்படும்போது தற்போது பின்பற்றப்படுகின்ற முறையியலின் காரணமாக பாராளுமன்ற அமர்வுகள் நடத்தப்படுகின்ற அனைத்து நாட்களிலும் ஒரு சில பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மட்டுமே வினாக்களைக் கேட்பதற்கான வாய்ப்பு கிடைக்கப்படுவதனால் வினாக்களை சமர்ப்பித்துள்ள ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சம வாய்ப்பு கிடைக்கப்படுவதில்லையெனத் தெரிவித்து அவ்வுறுப்பினர்கள் பாராளுமன்ற சபாமண்டபத்திலும் தனிப்பட்ட முறையிலும் சபாநாயகரிடம் முன்வைத்த எழுத்துமூல மற்றும் வாய் மூலமான கோரிக்கைகள் மீது 2022.03.16 மற்றும் 2022.04.08 ஆம் திகதிகளில் நடத்தப்பட்ட பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டங்களில் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

## பொலேரோ ரக வாகனம்...

மேலும் இருவர் படுகாயங்களுடன் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். கொடிகாமம் தவசிக்குளம் பகுதியை சேர்ந்த தயாபரன் ஜனுசன் (வயது 12) எனும் சிறுவனே உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவரின் தந்தையான நாகமணி தயாபரன் (வயது 45) மற்றும் உயிரிழந்தவரின் சகோதரனான தயாபரன் தனுஷன் (வயது 15) ஆகிய இருவருமே படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

காங்கேசன்துறையில் இருந்து கொழும்பு நோக்கி நேற்று வெள்ளிக்கிழமை பயணித்த புகையிரதத்துடன் , கொடிகாமம் மிருசுவில் வைத்தியசாலைக்கு அண்மையில் உள்ள புகையிரத கடவையில் பொலேரோ ரக வாகனம் மோதி விபத்துக்குள்ளானது. பொலேரோ ரக வாகனத்தில் பயணித்த சிறுவன் உயிரிழந்த நிலையில், சிறுவனின் தந்தையும் ,சகோதரனும் படுகாயங்களுடன் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி நேற்றுக் காலை வந்துகொண்டிருந்த குளிரூட்டப்பட்ட ரயிலுடன் அலவ்வ பகுதியில் கூலர் ரக வாகனம் ஒன்றும் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இவ்விபத்தில் கூலர் ரக வாகன சாரதி படுகாயமடைந்ததுடன் அலவ்வ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## ஸஹ்ரானுடன் செயற்பட்ட...

பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் சபையில் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் சம்பவத்தின் மூன்றாண்டு நிறைவு தொடர்பில் பாராளுன்றத்தில் நேற்று (21) உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதல் சம்பவத்தின் பின்னரான காலப்பகுதி சாதாரண மக்களின் வாழ்க்கைக்கும் தேசிய நல்லிணக்கத்துக்கும் பாரிய பாதிப்பை ஏற்படுத்தியது. தற்கொலை குண்டுதாரிகளின் குழுவில் பிரதான நபருடன் சாரா ஜெஸ்மின் என்பவர் இருந்துள்ளார். சாரா இந்தியாவுக்கு தப்பித்துச் சென்றுள்ளாரென களுவாஞ்சிக்குடி முன்னாள் ஓ.ஐ.சி. அபூபக்கர் என்பவர் குறிப்பிட்டுள்ளார், இவர் இன்றும் தடுப்புக் காவலிலுள்ளார். சாரா மரணிக்கவில்லை, இந்தியாவிலுள்ளாரென்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தற்கொலைதாரிகளின் உடற்கூறு பரிசோதனைகளில் சாராவினதும் சாராவின் தாயாரினதும் டிஎன்ஏ ஒத்துப் போகவில்லையென ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. சாராவை சர்வதேச பொலிஸ் ஊடாக கைது செய்ய அரசாங்கம் இதுவரை பிடியாணையை பெற்றுக் கொள்ளவில்லை. குண்டுத் தாக்குதல் சம்பவத்தை அரசாங்கம் அப்போது பிற தரப்பினர் மீது பொறுப்பாக்கி அதிகாரத்தை கைப்பற்றியது.

ஹிஜாஸ் ஹிஸ்புல்லா, பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் மீது பாரிய குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. இருப்பினும் நீதிமன்றம் இவர்களை விடுதலை செய்துள்ளது. அதேவேளை, ஸஹ்ரானுடன் ஒன்றிணைந்து செயற்பட்ட இருவர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். ஆனால் ஸஹ்ரானை வீதியில் கண்டவர்கள், மேசையில் அமர்ந்து தேநீர் அருந்தியவர்கள் வருடக் கணக்கில் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை எந்தளவுக்கு நியாயமானது என்றார்.

## யாழ்., மன்னாரிலிருந்து...

மன்னாரைச் சேர்ந்த 03 குடும்பங்களைச் சேர்ந்த 13 பேரும்,யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒரு குடும்பத் தைச் சேர்ந்த 04 பேரும், தனி நபர் ஒருவரும் இதில் உள்ளடங்குகின்றனர்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள கடுமையான பொருளாதார வீழ்ச்சியின் காரணமாக உணவு மற்றும் அத்தியாவசிய பொருட்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளதாகக் கூறி இவர்கள் இவ்வாறு தஞ்சம டைந்துள்ளனர்.

கடந்த புதன்கிழமை வரை 42 இலங்கை தமிழர் இலங்கையிலிருந்து புறப்பட்டு தனுஷ்கோடி வழியாக தமிழகத்துக்கு அகதிகளாக முகாம்களில் தங்கியுள்ளதுடன் தற்போது நான்கு மாத கர்ப்பிணி ஒருவரும் ஒன்றரை வயது குழந்தையொன்றும் உட்பட 04 குடும்பங்களைச் சேர்ந்த மேலும் 18 இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக தனுஷ்கோடியில் தஞ்சமடைந்துள்ளனர்.

இராமநாதபுரம் மாவட்டத்தின் இராமேஸ்வரம், தனுஷ்கோடி இலங்கைக்கு மிக அருகே உள்ளதால் இலங்கையில் ஏற்பட்ட இறுதிக்கட்ட போரின் போது இலங்கை தமிழர் தங்கள் உயிர்களை காப்பாற்றி கொள்ள அகதிகளாக தனுஷ்கோடி வழியாக தமிழகத்துக்கு வந்து இலங்கை தமிழர்கள் மறுவாழ்வு முகாமில் தங்கினர்.

அதேபோல் தற்போது இலங்கையில் ஏற்பட்டுள்ள கடும் பொருளாதார வீழ்ச்சி காரணமாக இலங்கை தமிழர் இந்திய இலங்கை சர்வதேச கடல் எல்லையிலுள்ள தீவிர கண்காணிப்பையும் மீறி படகுகளில் தனுஷ்கோடிக்கு அகதிகளாக தஞ்சமடைந்து வருகின்றனர்.

கடந்த வியாழக்கிழமை (21) காலை மன்னார் மாவட்டம் பேசாலை கடற்கரையிலிருந்து இரண்டு படகுகளில் மன்னார், அடம்பன் மற்றும் உயிலங்குளம் பகுதிகளைச் சேர்ந்த பிரதீப், கஸ்தூரி, சுமித்ரா, நகுஷன்,பியோனா, நகுலேஸ்வரன் என நான்கு மாத கர்ப்பிணி பெண் ஒன்றரை வயது சிறுவன் உட்பட மூன்று குடும்பத்தை சேர்ந்த 13 இலங்கை தமிழர் வியாழக்கிழமை இரவு 10 மணியளவில் தனுஷ்கோடி அரிச்சல்முனை கடற்கரைக்கு வந்து இறங்கினர்.

தகவலறிந்து சம்பவ இடத்துக்குச் சென்ற இராமேஸ்வரம் கரையோர போலீசார் இலங்கை தமிழர்களை மீட்டு மண்டபம் கரையோர போலீஸ் நிலையத்தில் வைத்து விசாரணை செய்துள்ளனர்.

இதேவேளை யாழ்ப்பாணம், நீர்வேலி பகுதியை சேர்ந்த ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 04 பேரும் அப் பகுதியைச் சேர்ந்த தனி நபர் ஒருவர் உள்ளடங்களாக 05 பேர் (22) வெள்ளிக்கிழமை அதிகாலை தனுஷ்கோடியை சென்றடைந்தனர்.

இலங்கையில் மருத்துவ பொருட்களுக்கும் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் தனது நான்கு மாத கர்ப்பிணி மனைவிக்கு பாதுகாப்பாக குழந்தை பிறப்பதற்காக தமிழகத்துக்கு அகதிகளாக வந்ததாக பாதுகாப்பு அதிகாரிகள் நடத்திய விசாரணையில் இளம் குடும்பஸ்தர் தெரிவித்துள்ளார்.

தற்போது பால் மா மற்றும் கோதுமையின் விலை கடுமையாக உயர்ந்துள்ளதால் தனது ஒன்றரை வயது குழந்தையை வைத்து இலங்கையில் வாழ முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் வரும் நாட்களில் உணவுப் பஞ்சம் ஏற்படும் அபாயம் உள்ளதால் குழந்தைகளின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு தான் தமிழகத்திற்கு குடும்பத்துடன் அகதியாக வந்ததாக தெரிவித்துள்ளனர்.

பாதுகாப்பு அதிகாரிகள் விசாரணைக்குப் பின் இந்த 18 இலங்கைத் தமிழர்கள் மண்டபம் அகதிகள் முகாமில் ஒப்படைக்கப்பட உள்ளனர். இலங்கையில் ஏற்பட்டுள்ள கடும் பொருளாதார நெருக்கடி காரணமாக கடந்த மார்ச் மாதம் 22ஆம் திகதி வரை 60 இலங்கை தமிழர்ள் அகதிகளாக தமிழகம் வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## அரசின் பயணப் பாதை....

அதேவேளை அரசியலமைப்பு மறுசீரமைப்பு தொடர்பான நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொண்டு வருவதாகவும் அமைச்சர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று அரசாங்கத்தின் பொருளாதார வேலைத் திட்டம் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் தினேஷ் குணவர்த்தன இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்:

அரசாங்கம் நாட்டில் நிலவும் நெருக்கடி நிலைக்கு தீர்வு காண்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் அரசாங்கத்தின் நட்பு நாடுகளின் உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கான பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தற்போது நிதியமைச்சர் அலி சப்ரி, மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க ஆகியோர் சர்வதேச நாணய நிதியத்தின் முக்கியஸ்தர்களுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியுடன் நடத்தப்பட்டுவரும் பேச்சுவார்த்தைகள் சாத்தியமானதாக அமைந்துள்ளன. வீழ்ச்சியடைந்துள்ள நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவது தொடர்பான உறுதிமொழிகள் அந்நிறுவனங்களால் வழங்கப்பட்டுள்ளன.

தற்போதைய சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கான சிறந்த பொறிமுறையொன்றை உருவாக்கி நடைமுறைப்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன்படி அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் பொருளாதார பயணப்பாதை திட்டம் தொடர்பில் நிதியமைச்சர் நாடு திரும்பியதும் பாராளுமன்றத்திற்கு அவரால் தெளிவு படுத்தப்படும்.

அரசாங்கம் தொடர்ச்சியாக இந்த விடயங்களை பாராளுமன்றத்தில் தெரிவித்து வரும் நிலையில் எதிர்க் கட்சித் தலைவர் தொடர்ச்சியாக அது சம்பந்தமான கேள்விகளையே சபையில் மீண்டும் மீண்டும் எழுப்பி வருகின்றார்.

தொடர்ச்சியான அவரது இத்தகைய செயற்பாடுகள் எதிர்க்கட்சிக்கான பிரசாரமாகவே அமைகின்றது. அவர்களால் பிரசாரத்துக்காக மேற்கொள்ளப்படும் இத்தகைய செயற்பாடுகள் நாட்டை மேலும் பாதிப்புக்குள்ளாக்கும் என்பதை அவர்கள் உணர வேண்டும்.

நாட்டில் தற்போது நடைபெற்று வரும் ஆர்ப்பாட்டங்கள் தொடர்பில் பல்வேறு கருத்துக்களை எதிர்க் கட்சி தெரிவித்து வருகின்றது. எனினும் அவர்களது காலத்திலேயே தொழிற்சங்க போராட்டங்களை மேற்கொண்ட 80,000 பேர் வேலை நிறுத்தம் செய்யப்பட்டனர். இரண்டு ரூபா 80 சதம் அதிகரிப்பை கோரியே அந்த தொழிற்சங்க போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அதன் போது ஜனநாயகத்துக்கு எதிராக அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளை அவர்கள் தற்போது மறந்து செயல்படுகின்றனர் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## 13 ஆம் திருத்தச் சட்டத்தை...

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். பாராளுமன்றத்தில் (21) ந டைபெற்ற அரசாங்க கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் கலந்துரையாடல் தொடர்பாக கருத்து தெரிவிக்கும் போதே ஈ.பி.டி.பி. கட்சியின் செயலாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில், "தற்போது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை நீக்குவது தொடர்பாக பரவலாகப் பிரஸ்தாபிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக தமிழ் மக்களின் தேசியத் தலைவராக விளங்கிய அமரர் அ.அமிர்தலிங்கம், மலையக மக்களின் தேசியத் தலைவராக விளங்கிய அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் மற்றும் முஸ்லிம் மக்களின் தேசியத் தலைவராக விளங்கிய மர்ஹூம் எம்.எச்.எம். அஸ்ரப் ஆகியோர், சிறுபான்மை தேசிய இனங்களின் நலன்களுக்கு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை சிறந்தது என்ற கருத்தை வலியுறுத்தியிருந்தனர்.

ஆனால் தற்போது, சிறுபான்மை தேசிய இனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கட்சிகள் உட்பட பெரும்பாலான அரசியல் தரப்புக்கள் நிறைவேற்று அதிகார முறைமை நீக்கப்பட வேண்டுமென்ற கருத்தை முன்வைத்து வருகின்றன. தற்போதைய ஜனாதிபதியும் நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் வகையில் கருத்து வெளியிட்டு வருகின்றார்.

இந்நிலையில் ஈ. பி.டி.பி. ஆகிய எம்மைப் பொறுத்தவரையில், அரசியலமைப்பில் எவ்வாறான மாற்றங்கள் ஏற்படுத்தப்படினும் தற்போதைய அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள அதிகாரப் பகிர்வு தொடர்பான விடயங்கள் முழுமையாக உள்ளடக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கின்றோம்" என்று தெரிவித்துள்ளார்.

13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதில் ஆரம்பித்து படிப்படியாக தமிழ் மக்களின் அபிலாசைகளை நோக்கிப் பயணிக்க வேண்டும் என்பதை கடந்த 35 வருடங்களுக்கும் மேலாக ஈ.பி.டி.பி. கட்சி வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கைக்கான கடன் நாணய...

இலங்கைக்கு இந்தியா வழங்கும் பன்முகப்படுத்தப்பட்டதும் தாராளமானதுமான ஆதரவு தொடர்வதாக உயர்ஸ்தானிகரகம் தெரிவித்துள்ளது. இலங்கை மத்திய வங்கிக்கான 400 மில்லியன் அமெரிக்க டொலர் நாணயப் பரிமாற்ற கால எல்லை இந்த ஆண்டு ஜனவரியில் நிறைவடைந்தது. இந்த நிலையில், இந்திய ரிசர்வ் வங்கியினால் தற்போதைய நாணயம் சார் ஆதரவாக, இந்த காலஎல்லை நீடிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, பங்களாதேஷும் 450 மில்லியன் டொலர் பரிமாற்றக் கடனை திருப்பிச் செலுத்துவதற்கு இலங்கைக்கு மேலதிக கால அவகாசம் வழங்க இணக்கம் தெரிவித்துள்ளதாக இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அறிவித்திருந்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## சீனா இலங்கைக்கு ...

இலங்கைக்கு தொடர்ந்தும் உதவிகளை வழங்கும் என்று தூதுவர் கி சென்ஹொங் வெ ளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸிடம் உறுதியளித்துள்ளார்.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் (21) சீனத் தூதுவர் கி சென்ஹொங்கை வெளிநாட்டலுவல்கள் அமைச்சில் சந்தித்தார். இதன் போதே அவர் இவ்வாறு உறுதியளித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய நிலைமை மற்றும் இலங்கையின் பொருளாதாரத்தை மோசமாகப் பாதித்துள்ள எரிசக்தித் தட்டுப்பாடு குறித்தும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் தூதுவருக்குத் தெரிவித்தார். சர்வதேச நாணய நிதியத்துடன் நிதி உதவி மற்றும் இலங்கையின் கடனை மறுசீரமைத்தல் போன்றவற்றுக்காக நடைபெற்று வரும் கலந்துரையாடல் உட்பட, தற்போது நிலவுகின்ற சூழ்நிலையை உடனடியாக சமாளிப்பதற்காக அரசாங்கம் மேற்கொண்டு வருகின்ற நடவடிக்கைகள் குறித்து தூதுவருக்கு விளக்கிய அமைச்சர் பீரிஸ், குறிப்பாக இக்கட்டான நேரத்தில் நிதியளிப்புக்கான மேலதிக உதவிகளை நல்குமாறு சீனாவிடம் கோரிக்கை விடுத்தார்.

கொழும்பிலும் பெய்ஜிங்கிலுமுள்ள சீனத் தூதரகம் இலங்கையில் உருவாகிவரும் நிலைமையை உன்னிப்பாக அவதானித்து வருவதாக சீனத் தூதுவர் தெரிவித்தார். சீன அரசாங்கத்தின் நேரடி ஆதரவு, பிராந்திய அரசாங்கத்தின் ஆதரவு மற்றும் செஞ்சிலுவைச் சங்கம் மூலம் சீனாவின் ஆதரவு உட்பட சாத்தியமான எல்லா வழிகளிலும் சீன அரசாங்கம் இலங்கைக்கு தொடர்ந்தும் உதவிகளை வழங்கும் என்று தூதுவர் கி உறுதியளித்தார்.

5,000 தொன் அரிசி (முன்னர் அறிவிக்கப்பட்ட 2,000 தொன்களுடன்), மருந்துகள், உற்பத்திப் பொருட்கள் மற்றும் ஏனைய அத்தியாவசியப் பொருட்கள் உட்பட, இலங்கைக்கு 200 மில்லியன் பெறுமதியான அவசர மனிதாபிமான உதவியை வழங்குவதற்கு சீனா சர்வதேச அபிவிருத்தி ஒத்துழைப்பு நிறுவனம் உறுதியளித்துள்ளது. மேலும், யுனான் மாகாணம் 1.5 மில்லியன் பெறுமதியான உணவுப் பொதிகளை இலங்கைக்கு நன்கொடையாக வழங்குவதாக அறிவித்துள்ளது.

சீனாவின் உறுதியான ஆதரவுக்காக வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் நன்றிகளைத் தெரிவித்தார். இந்தக் கலந்துரையாடலின் போது, மக்கள் பரிமாற்றம், பலதரப்பு மன்றங்களிலான ஆதரவு, வறுமை ஒழிப்பு போன்றவற்றிலும் கவனம் செலுத்தப்பட்டது.

## பிரான்ஸ் மாநகர சபையில்...

(03ஆம் பக்கத் தொடர்)

மாநகர சபைக்கு விஜயம் செய்து அந்த மாநகர சபையின் பிரதி மேயர் மற்றும் சர்வதேச விவகார பொறுப்பாளர் ஆகியோரை (21) சந்தித்தனர். இச் சந்திப்பின் போது Aubervillers மாநகர சபையின் செயற்பாடுகள் நிர்வாக அலகுகள், அவர்களுடைய அதிகார வரம்புகள் பற்றியும் கலந்துரையாடியதுடன் யாழ். மாநகர சபை மற்றும் Aubervillers மாநகர சபை ஆகிய இரண்டு சபைகளின் நிர்வாக அனுபவங்களையும் ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொண்டனர்.

## உயிர்த்த ஞாயிறு...

(03ஆம் பக்கத் தொடர்)

திட்டமிடப்பட்டதாகவும் இந்தியாவின் ஊடாக அடிப்படைவாத பயங்கரவாதிகள் அதனை முன்னெடுத்ததாகவும் பலரும் பல்வேறு கருத்துக்களை சபையில் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் எத்தகைய தகவல்களைத் தெரிந்திருந்தாலும் அவற்றை எமக்குப் பெற்றுத் தருவது விசாரணைகளுக்கு ஒத்துழைப்பாக அமையும் என்பதை நான் அவ்வாறானவர்களுக்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். மேற்படி குண்டுத் தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் நேரில் சென்று நிலைமைகளை கண்டறிந்தவன் என்ற வகையில் அது தொடர்பில் நான் மிகவும் பொறுப்புடன் செயற்பட்டு வருகின்றேன். இந்த சம்பவங்கள் தொடர்பில் தகவல்கள் தெரிந்தவர்கள் புலனாய்வு பிரிவினரிடம் தகவல்கள் வழங்க முடியும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## அனைவரும் ஒன்றாக...

(03ஆம் பக்கத் தொடர்)

உயிர்த் ஞாயிறு தாக்குதலுக்கான பிரதான சூத்திரதாரியை இன்னும் கண்டுபிடிக்கவில்லை. இனங்களுக்கிடையில் மூட்டி விடும் வேலை தான் நடக்கிறது.நடந்த தாக்குதலுக்கு நீதி நிலைநாட்டப்பட வேண்டும்.கொரோனா மரணங்களை அடக்குவது தொடர்பில் அரசிற்குள் இருந்து வாதாடினோம். ஒரு சமயத்தாரின் அடிப்படை மத உரிமையுடன் விலையாடினார்கள். வெந்த புண்ணில் வேல் பாய்த்தார்கள். அந்த சாபம் என்று சொல்கிறார்கள்.

## இலங்கைக்கு உதவி...

நிர்வாகி அச்சிம் ஸ்டெய்னர் ஆகியோருக்கிடையில் முக்கிய சந்திப்பொன்று நடைபெற்றது.

இதன்போதே ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி திட்ட நிர்வாகி அச்சிம் ஸ்டெய்னர் சாதகமான பதிலை வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. தற்போதைய கடன் நெருக்கடிக்கு பதிலளிக்கும் வகையில் இலங்கை அரசாங்கத்துக்கு உதவ ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டம் (UNDP) அர்ப்பணிப்புடன் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## நிதியமைச்சரின் உத்தியோகபூர்வ...

போதே பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்க்கட்சி எம்.பி ஹர்ஷ டி சில்வா அது தொடர்பில் நேற்று சபையில் தெரிவிக்கையில்:

கடந்த சில தினங்களுக்கு முன் எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டது.எனினும் நிதியமைச்சர் நாட்டில் இல்லாத சமயம் அவரது அனுமதியின்றியே அந்த விலை அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்த அதிகரிப்புக்கான உத்தியோகபூர்வ அனுமதி நிதியமைச்சரினால் வழங்கப்படவில்லை.நிதியமைச்சர் அதற்கான அனுமதியை தொலைபேசி மூலம் வழங்கியிருந்ததாக சபையில் எரிசக்தி, மின்சக்தி அமைச்சரினால் தெரிவிக்கப்பட்டது. எனினும் அவ்வாறு அந்த அனுமதி பெறப்பட்டிருந்தால் அது முறையற்றது. சட்டபூர்வமற்றது என நாம் தெரிவித்திருந்தோம்.எனினும் அது தொடர்பான உறுதியான பதிலை இதுவரை அரசாங்கம் சபையில் தெரிவிக்கவில்லை என அவர் நேற்று சபையில் குறிப்பிட்டார். அதற்கு பதிலளிக்கும் போதே பிரதமர் மஹிந்த ராஜபக்ச நேற்று இவ்வாறு தெரிவித்தார்.

## அரசியலமைப்பு திருத்தம்...

40 பாராளுமன்ற உறுப்பினர்கள் சார்பில் இச் சட்ட வரைபு சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

20 ஆவது திருத்தத்தை இரத்துச் செய்து 19 ஆவது திருத்தத்தை மீண்டும் கொண்டு வருவதற்காக அரசியலமைப்பின் 21 ஆவது திருத்த சட்ட வரைபு இவ்வாறு தயாரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அரசியலமைப்பு திருத்தம் தொடர்பில் பல யோசனைகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார். பாராளுமன்ற அமர்வு (22) ஆரம்பிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதற்கமைய, ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் அரசாங்கத்திலிருந்து விலகி சுயேட்சையாக செயற்படும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசியலமைப்பு திருத்த யோசனைகளை சமர்ப்பித்துள்ளனர்.

இது தொடர்பான அனைத்து முன்மொழிவுகளும் சட்ட மாஅதிபரின் கவனத்துக்கு கொண்டு வரப்படுமென சபாநாயகர் தெரிவித்தார்.

## 30 பேர் பேராயருடன்...

பரிசுத்த பாப்பரசர் முதலாம் பிரான்ஸிஸ்ஸின் அழைப்பின் பேரில் பேராயருடன் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களால் பாதிக்கப்பட்ட 30 பேர் உள்ளிட்ட 60 பேரடங்கிய குழுவினர் வத்திக்கான் புறப்பட்டதாக கொழும்பு பேராயர் இல்ல தொடர்பாடல் பணிப்பாளர் அருட்தந்தை ஜூட் பெர்னாண்டோ தெரிவித்தார்.

கடந்த 2019 ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு தற்கொலை குண்டுத் தாக்குதல்களில் 269 பேர் உயிரிழந்தது டன் 500 க்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர்.

இத்தாக்குதல்கள் நடைபெற்று கடந்த 21 ஆம் திகதியுடன் 03 வருடங்கள் பூர்த்தியடைந்துள்ளதுடன் தாக்குதல்களுக்கு பொறுப்பானவர்களை சட்டத்தின் முன் நிறுத்துமாறு கோரி பல்வேறு போராட்டங்கள் நாட்டில் பல பகுதிகளிலும் தொடர்ந்து நடைபெற்றன.

## கட்டாரில் சிறையிலிருந்த...

புனித ரமழானை முன்னிட்டு சிறைவாசம் அனுபவித்த 20 இலங்கையர் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக பணியகம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, அபராத தொகை செலுத்தலிலிருந்தும் அவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நீர்த்தேக்கங்கள் நீர் மட்டம்...

தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நேற்று (22) 03 மணித்தியாலங்கள் 20 நிமிடங்களுக்கு மின் வெட்டை அமுல்படுத்துவதற்கு இலங்கை மின்சார சபைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## புலிகளின் ஆயுதங்களைத் தேடி...

தோண்டும் நடவடிக்கை நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. குரவில் பகுதியில் இக்காணியின் உரிமையாளர் வெளிநாடொன்றில் வசித்து வருவதால் யுத்தத்துக்கு முன்னர் இக் காணியில் விடுதலைப் புலிகளின் முகாம் அமைந்திருந்தது.

இந்த நிலையில் தற்போது வேறு ஒரு நபரினால் காணி பராமரிக்கப்பட்டு வந்துள்ளது. இக் காணியில் தோண்டும் நடவடிக்கைக்கான அனுமதியை முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா வழங்கியதையடுத்து கிராம அலுவலகர், மருத்துவ பிரிவினர், பொலிஸார், படையினர், சிறப்பு அதிரடிப்படையினர் உள்ளிட்டோர் முன்னிலையில் தோண்டும் பணிகள் நடைபெற்றன.

காணியில் மூன்று வெவ்வேறு இடங்களில் தோண்டப்பட்டபோதும் எதுவித பொருட்களும் கிடைக்கவில்லை. அகழ்வுப்பணி மாலை 4.30 மணியவில் முடிவுக்கு வந்தது.

## அடுத்த வாரம் முதல்...

இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி மற்றும் உலக சந்தையில் பால் மாவின் விலை அதிகரிப்புக்கேற்ப விலைகளும் அதிகரிக்கப்பட வுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.டொலர் நெருக்கடி காரணமாக சில இறக்குமதியாளர்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். இதனையடுத்து, அடுத்த வாரம் முதல் நாட்டுக்கு வரவிருக்கும் புதிய கையிருப்புக்கள் தொடர்பில் விலை அதிகரிப்பு குறித்து முடிவு செய்யப்படுமென தெரிவித்துள்ளனர்.

## சமையல் எரிவாயு விலை...

விலை அதிகரிக்கப்பட மாட்டாதென அரசாங்கம் அறிவித்துள்ளது. முன்னதாக நேற்று நள்ளிரவு முதல் 12.5 கிலோ எடைக்கொண்ட சமையல் எரிவாயுவின் விலை 5,175 ரூபாவாக அதிகரிக்கப்படுமென லிட்ரோ நிறுவனம் அறிவித்திருந்தது.இந் நிலையில் அரசாங்கம் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

# புதுப்புனல்

ஷம்ஸ் பாஹிம்



## நோன்பால் இன்பம் பெறுவோம்

ஈமானின் பிரகாசம்
நெஞ்சில் தவள
இறங்கிவிட்டேன்
நோன்போடுநானும்
பாவம் ஒழிந்து
நன்மைகள் பெருக
நாயன் தந்த
நன்கொடை
இதுவன்றோ!

உண்ணலை
உறங்களைக்
குறைத்து
ஓதப்போறேன்
திருமறையை
பசியை தாகத்தை
ஏற்று
பக்குவம் பெற
விரும்புகிறேன்!

சமத்துவக்
கோஷங்களும்
சகவாழ்வும் இருப்பும்
இனிப்பிறக்கும்
ஏழையின் பசியும்
செல்வந்தர்
வாழ்வை இரட்சிக்கும்!

உடலுக்கு மட்டுமா
பக்குவம்
உள்ளத்துக்கும்
இனி பரிகாரம்
பசியையை மட்டும்
அடக்காதீர்
பாவத்தையும் விட்டு
விலகிநிற்பீர்!

நோன்புக்கு மாண்பு
பக்குவம்
நோயது விலகும்
நிச்சயம்
கல்புக்குள் கரையும்
பாவங்கள்
கரைந்தே அழியும்
நிச்சயம்!

சென்றபொழுதுகள்
போகட்டும்
செகத்தினில் சமாதானம்
பிறக்கட்டும்
நின்றே இரவில்
தொழுதிடுவோம்
நிறை நோன்பால்
இன்பம் பெற்றிடுவோம்

**தோப்பூர்.எஸ்.சிராஜுதீன்**
நற்பிட்டிமுனை தினகரன் நிருபர், கல்முனை.

## கனிக் கூட்டங்கள் ஏந்திய உன் வருகை

எனக்கென நீ விட்டுச்சென்ற
ஒவ்வொரு கணங்களும்
ஒரு கோடைக்கும்,மாரிக்கும்
இடைப்பட்ட காலத்து மழை போல்
மிகப் பெறுமதி வாய்ந்தவை

போன முறைக்கும்
இம்முறைக்கும் நடுவே
நிறையவே நிகழ்ந்து விட்டன
இதில் நான் எங்கு இருக்கிறேன்
என்று தேடும் அளவு அது

நீ
வளங்களை வாரி
வழங்கும் வரம் என்பதால்
சொப்பனங்களை அண்மித்த
என் வாழ்க்கையை மீளமை
ஏப்பமிடும் பகல்களை சிறைபிடி
விழித்திருந்து என்னுடன்
பிரார்த்திக்கத் தகு
இரவுகளை விரும்புவதால்
பிறை கூட்டங்களுடன்
இலங்கும் வானமே
உன் பொன்னந்திகளைத் தா

எதிர் பார்க்கும் நிமிசத்தில்
வந்தமர்ந்து ஒட்டிக் கொள்கின்றன
உன் பேரீத்தம்பழ பிரியங்கள்
“இஃப்தார்”என்ற இதமாய்
இனிக்கும் மதுரங்களை
நா வாசிக்க
மன ஆடையை
வெள்ளாவி வைத்து வெளுக்க
என் இடை மூட்டைகளை
துலாம் பார்க்க
உன்னிடமே ஒப்படைக்க வேண்டியுள்ளன.

“ஸஹர்” சமவெளியில்
வேரினை விட்ட இடத்திலிருந்து தொடங்க
நிரந்தர திசைக்கான என் இருப்பை
ஆழப் பதிக்க
இறை பிரியத்தின் அதி உச்ச கிளைகளை
நான் மேலே பரப்ப
குர்ஆனியப் பூக்கள் குரல்வழி பூக்க
புனிதமிகு “ரமழானே”
கனிக்கூட்டங்கள் ஏந்திய
உன் வருகையுடன்
சுவனத்தை விட்டுச்செல் என்னிடம்.

**ரோஷான் ஏ.ஜிப்ரி**
வாங்காமம்,
இறக்காமம்.



## தாய் மண்

ஐயிரண்டு திங்கள் கருவறையில் சுமக்கிறாள் என் தாய்
ஆயுள்வரை தோழில் சுமக்கிறது என்னை (என் தாய்மண்)!

ஈழமணித் திருநாட்டின் மன்னார்ப் பகுதியில்
எருக்கலம்பிட்டி எனும் எழில் கொஞ்சும் தாய்மண்!
இனவாதத்தால் கூட்டாக வெளியேற்றப்பட்டாலும்
மீளக் குடியமர்வால் தளிர்த்துவிட்ட தாய் மண்
இயற்கைக் கொடையால் கடலால் அலங்கரிக்கப்பட்டு
முதன்மைத் தொழில் மீன்பிடி என்றாலும்
புத்தி ஜிவிகளையும் வணிகர்களையும்
ஈன்றெடுக்கத் தவறவில்லை எம் தாய் மண்!

உள்ளகப் பூசல்களுக்குசற்று முகம்
கொடுத்தாலும் தாய்மண்!
ஒற்றுமையெனும் கயிற்றைப் பற்றிப்பிடித்து
உணர்வு பூர்வமாய் வாழ வழிவகுத்த
வள்ளல்களைக் கொண்ட வளமான பூமி!

விருந்தாளர்ளாக வந்தவருக்கு வயிறார உணவூட்டி
வளர்த்துவிட்ட தாய்மண் எருக்கலம்பிட்டி
அறிவுத்தாகத்துடன் வந்தவர்க்குகெல்லாம்
அறியாமையை நீக்கிய அறிவுக் கூடங்களைச் சுமந்த மண்!

பக்கத்து வீடுகளில் பாதியாய்ப் பங்காகி
மாற்றுக் கருத்துகளின்றி அயலவனை அரவணைத்து
உரமூட்டிய மனிதநேயம் கொண்ட தாய்மண்
மானிடர்களை ஈன்றெடுத்த தாய்மண்!

ஆசிரியர், பேராசான் ,கலாநிதிகள், வழக்கறிஞர்களை
பெற்றெடுத்த நற்கிராமம்!
தாதியர்,வைத்தியர்,பொறியியலாளர்களை
தாய் மண் எழில்மிகு எருக்கலம்பிட்டி!

சர்வதேச ரீதியிலும் நாடளாவிய ரீதியிலும்
சான்றோரை வளர்த்தெடுத்த தாய் மண்
சான்றோர்களை வார்த்தெடுத்த என் தாய் மண்
தம் நாமம் பறைசாற்ற நாசாவிலும்
மகிந்தனை பணியாற்ற வைத்திருக்கின்றதே!

அயராத முயற்சியாய் அடுத்தவர் பசி போக்க
அள்ளியே வழங்குகிற உள்ளங்கள் கொண்ட
மன்னனின் மைந்தர்களை ஈன்றெடுத்த என்
தாய் மண்ணே நீ நீடு வாழிய வாழியவே!
கோடி புண்ணியம் செய்துள்ளோம்
உன் மண்ணில் நாம் பிறக்க...

**அத்ஹறா சாதிக்**
பல் வைத்தியர்,
குடும்ப நல ஆலோசகர்

## நாட்டுக்கு வலிமை கொடு

நகரும் நந்நாளே
புலரும் வாழ் நாளே
தாயகம் வாழ விடு
வெளிநாட்டிடம் போட்டியிடு.

ஊசி வேண்டாமே
செல்வம் சேர்ந்திடவா
நள்ளிரவு வேண்டாமே
வெண்ணிறவை சேர்ந்திடவா.

விலைவாசி இல்லாமல் வலைவீசி
மீன் கொண்டு வா
தொழிநுட்பம் வளர்ந்திட வா,,,
தொலைநோக்கு விதைத்திடவா
நிலவுக்கு போய் வரவேண்டு
நாட்டிற்கு விண்வெளி செய்துவிடு
எலான் மஸ்கிடம்
ஏலம் கேட்க அபிவிருத்தி தேடு.

கொரோனா எல்லாமே
உலகில் கலைந்து விடு
பதுக்கல் இல்லாமல்
பண்பை பாரில் செலுத்திவிடு
எரிபொருள் தீராமல்
எண்ணெய் வளம் தந்துவிடு
உடையாத பாதையில்
ஓடும் கன அளவு தந்து விடு
கலப்படமில்லாத பொருட்களை
அறுவடை செய்து விடு.

ஒரே நாடு ஒரே சமத்துவம் சேர்ந்திடவா
ஒரே சட்டம் ஒரே ஐக்கியம் நிலைத்திடவா
சத்தியம் பேசும் மக்கள் வளர்ந்திடவா
பத்தியம் வீசும் மானுடம் வளர்ந்திடவா
விளக்கை எடுக்காத அனல் மின்சாரம்
செய்ந்திடவா.

பிஞ்சுகளின் நெஞ்சங்களில்
நஞ்சுகளை விதைக்காத
படிப்பின் முக்கியத்துவத்தில்
இனவாதம் வதைக்காத
சமைக்க ஏரிவாயு
ஏவுகணில் இறங்குவாயா
சூம் அறை மாணவர்களை வகுப்புகளை
குறைப்பாயா
கல்வித் திட்டமின்றி திறமை வேண்டும்
மாற்றம் தருவாயா.

ஒரே நாணயம் நிந்தனையில்லா
கலையாக்கி விடு
ஒரே நிலை நிர்யாணயற்ற
விலையாக்கி விடு
டொலர் இல்லாத ஐம்பொன்
உலகம் உருவாக்கி விடு
தேவை தீர்ந்து சேவை நேர்ந்து விடு
வியர்வை வீணாகாமல்
வருமானம் தேனாகி விடு.

மலரும் புது நாளே
இனிக்கட்டும் நாழிகையே
வஞ்சனை அழித்துவிடு
புத்துணர்வு புகுத்தி விடு
போர் புதைத்து விடு
ஏர் பதித்து விடு
கடன் அத்தனையும்
r இந்து சமுத்திரத்தில்
கொட்டி விடு.

சமூகத்தை விரும்புவரை
மண்ணில் தலைமுறை
வளர்த்து விடு
சாபம் இல்லாமல் எங்கள்
லாபத்தை கொடுத்து விடு
ஒவ்வொரு பொழுதிலும்
நேரத்தை பயன்படுத்தி
பணத்திற்கு தொண்டு கொடு
பாவம் செய்யாமல் நாட்டிற்கு
வலிமை கொடு.

**மபாஸ்**

## வெறுமை காணா வறுமை



வண்ணங்கள் நிறைந்த
மின் விளக்குகளில்லை
விண்ணின் நிலவொளியே
விடி விளக்கு

விதம் விதமாய் சுவைமிகு
பண்டங்களில்லை
உதரத்தின் பசிபோக்கிட
ஒரு வேளையே உணவு

பஞ்சணையில் படுத்துறங்கி
பகட்டான வாழ்க்கையில்லை
நெஞ்சம் நெகிழும்
மெத்தையையாய் கட்டாந்தரை

நீண்ட சதுரடியில்
மாடமாளிகைகள் கூடங்களில்லை
வேண்டிய மன அமைதிக்கோ
ஓலைக்குடிசை

வியர்வை போக்க
மின் விசிறிகளில்லை
தயவாய் வருடிடவே
இதமான தென்றல்காற்று

எடை குறைக்க
இயந்திர சாதனமில்லை
தடையின்றி உடலுக்குத்
தெம்பூட்டிடவே வீட்டுத்தோட்டம்

பணம் புகழிருந்தும்
நெஞ்சமதில் நிம்மதியில்லை
கணத்தில் கவலையை ம
றைத்திடுமே போதுமென்றமனம்

என்றும் நிலையில்லா
பணவைப்பு பெட்டியில்லை
அன்றே உழைத்து
நன்றே வாழ்க்கை

உறவான தாத்தா பாட்டி
முதியோரில்லத்தில் இல்லை
வெறுமையில்லா வறுமையிலும்
என்றும் மகிழ்வாய்

(சம்பூரணி)
**சுஜந்தினி யுவராஜா**



## நிலையாமை இருப்பு...

தனித்திருக்கும் தருணம்
விழிகளில் நரகம்

கண்ணீரோடு களவாடப்பட்ட
பொழுதுகளை எண்ணி
நினைவலைகள்
ஏக்கங் கொள்ளும்

மௌனத்தை அசைக்கும்
கடற்புட்கள்

சிரிப்பு விம்பங்களால்
சிதையும் மயானங்கள்

கண்ணீர் நதிகளால்
உதயமாகும் கடல்கள்

கானல் பறவை
மெல்லிருளில் மூழ்கிடும்
வலிகளாய் விழித்தெழும் துரோகங்கள்

மின்னல்கள் கடக்கும்
அனுப்பார்வைகள்
பொய்யை மெய்யாய்
இனிக்கச் செய்யும்

யாவும் நிலையாமை
இருப்பு.

**ஆ.லெ.மு. இர்ஷாத்,**
வாழைச்சேனை.

## நவீனத்தில் உச்சம்

நாகரீகத்தில் அதியுச்சம்
விரல் நுனியில் உலகம்
விந்தைகள் புரிந்திடும் மானிடம்

இன மத மொழி என
தம்மைத் தாமே
அழித்துக் கொள்ளும்
மனிதம் மறந்த
ஆறாம் அறிவுகள்
ஐயறிவுகளிடத்தில் இல்லாத
ஈவிரக்கம் அற்ற
இனச் சங்காரம்

நா நயம் தவறி
நம்பிக்கை இழந்திட்ட
நாணயமற்ற சமூகமாய்
நாறிக் கிடக்கின்றோம்

ஆன்மீகம் அரசியலென
நதிகளின் கிளைகளாய்
நாளும் பல பிரிவுகள்
நானே தலைவனென

மார்தட்டிடும்
வெள்ளையும்
சொல்லையுமாய்
வேசம் பிரமாதம்

ஆட்டு மந்தைகளாய்
அப்பாவி சனங்கள்
நேர்த்திக் கடன்களாய்
ஆளுக்கொரு பக்கமாய்
நல்லறம் போதிப்பவர்கள்
பெரும் ஞானிகளாய் நடித்தே
நாலு காசு
சேர்த்திடும் தந்திரம்

நாளும் தெரிந்தோர்
நம்மை விஞ்சியோர்
நானிலத்தில்
யாரும் இல்லையென
ஏடெடுத்து பாராதோரை
ஏளனம் செய்திடும்
ஏராளமாய் படித்திட்ட
எம்மவர்கள்

நாணம் எத்தனையாவதென
நாணம் மறந்தவளாய்
நாக்கூசாது கேட்டிடும்
நவநாகரீக நங்கையர்

மேனி திறந்தவளாய்
மெல்லியளால் திரிந்திட
கோஷம் எழுப்பிடும்
மேதா விலாசங்கள்

பணம் வந்திட
பழசை மறந்தவர்கள்
வாழ்ந்த நிலையறியாது
வக்கணை பேசுகின்றனர்

வாழும் போதே
வாழ்த்தப்பட வேண்டியவர்கள்
வஞ்சிக்கப்பட்டு
ஓரங்கட்டப்படுகின்றனர்

மூலையிலாகிய
முதிர் கன்னிகளின்
ஏக்கப் பெரு மூச்சுகள்
இமயத்தை கரைத்தாலும்
இதயம் இளகிடாத
ஈன சாதிகளாய்
மானிட உருவில்

ஏந்திழைகளுக்கு
வாழ்வழிப்பதாய்
கரம் பிடித்து
ஏமாற்றித் திரிந்திடும்
ஏமாற்றுப் பேர்வழிகள்

முற்றும் தெரிந்த
முல்லாக்கள் போல்
ஆகும் ஆகாதென
அப்பாவி சனங்களை
ஐயத்தில் ஆழ்த்திடும்
அரைகுறைகள்

அதிகாரம் கையிலாகிட
ஆணவப் போக்கும்
அகங்காரப் பேச்சும்
அடாவடித்தனத்தோடு
அச்சத்திலாக்கியே
ஆட்டிப் படைத்தே
அராஜகம் செய்திடும்
ஆளும் வர்க்கத்தினர்

பெற்றதிற்காக
பெரும்பாடுபட்ட
பெற்றோரை
பெரும் பாடாக
எண்ணிடும் பிள்ளைகள்
ஈகையின் மாண்பறிந்தும்
ஈந்திட மனம் வராத
ஈனப் பிறவிகளாய்
எம்மவர்கள்

முன்னோர் காணாத
முதியோர் காப்பகங்கள்
எங்கோ இதயத்தில்
ரணமாய் வலிக்கிறது

**மலாய்க்கவி**




# மீன் உற்பத்தியை அதிகரிப்பதற்கான ஒத்துழைப்புக்கள் வரவேற்கப்படுகின்றன

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



நன்னீர் மீன் வளர்ப்பு மற்றும் அடைக்கப்பட்ட கூடுகளில் மீன் வளர்க்கும் முறைமையினை விருத்தி செய்து மொத்த மீன் உற்பத்தியை அதிகரிப்பதற்கு திட்டமிட்டுள்ளதாக தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவற்றிற்கான ஒத்துழைப்புக்களையும் முதலீடுகளையும் எதிர்பார்ப்பதாக தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய விவகாரங்களுக்கான பிரிவின் இலங்கை மற்றும் மாலைத்தீவு பிரதிநிதி விம்லேந்திரா ஷாரன உடனான சந்திப்பின் போதே கடற்றொழில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற கடற்றொழில் மற்றும் நீர்வேளாண்மை செயற்பாடுகளின் தற்போதைய நிலைவரம் தொடர்பாக பிரஸ்தாபிக்கும் வகையில் நேற்று (22.04.2022) கடற்றொழில் அமைச்சில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில்,

கடற்றொழிலாளர்கள் தற்போது எதிர்கொள்ளும் எரிபொருள் பிரச்சினை உட்பட்ட பிரச்சினைகள் மற்றும் அவற்றுக்கு தீர்வு காண்பதற்கு மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நடவடிக்கைகள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதிக்கு கடற்றொழில் அமைச்சரினால் தெளிவுபடுத்தப்பட்டது.

மேலும், சீநோர் நிறுவனத்தின் ஊடாக படகு கட்டும் தொழிலை விஸ்தரிப்பதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகள், அறுவடை செய்யப்படுகின்ற மீன்கள் பழுதடையும் விகிதத்தினை குறைப்பதற்கான முயற்சிகள் போன்றவற்றுக்கு ஐக்கிய நாடுகள் சபை கட்டமைப்புக்களினால் வழங்கக் கூடிய ஒத்துழைப்புக்களை எதிர்பார்ப்பதாக தெரிவித்த கடற்றொழில் அமைச்சர், வடக்கில் உருவாக்கப்பட்டுள்ள கடலட்டைப் பண்ணைகள் தொடர்பாகவும் எடுத்துரைத்தார்.

மேலும், நோர்வே போன்ற நாடுகளில் பின்பற்றுவதைப் போன்று குடா கடல் போன்ற பொருத்தமான நீர்நிலைகளில் கூடுகளை உருவாக்கி மீன் வளர்ப்புக்களை உருவாக்குவது மற்றும் நன்னீர் மீன் வளர்ப்பு போன்றவற்றின் ஊடாக மீன் உற்பத்தியை அதிகரிப்பது தொடர்பான தனது திட்டங்களையும் தெளிவுபடுத்திய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அவற்றுக்கான ஒத்துழைப்புக்களையும் மூதலீடுகளையும் பொருத்தமான தரப்புக்களிடம் இருந்து எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

இந்நிலையில் கருத்து தெரிவித்த ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதி, கடற்றொழில் அமைச்சின் எதிர்பார்ப்புக்கள் அடங்கிய திட்டவரைபினை முன்னுரிமை அடிப்படையில் வழங்குமாறும், அவற்றை உரிய தரப்புக்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று ஒத்துழைப்புக்களுக்கான தொடர்புகளை முடிந்தளவு ஏற்படுத்துவதாகவும் உறுதியளித்தார்.



### முல்லைத்தீவு மாவட்ட கிராமங்களுக்கு தமிழ் டயஸ்போராவினால் நிதியுதவி

**(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)**

இலங்கையில் போரால் பாதிக்கப்பட்ட மக்களின் கூட்டுறவினை வளப்படுத்தும் நோக்கில் தமிழ் டயஸ்போரா நிதியுதவியில் வி.பி. பவுண்டேசன் ஊடாக முல்லைத்தீவு மாவட்டத்தில் கிராமங்கள் தோறும் கூட்டுறவு சங்கங்கள் உருவாக்கப்பட்டு அதில் உள்ள அங்கத்தவர்களுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு கிராமத்தில் முதற்கட்ட நிதி கொடுப்பனவு நேற்று வழங்கி வைக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தினை ஊக்குவிக்கும் நோக்கில் முதற்கட்டமாக தெரிவுசெய்யப்பட்ட கூட்டுறவு கிராமத்திலுள்ள அங்கத்தவர்களுக்கு வி.பி.பவுண்டேசன் ஊடாக கிராம மக்கள் அபிவிருத்தி அறக்கட்டளை ஊடாக ஒரு பயனாளிக்கு தலா 30 ஆயிரம் ரூபாபடி வழங்கிவைக்கப்பட்டுள்ளது.

பொருளாதார வளர்ச்சியினை ஏற்படுத்தும் நோக்கில் பாதிக்கப்பட்ட மக்களின் விவசாயம், கால்நடை வளர்ப்பு, மற்றும் சுயதொழில் ஆகியவற்றுக்காக இந்நிதி வழங்கிவைக்கப்பட்டுள்ளது.

# யாழ்.மாநகரசபை முதல்வர் பிரான்ஸ் பயணம்

**கரவெட்டி தினகரன் நிருபர்**



யாழ்.மாநகரசபை முதல்வர் விசுவலிங்கம் மணிவண்ணன், யாழ். மாரநகர சபை உறுப்பினர் வ.பார்த்தீபன் மற்றும் நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் மயூரன் ஆகியோர் உத்தியோகபூர்வ பயணமாக பிரான்ஸ் நாட்டுக்கு சென்றுள்ளனர்.

மணிவண்ணன் குழுவினரை பிரான்ஸ் சர்வதேச விமான நிலையமான பாரிஸ் சார்ள்ஸ் டிகோவில் பிரான்ஸ் வாழ் தமிழ் மக்கள் பூங்கொத்து கொடுத்து வரவேற்றனர்.

பிரான்ஸ் நாட்டு மாநகர சபைகளின் முதல்வர்கள், பிரான்ஸ் பாராளுமன்ற மக்கள் பிரதிநிதிகள், பொது அமைப்புக்கள் மற்றும் புலம்பெயர் தமிழர்களின் அழைப்பை ஏற்று இவர்கள் அங்கு சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. பிரான்ஸ் மாநகர முதல்வர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொது அமைப்புக்களுடனான சந்திப்புக்களும் புலம்பெயர் தமிழர்களுடனான மக்கள் சந்திப்புக்களும் நேற்று முதல் நடைபெறும் என கூறப்பட்டது.

## வவுனியா – மன்னார் வீதியில் விபத்து: இருவர் படுகாயம்

**வவுனியா விசேட நிருபர்**

வவுனியா மன்னார் வீதியிலுள்ள வேப்பங்குளம் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று (22.04) மதியம் இடம்பெற்ற இவ்விபத்து குறித்து மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, குருமன்காடு பகுதியிலிருந்து மன்னார் வீதி வழியாக மோட்டர் சைக்கிள் ஒன்று பயணித்துக் கொண்டிருந்த போது உக்குளாங்குளம் பகுதியிலிருந்து மாதா சொரூப வீதி ஊடாக மன்னார் வீதிக்கு முச்சக்கர வண்டி ஒன்று ஏற முற்பட்ட போது இரு வாகனங்களும் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகி வீதியை விட்டு விலகின. குறித்த விபத்தில் மோட்டர் சைக்கிள் சாரதி மற்றும் முச்சக்கர வண்டி சாரதி ஆகிய இருவரும் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். விபத்து தொடர்பில் போக்குவரத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.



தாவளை இயற்றாலை துர்க்கா மழலைகள் கல்விப் பூங்காவின் வருடாந்த விளையாட்டு விழா அண்மையில் முன்பள்ளி மைதானத்தில் இடம்பெற்றது. இதன்போது எடுக்கப்பட்ட படம்.



உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் உயிரிழந்த பொதுமக்களுக்கு வவுனியா பெரிய பள்ளிவாசலில் நேற்றுமுன்தினம் இரங்கல் நிகழ்வு (21) இடம்பெற்றது. மாலை 6.30 மணிக்கு இடம்பெற்ற இந்நிகழ்வில் மதகுருமார்கள் உட்பட பலரும் கலந்து கொண்டதுடன், இரங்கல் உரைகளும் இடம்பெற்றிருந்தது. படம் ஓமந்தை விஷேட நிருபர்.

# இயற்கை முறையில் பாரம்பரிய நெல் களஞ்சியப்படுத்தும் செயற்திட்டம்

பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனம் மெசிடோவினால் கடந்த வருட இறுதி பகுதியில் மேற்கொள்ளப்பட்ட நெற்செய்கை மூலம் பெறப்பட்ட பாரம்பரிய நெல் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை (21) வைபவ ரீதியாக மன்னார் முருங்கன் நெற்களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த வருட இறுதிப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பெரும்போக செய்கையின் போது தேர்ந்தெடுக்கப்பட்ட 100 விவசாயிகளுக்கு இலவசமாக மெசிடோ நிறுவனத்தால் பாரம்பரிய நெல் விதைகளான சீனட்டி,மொட்டக்கறுப்பன் போன்ற மரபணு மாற்றப்படாத விதைகள் மற்றும் நெற்செய்கை மேற்கொள்வதற்கான ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கப்பட்டு இயற்கை முறையில் விவசாய செய்கை மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி இயற்கை முறையில் மேற்கொள்ளப்பட்ட விவசாய செய்கையின் அறுவடை இவ்வாரம் இடம் பெற்ற போது 10,000 கிலோ விதை நெல்கள் நேற்றுமுன்தினம் (21) விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்யப் பட்டு எதிர் வரும் போக செய்கைக்காக தயார் நிலையில் உள்ள விவசாயிகளுக்கு இயற்கை முறையில் செய்கைக்காக இலவசமாக வழங்குவதற்கு என களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த நிகழ்வில் மன்னார் மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர், மன்னார் மெசிடோ நிறுவன பணிப்பாளர் ஜாட்சன் பிகிறாடோ, மெசிடோ நிறுவன அதிகாரிகள் கலந்து கொண்டு நெல் தூய்மைப்படுத்தல் மற்றும் தொற்று நீக்குதல், களஞ்சியப்படுத்தல் செயற்பாட்டை ஆரம்பித்து வைத்தமை குறிப்பிடத்தக்கது.

## மிருசுவிலில் கோரவிபத்து



யாழ்ப்பாணம் கொடிகாமம் பகுதியில் இடம்பெற்ற புகையிரதத்துடன் பொலேரோ ரக வாகனம் மோதி விபத்துக்குள்ளாகியதில் ஒருவர் உயிரிழப்பு, இருவர் படுகாயம்.
படம் பருத்தித்துறை விசேட நிருபர்

## வவுனியா பல்கலைக்கழக மாணவர்களின் முன்மாதிரியான செயற்பாடு



**ஓமந்தை விஷேட நிருபர்**

வவுனியா பல்கலைக்கழக மாணவர்களினால் மன்னார் வீதியில் அமைந்துள்ள பஸ்தரிப்பிடம் புனரமைக்கப்பட்டுள்ளது. இச்செயற்பாட்டினை வவுனியா பல்கலைக்கழக மின்னியல், மின்னணுவியல் பொறியாளர் கழக (*IEEE Student Branch of the University of Vavuniya*) மாணவர் கிளையினால் முன்னெடுக்கப்பட்டது. மேலும் வரும் காலங்களில் இதனை தொடர்ச்சியாக பராமரிக்கவும் முன்வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மன்னார் மாந்தை மேற்கு பிரதேச சபையினர் கறுப்பு பட்டி போராட்டம்

**மன்னார் குறூப் நிருபர்**

மாந்தை மேற்கு பிரதேச சபை உறுப்பினர்கள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை (21) காலை அரசாங்கத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

மாந்தை மேற்கு பிரதேச சபையின் சபையின் 48 வது அமர்வு நேற்று முன்தினம் (21) வியாழக்கிழமை காலை மாந்தை மேற்கு பிரதேச சபை தவிசாளர் தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது சபையின் 25 உறுப்பினர்களில் 21 உறுப்பினர்கள் கலந்து கொண்டிருந்தனர்.


இதன் போது சபை உறுப்பினர்கள் சபையில் கறுப்பு பட்டி அணிந்து அரசுக்கு எதிராக பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாகைகளுடன் சபை அமர்வில் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது கலந்து கொண்ட உறுப்பினர்களின் ஏகமனதான தீர்மானத்திற்கு அமைவாக அரசுக்கு எதிராக மாந்தை மேற்கு பிரதேச சபைக்கு முன் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன் போது போராட்டத்தில் ஈடுபட்ட உறுப்பினர்கள் கறுப்பு பட்டி அணிந்து பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இரத்தவெறி பிடித்தவனே நாட்டை விட்டு வெளியேறு, மக்களை பட்டினிச்சாவில் தள்ளாதே, மக்களை கொன்று அரசியல் செய்யாதே, விவசாயத்தில் கை வைத்து நாட்டை அழிக்காதே, சொந்த மக்களை சுட்டுத் தள்ளாதே உள்ளிட்ட பல்வேறு வசனங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தியவாறு மாந்தை மேற்கு பிரதேச சபை உறுப்பினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

# மலைச்சாரல்



# காலப்போக்கில் மலையக மக்கள் எனது நிலைப்பாட்டை புரிந்துகொள்வார்கள்

## ஜனாதிபதிக்கு நன்றி

இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார்





என் மீது கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. ஆனாலும், காலப்போக்கில் எனது நிலைப்பாடு சரியானது என அவர்கள் புரிந்து கொண்டு என்னை பாராட்டுவார்கள் என தோட்ட வீடமைப்பு, சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் அவரது அமைச்சில் அமைச்சுப் பொறுப்புக்களை பொறுப்பேற்ற பின்னர் கருத்துதெரிவிக்கையிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் என் மீது கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

ஆனாலும், காலப்போக்கில் எனது நிலைப்பாடு மிக மிக சரியானது என அவர்கள் புரிந்து கொண்டு என்னை பாராட்டுவார்கள். பதினைந்து இலட்ச மலையக மக்களின் அபிலாசைகளை, தேவைகளை, விருப்புகளை இயன்ற வரையில் நிறைவேற்றுவதற்கு, ஆக்கப்பூர்வ நடவடிக்கைகளை மேற்கொள்வேன். முழு மலையகத்தையும் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ, மலையக மக்களுக்கான அமைச்சுக்களை என்னிடத்தில் ஒப்படைத்துள்ளார். பெரும் நம்பிக்கையின் மத்தியில் அமைச்சு பொறுப்புக்களை வழங்கியுள்ள ஜனாதிபதிக்கு நான் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். நாடு இன்று பெரும் நெருக்கடி நிலையை எதிர்நோக்கியுள்ளது. பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இளையவர்கள் மற்றும் பெரியவர்கள் என சகலரும், ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுள்ளனர். இந்த ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்வதற்கு அவர்களுக்கு உரிமையுண்டு. அதனை நான் மதிக்கின்றேன். ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்களென்று ஒரு புறம் இருக்க, நாட்டை வழிநடத்திச் செல்ல வேண்டிய பாரிய பொறுப்புக்களும் இருந்து வரவே செய்கின்றன. அதற்கு அமைவாகவே, தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சை, ஜனாதிபதி எனக்கு வழங்கியுள்ளார். இது எனக்கு புதியதல்ல. 1995ஆம் ஆண்டு காலப் பகுதியில் எனது தலைவரான அமரர் சந்திரசேகரன், கண்ட கனவை நனவாக்கும் பொருட்டு அவரால் ஆரம்பித்து வைக்கப்பட்டதே தோட்ட வீடமைப்பு அமைச்சாகும். ஆகையினால், அந்த அமைச்சில் கடமையாற்றியவன் என்ற வகையில், இந்த அமைச்சு தொடர்பான பூரண அனுபவங்கள் எனக்கு இருக்கவே செய்கின்றன. ஆகையினால், அமைச்சுக்களை கொண்டு நடத்துவதென்பது எனக்கு இலகுவான செயற்பாடுகளே. இந்திய அரசின் உதவிகளையும் பெற்று, எனக்கு வழங்கப்பட்ட அமைச்சுக்களின் கடப்பாடுகளை வெற்றிகரமாக முன்னெடுக்க முடியுமென நான் எதிர்பார்க்கின்றேன். எனது எதிர்ப்பார்ப்புகளுக்கு, அமைச்சின் உயர் அதிகாரிகள் உள்ளிட்ட உத்தியோகத்தர்கள் அனைவரும் பூரண ஒத்துழைப்புக்களையும்,பங்களிப்புக்களையும் வழங்கவே செய்யவர்.



முச்சக்ர வண்டி சாரதிகளினால் ஏற்பாடு செய்யப்பட்ட நோன்பு திறக்கும் இப்தார் நிகழ்வு அக்குறணையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் அக்குறணை பிரதேச சபை தவிசாளர் இஸ்திஹார் இமாமுதீன் மற்றும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர். (படம் மாவத்தகம தினகரன் நிருபர்)

# எரிபொருள் தட்டுப்பாட்டால் தேயிலை உற்பத்திகளும் பாதிப்பு

இரத்தினபுரி சுழற்சி நிருபர்



எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக சிறு தேயிலைத் தோட்டங்களில் உற்பத்தி வீழ்ச்சி கண்டு வருவதாக துறை சார்ந்தோர் கவலை தெரிவிக்கின்றனர். பச்சை தேயிலை கொழுந்தை லொறி வாகனங்களில் எடுத்துச் செல்வதில் தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இரத்தினபுரி மாவட்டத்தில் பச்சைத் தேயிலை கொழுந்து உற்பத்தி வீழ்ச்சி கண்டு வருவதாகவும் இதனால் தேயிலைத் தொழிற்சாலைகளை மூடும் அவதான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் பிரதேச தேயிலைத் தொழிற்சாலைகளின் முகாமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இலங்கையின் மொத்த தேயிலை உற்பத்தியில் மூன்றில் இரண்டு பகுதியை சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்கள் மேற்கொள்வதாக தெரிவிக்கின்றனர்.

# கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர் கொலை

## சந்தேகநபர் தலைமறைவு

பதுளையில் வர்த்தக நிலையம் ஒன்றிற்கு முன்பாக வைத்து கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு நபர் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

கொலை செய்யப்பட்டவர் 46 வயதுடைய விமலதர்ம மாவத்தையை சேர்ந்தவர் என தெரியவந்துள்ளது. பணக்கொடுக்கல் வாங்கலில் ஏற்பட்ட பிரச்சினையே கொலைக்கான காரணம் என பதுளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கூரிய ஆயுதத்தால் தாக்கிய 38 வயதுடைய சந்தேக நபர் தலைமறைவாகியுள்ளதாகவும் அவரை கைது செய்யும் நடவடிக்கைகளை பதுளை பொலிஸார் முன்னெடுத்து வருவதாகவும் தெரிய வருகின்றது.

# றம்புக்கனை சம்பவத்திற்கு நீதி கோரி சத்தியாகிரகம்




றம்புக்கனை சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்கப்படுவதுடன் குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுத்து கண்டி மாவட்ட சர்வமதக் குழு சத்தியாகிரகத்தில் நேற்று(22) ஈடுபட்டது. கண்டி 'டொரிங்டன் பூங்காவில்' அமைக்கப்பட்டுள்ள கோட்டா கோகம கிராமத்தின் கிளைக்காரியாலயத்திற்கு முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

# நாட்டில் மீண்டும் அரசாங்கத்தின் செயற்பாடு கேலிக்கூத்தானது

## இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான்



முகக்கவசம் அணியும் விடயத்தில் அரசாங்கத்தின் திடீர் தீர்மானங்கள் போராட்டங்களை குறுக்கு வழியில் ஒடுக்குவதற்காக முன்னெடுக்கப்படும் முதிர்ச்சியற்ற செயற்பாடு என இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

உலகில் பல்வேறு நாடுகளில் முகக்கவசம் கட்டாயம் ஆக்கப்பட்டே உள்ளது. சீனா உட்பட பல நாடுகளில் கொரோனா தொற்று அதிகரித்துவரும் சூழலில் அரசாங்கம் முகக்கவசம் அணியும் விடயத்தில் வேடிக்கையான தீர்மானங்களை எடுத்துவருகிறது.

நேற்றுமுன்தினம் முகக்கவசம் அணிவது கட்டாயமில்லையென அறிவித்த அரசாங்கம் மீண்டும் நேற்றுமுதல் முகக்கவசம் கட்டாயம் அணிய வேண்டமென தெரிவித்துள்ளது.

இவ்வாறு அறிவிப்புகள் வெளியிட இரண்டு காரணங்கள் தான் உள்ளன. மீண்டும் நாட்டில் கொரோனா தொற்றை அதிகரித்து நாட்டை முடக்குவதற்கும் மற்றொன்று போராட்டக்காரர்களை அடையாளம்கண்டு ஒடுக்குவதற்காகும்.

கொரோனா தொற்றுக்கு தடுப்பூசிகள் செலுத்தப்பட்டு ஒருவருடத்தின் பின்னர் மீண்டும் தடுப்பூசியை செலுத்த வேண்டிய நேரம் வந்துள்ளது. தற்போதைய சூழலில் தடுப்பூசிகளை கொள்வனவு செய்ய அரசாங்கத்திடம் டொலர்கள் இல்லை. அதேபோன்று அத்தியாவசிய மருந்துகளை கூட அரசாங்கத்தால் கொள்வனவு செய்யமுடியாதுள்ளது.

அரசாங்கம் குறுக்குவழியில் இவ்வாறு செயற்படுவது தற்போதைய சூழ்நிலையை அரசாங்கம் முழுமையாக புரிந்துக்கொள்ளவில்லை என்பதை இவர்களின் நடவடிக்கை வெளிப்படுத்துகிறது என அவர் தெரிவித்தார்.





கொம்போட் நிறுவனத்தின் அனுசரணையில் தலவாக்கலை சிமினார் ஆலயத்தினூடாக தலவாக்கலை கிரேட்வெஸ்டன் பாடசாலைக்கு கற்றல் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் அன்பளிப்பாக நேற்று (22) வழங்கப்பட்டன. இதன்போது பாடசாலை அதிபர் எம்.ஐ.எம்.பாரீஸ், பிரதி அதிபர் விஜயசுந்தரம் மற்றும் தலவாக்கலை சிமினார் ஆலயத்தின் இயக்குனர் மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்துக்கொண்டனர். படம் தலவாக்கலை குறூப் நிருபர்

# ஆணின் சடலம் மீட்பு

லுணுகலை நகரிலுள்ள பாழடைந்த கட்டடத்திலிருந்து உருக்குலைந்த நிலையில் ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

56 வயது மதிக்கத்தக்க இவர், லுணுகலை நகரில் பாரம் தூக்கும் தொழிலில் ஈடுபடும் நபராக இருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இது தொடர்பில் லுணுகலை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சூட்சுமமான முறையில் கசிப்பு தயாரிப்பு

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

பொலிஸார் பாதுகாப்புத் தரப்பின் கெடுபிடிகளிலிருந்து தப்புவதற்கு சூட்சுமமான முறைகளில் கசிப்பு தயாரிப்பு மேற்கொள்ளப்படுவதாக பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மாணவர்களின் புத்தகப்பைகள், கர்ப்பிணிப்பெண்கள் ஆடம்பர வாகனங்கள் ஆகிய முறைகளில் கசிப்புத் தயாரித்த இவர்கள் நாளுக்குநாள் புதியமுறைகளை மிகவும் சூட்சுமமாகப் பின்பற்றுவதாகவும் இவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இரத்தினபுரி அயகமை தேயிலைக் கொலனி, பிட்டகந்த கிராமியப் பாடசாலை ஒன்றின் நீர்க்குழாய்களின் நீரைப் பயன்படுத்தி கசிப்புத் தயாரித்த இரண்டு சந்தேக நபர்கள் அண்மையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்விடத்தில் நிலத்தின் கீழ் 18 அடி ஆழத்தில் கற்பாறையொன்றின் மறைவில் இக்காரியத்தை நீண்டகாலமாக இவர்கள் சாதித்து வந்துள்ளமை விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

பாடசாலை குடிநீர் பிரச்சினை மற்றும் இவ்விடயம் தொடர்பான தகவல்கள் பொலிஸாருக்கு வழங்கப்பட்டதையடுத்து நடத்தப்பட்ட தேடுதல்களின் போது சந்தேநபர்களின் நிலக்கீழ் இரகசிய அறையில் இருந்து 1440000 மில்லி வீற்றர் கோடா 19 000 மில்லிலீற்றர் மதுபான ஸ்ப்ரிட் ஆகியவற்றுடன் இந்நடவடிக்கைக்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் மீட்கப்பட்டுள்ளன. சந்தேக நபர்கள் மீது நீதிமன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# கித்துள் உற்பத்தி வீழ்ச்சி

உக்குவளை விஷேட நிருபர்

மாத்தளை மாவட்டத்தில் பல்லாண்டு காலமாக கிராம பகுதி மக்களின் தொழிலாக இருந்த கித்துள் உற்பத்தி தொழில் தற்பொழுது வீழ்ச்சியடைந்துள்ளது.

தங்கள் வாழ்வாதாரத்தை நடத்தி வந்த பல நூற்றுக்கணக்கான கித்துள் உற்பத்தியாளர்கள் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருவதாக அறியவருகிறது.

மாத்தளை மாவட்டத்தில் லக்கல, பள்ளேகம, உக்குவலை, இறத்தோட்டை, யடவத்த, பல்லேபொல போன்ற பிரதேச செயலக பிரிவுகளில் பல கிராம மக்கள் கித்துள் உற்பத்தி மூலம் தமது வாழ்வாதாரத்தை முன்னெடுத்து சென்ற போதும் கித்துள் உற்பத்தியின் வீழ்ச்சியால் மக்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகி இருப்பது அறிய வருகிறது.

கித்துள் உற்பத்தி மூலம் மேற்கொண்ட கித்துள் பாணி, கருப்பட்டி, கித்துள் மா மற்றும் கித்துள், கள்ளு போன்றவை உற்பத்தி செய்யப்பட்டாலும் தற்பொழுது இந்த உற்பத்திகளில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி காரணமாக செயலக பிரிவுகளில் வசிக்கும் உற்பத்தியாளர்கள் தமது அன்றாட வாழ்வாதாரத்தை கொண்டு நடாத்த மாற்று வழிகளில் தேடிக்கொண்டிருப்பதாக அறிய வருகிறது.

# கிழக்கின் குரல்



## மட்டக்களப்பு புகையிரத நிலையத்திலிருந்து

# இணைப்பு பஸ் சேவை இன்மையால் பயணிகள் நள்ளிரவில் நிர்க்கதி

மாளிகைக்காடு குறுப் நிருபர்

மட்டக்களப்பு புகையிரத நிலையத்திலிருந்து இரவு நேரத்தில் இணைப்பு பஸ் சேவை இல்லாமையால் கொழும்பில் இருந்து பயணிப்பவர்கள் நள்ளிரவில் வீதியோரங்களில் நிர்க்கதியாகும் அவல நிலை காணப்படுகிறது.

கொழும்பில் இருந்து மாலை 3 மணிக்கு புறப்படும் புலதுசி கடுகதி புகையிரதம் இரவு 10 மணிக்கு மட்டக்களப்பை வந்தடைகிறது. அம்பாறை மற்றும் அக்கரைப்பற்று நோக்கி பயணிக்கும் பயணிகள் நலன் கருதி இலங்கை போக்குவரத்து சபை பஸ் சேவை நடத்தப்படுவது வழமையாகும்.

இருந்தும் கடந்த சில நாட்களாக முன்னறிவிப்பு எதுவுமின்றி திடீரென பஸ் சேவை நிறுத்தப்பட்டதால் பயணிகள் இரவு வேளையில் செய்வதறியாது 12 மணி தாண்டியும் கல்முனை மட்டக்களப்பு பிரதானமாக வீதியில் கூட்டமாக பஸ்ஸுக்காக காத்திருக்க வேண்டிய நிலைக்கு உள்ளாகி வருகின்றனர்.

இதில் களுவாஞ்சிகுடி, கல்லாறு, மருதமுனை, கல்முனை, சாய்ந்தமருது, காரைதீவு, நிந்தவூர், அட்டாளச்சேனை, சம்மாந்துற, அம்பாறை மற்றும் அக்கரைப்பற்று போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த குழந்தைகள், சிறுவர்கள், பெண்கள், வயோதிபர்கள் மற்றும் நோயாளிகளும் உள்ளடங்கியிருந்தனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் புகையிரத இணைப்பு பஸ் விடயத்தில் கூடிய கவனம் செலுத்துமாறு பயணிகள் கேட்டுள்ளனர்.

## மூதூரில் மரை இறைச்சி வைத்திருந்தவருக்கு 25,000 ரூபா அபராதம்

தோப்பூர் குறுப் நிருபர்

மூதூர், கிளிவெட்டி மேன்கமம் பகுதியில் சட்டவிரோதமாக வேட்டையாடிய மரை இறைச்சியை வைத்திருந்ததாக கைது செய்யப்பட்ட ஒருவர் நேற்று (22) மூதூர் நீதவான் நீதிமன்றில் மூதூர் பொலிஸார் ஆஜர்படுத்திய போது 25000 ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.

மூதூர் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் சந்தேக நபரை சோதனைக்குட்படுத்திய போது ஒரு கிலோ 250 கிராம் மரை இறைச்சியை சந்தேக நபர் வைத்திருந்து கண்டுபிடிக்கப் பட்டது. சந்தேக நபரை கைது செய்த மூதூர் பொலிஸார் நேற்று அவரை மூதூர் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம்:

# தொடர் விளக்கமறியலிலிருந்த 05 பேர் பிணையில் விடுதலை

வெல்லாவெளி தினகரன் நிருபர்

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் பயங்கரவாதி சஹ்ரானின் பயிற்சி முகாமில் பயற்சிபெற்ற மற்றும் அவருடன் தொடர்பை பேணிவந்தமை தொடர்பாக காத்தான்குடி பிரதேசத்தில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தொடர்ந்து விளக்கமறியல் வைக்கப்பட்டிருந்த 60 பேரில் 5 பேர் நேற்று (22) வெள்ளிக்கிழமை பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

ஏனையவர்களை மே 4 ஆம் திகதி வரையிலும் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் பீற்றர் போல் உத்தரவிட்டார்.

சஹ்ரான் குழுவோடு தொடர்புடையவர்கள் என்றும் இவர்கள் ஹம்பாந்தோட்டை மற்றும் நுவரெலியா போன்ற இடங்களுக்கு பயிற்சிக்காக சென்றார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் காத்தான்குடியை சேர்ந்தவர்கள் மற்றும் சஹ்ரானின் சகோதரி மற்றும் அவரின் கணவர், உட்பட 69 பேரை கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களுக்கு எதிராக காத்தான்குடி மற்றும் மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் 4 வெவ்வேறு வழக்கு தாக்கல் செய்திருந்தனர்.

தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த அவர்களில் சஹ்ரானின் சகோதரி மற்றும் அவரின் கணவர்,ஆகியோரது வழக்குகள் நீதவான் நீதிமன்றில் இருந்து உயர் நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டதுடன் 5 பேர் வழக்கில் இருந்து விடுவித்து விடுதலை செய்யப்பட்டனர்.

இருவர் பிணையில் விடுதலை செய்யப்பட்டதையடுத்து 60 பேரும் பொலன்னறுவை, அனுராதபுரம், கேகாலை, திருகோணமலை சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டு தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இந்த நிலையில் நேற்று (22) மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது சிறைச்சாலையில் இருந்து பலத்தபாதுகாப்புடன் அழைத்துவரப்பட்ட 9 பேரும் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டனர். அதில், ஐவர் தலா 50 இலட்சம் ரூபாய் பெறுமதியான ரொக்கப்பிணை மற்றும் இரண்டு சரீரப்பிணைகளிலும் விடுதலைச் செய்யப்பட்டனர்.

அத்துடன் மாதாந்தம் 2 ஆம் மற்றும் 3 ஆம் கிழமைகளில் உள்ள ஞாயிற்றுக்கிழமையில் பிற்பகல் 4 மணிக்கும் 6 மணிக்கும் இடையில் காத்தான்குடி பொலிஸ் நிலையத்திற்கு சென்று கையொழுத்து இடுமாறு நீதவான் உத்தரவிட்டார்.

அதேவேளை ஏனைய 55 பேரையும் தொடர்ந்து மே மாதம் 4 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு காணொளி மூலம் நீதவான் உத்தரவிட்டார்.

## சம்மாந்துறையில் தேசிய நிகழ்ச்சித்திட்டம்



மாளிகைக்காடு குறுப் நிருபர்

"கமசமக பிலிசந்தர" தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்ட நிதியிலிருந்து பயனாளிகளுக்கு வாழ்வாதார பொருட்கள் மற்றும் பொது அமைப்புகளுக்கான உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம்.ஹனிபா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பாடசாலை ,பள்ளிவாசல் போன்றவற்றுக்கான போட்டோ கொப்பி இயந்திரம் மற்றும் தளபாடங்கள் வழங்கிவைக்கப்பட்டன.

இந் நிகழ்விற்கு அதிதிகளாக உதவிப்பிரதேச செயலாளர் யு.எம். அஸ்லம், பிரதேச செயலக கணக்காளர் எம்.பாரிஸ், உதவித்திட்டமிடல் பணிப்பாளர் கலாநிதி ஏ.எல்.எம். அஸ்லம், ஏ.எல்.ஏ. மஜீட் ஆகியோரும் திட்டமிடல் பிரிவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் இத்திட்டத்தின் கீழ் பயன்பெறும் ஒரு தொகுதிப் பயனாளிகளும் கலந்து கொண்டனர்.

# கந்தளாயில் துப்பாக்கிச் சூட்டில் யானை பலி



கந்தளாய் தினகரன் நிருபர்

கந்தளாய் அக்போபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சீனி தொழிற்சாலை பகுதியில் ஒன்பதாவது கால்வாய் பகுதியில் இனந்தெரியாதோரால் சுடப்பட்ட யானை நேற்று இறந்ததாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். ஐந்து நாட்களுக்கு முன்னர் இந்த யானை துப்பாக்கி சூட்டினால் பாதிக்கப்பட்டதை அறிந்து கொண்ட வைத்தியர்கள் அதற்கு தேவையான சிகிச்சைகளை வழங்கியபோதிலும் காப்பாற்ற முடியாது நேற்று(22) அந்த யானையை இறந்ததாக வனவிலங்கு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# மட்டு. மெதடிஸ்த மத்திய கல்லூரியில் திறன்விருத்தி கண்காட்சி



வெல்லாவெளி தினகரன் நிருபர்

மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரி தேசிய பாடசாலையைச் சேர்ந்த தரம் 3 மாணவர்களினாலும், பெற்றோர்களினாலும் ஒழுங்கு செய்யப்பட்ட தரம் ஒன்று மற்றும் இரண்டு மாணவர்கள் தரம் மூன்றுக்கு செல்வதற்கான "மாணவர்களின் 19 அறிமுக செயற்பாடுகளின்" இறுதிநாள் திறன்விருத்தி கண்காட்சி அங்குரார்ப்பண நிகழ்வு மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியில் நேற்று வெள்ளிக்கிழமை (22) அதிபர் இராசதுரை பாஸ்கர் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு வலயக் கல்வி அலுவலகத்தின் ஆரம்பக்கல்வி உதவிக்கல்வி பணிப்பாளர் திருமதி. உமாவதி விவேகானந்தம், ஆரம்பக்கல்வி ஆசிரியர் ஆலோசகர் ஏ.கேசவன், பிரதியதிபர் எஸ்.நந்தகோபால், வகுப்பாசிரியர்களான திருமதி.ஸ்ரீதாரணி நகுலராஜ், திருமதி.சந்திரிகா பஞ்சேந்திரன்,சிவகாமி தயானந்தராஜா மற்றும் பெற்றோர்கள், மாணவர்கள் கலந்துகொண்டார்கள்.

இதன்போது கழிவுப்பொருட்களை கொண்டு மாணவர்களின் திறன்விருத்தி மூலம் செய்யப்பட்ட 300க்கும் மேற்பட்ட கைவினைப் பொருட்கள் காட்சிப் படுத்தப்பட்டன.

இந்தக்கண்காட்சி மூலம் மாணவர்களின் தனிப்பட்ட ஆளுமை, திறன்பயிற்ச்சி, பண்புசார் நடத்தைகள்,விஷேட பண்புகள் ஆசிரியர்களால் அடையாளப்படுத்தப்பட்டு ஒவ்வொரு மாணவர்களின் கற்றச்செயற்பாடுகளையும் ஆசிரியர்கள் விருத்திசெய்யக்கூடிய வாய்ப்புள்ளது.

# கல்முனை கல்வி வலயத்தில் பெருநாள் முற்பணம்

நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்

கல்முனை வலய கல்விசார் மற்றும் கல்விசாரா முஸ்லிம் ஊழியர்கள் தமக்கான பெருநாள் முற்பணத்தை நேற்று பெற்றுக்கொண்டனர்.

முற்பணத்தை துரிதமாக வங்கிகளில்பெறும் வகையில் உத்தியோகத்தர்கள் பணம் வைப்பீடு செய்யப்பட்டதாக கணக்காளர் வை.ஹபீபுல்லாஹ் தெரிவித்தார்.

வட்டியின்றி மாதம் 1250 வீதம் 10தவணகளில் விழா முற்பண அறவீடு இடம்பெறவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இக்கொடுப்பனவு அரச திணைக்களங்கள் கூட்டுத்தாபனங்கள் நியதிச்சட்டசபைகளில் கடமையாற்றும் முஸ்லிம் ஊழியர்களுக்கு ரமழான் பெருநாளைக்கொண்டாட வழங்கப்படுகின்றமை இங்கு குறிப்பிடத் தக்கதாகும்

# கோட்டைக்கல்லாற்றில் அழகியல் கண்காட்சி



பாண்டிருப்பு தினகரன் நிருபர்

பட்டிருப்பு கல்வி வலயத்திற்குட்பட்ட கோட்டைக்கல்லாறு மகா வித்தியாலயத்தில் தரம் மூன்று மாணவர்களின் அழகியல் கண்காட்சி நேற்று அதிபர் க.செல்வராஜா தலைமையில் நடைபெற்றது.

மாணவர்களின் அழகியல் திறன் ஆற்றல்களை வெளிக்கொணரும் வகையில் பாடசாலைகளில் அழகியல் கண்காட்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெற்றுவருகின்றன. இதற்கமைய தரம் மூன்றில் கல்வி கற்கும் மாணவர்களின் கை வண்ணத்தில் உருவான பல்வேறு ஆக்கச் செயற்பாடுகள் கண்காட்சியில் ஏனைய மாணவர்களின் பார்வைக்காக வைக்கப்பட்டன.

இதில் பிரதி அதிபர் புவனேஸ்வரி இராதகிருஸ்ணன் உட்பட் ஆரம்பப் பிரிவு ஆசிரியர்கள், மாணவர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

# சட்டரீதியற்ற நிதி முதலீடு தொடர்பில் விழிப்புணர்வு செயலமர்வு






புதிய காத்தான்குடி தினகரன்நிருபர்

இலங்கை மத்திய வங்கியின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு மாவட்ட செயலக வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு தடைசெய்யப்பட்ட நிதி பரிமாற்ற நடவடிக்கைகள் தொடர்பிலான விழிப்புணர்வு செயலமர்வொன்று புதன்கிழமை (20) மட்டக்களப்பு மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இலங்கை மத்திய வங்கியின் திருகோணமலை பிராந்திய முகாமையாளர் கே.பிரபாகரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் இலங்கை மத்திய வங்கியின் திருகோணமலை கிளை முகாமையாளர் எஸ்.பிரசாந்த் மற்றும் நடைமுறைப் படுத்தல் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர்களான ரீ.சஞ்சீவன், கே.தர்மேந்திரன் ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டு விளக்கமளித்திருந்தனர்.

ஒரு நாள் செயலமர்வாக இடம்பெற்ற செயலமர்வில் வெளிக்கள உத்தியோகத்தர்கள் 100 பேர் பங்குபற்றியிருந்தனர்.

இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித்திட்டம் தொடர்பாக விளக்கமளிக்கப் பட்டதுடன், பிரமிட் வகையான தடைசெய்யப்பட்ட திட்டங்கள் தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வூட்டுமாறு வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு இதன்போது அறிவுறுத்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# கிழக்கின் குரல்



## மணிக்கணக்கில் காத்திருந்தும், மைல் தூரம் கியூவில் நின்றும் எரிபொருள் கிடைக்காது ஏமாற்றம்

**நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்**

பலமணி நேரம் காத்திருந்தும், மைல்கணக்கில் கியூவில் நின்றும் பெற்றோல் கிடைக்காமல் திரும்பிச்செல்லும் பரிதாபநிலையில் கல்முனைப்பிரதேச மக்கள் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.ரமழான் மாதம் அகோரவெயிலால் களைப்புற்ற நிலையிலே மக்கள் திரும்பிச் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலை தொடர விடாமல்,ஒருபொறிமுறை அமைத்து எரிபொருள் விநியோக பிரச்சினைக்கு தீர்வு காணுமாறு மக்கள் தெரிவிக்கின்றனர். மத்தியமுகாம், சவளக்கடை, நற்பிட்டிமுனை மருதமுனை, கல்முனை, கல்முனைக்குடி மாளிகைக்காடு, சாய்ந்தமருது பிரதேசங்களிலுள்ள பொதுமக்களே இந்த பிரச்சினையை எதிர்கொண்டுள்ளனர்.

## பாதிக்கப்பட்ட மக்களின் கோரிக்கைகள் கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும்

**கல்முனை விஷேட நிருபர்**

விலைவாசி உயர்வுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ரம்புக்கணை பிரதேசத்தில், மேற்கள்ளப்பட்ட பலாத் காரங்களை ஏற்றுக்கொள்ளமுடியாதென கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் பலத்த கண்டனம் வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது;

பாரிய பொருளாதார நெருக்கடியினால் மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். விலைவாசி உயர்வினால் வாழ்க்கைச் சுமையை தாங்கிக் கொள்ள முடியாமல் திண்டாடும் மக்கள், தீர்வு கோரி, ஆர்ப்பாட்டங்களை நடாத்துகின்றனர். இது, அவர்களது அடிப்படை உரிமையாகும். அரசியலமைப்பினால் உறுதிப்படுத்தப்பட்ட இவ்வுரிமையை அடக்க முற்படுவது மனித உரிமை மீறலாகும்.



கம்பஹா, ரத்துபஸ்வல பகுதியில் குடிநீர் கேட்டுப் போராட்டம் நடத்திய மக்கள் மீதும் இவ்வாறே பலாத்காரம் பிரயோகிக்கப்பட்டிருந்தன.

மக்களின் கோரிக்கைகளுக்கு செவிசாய்த்து, பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குவதே அரசின் கடமையாகும். அதற்குப் பதிலாக பலாத்காரங்களை கட்டவிழ்த்து விடுவதை,ஏற்க முடியாது.

சகல இனங்களைச் சேர்ந்த இளைஞர்களும் ஒன்றிணைந்து, பொருளாதார நெருக்கடிகளுக்கு தீர்வு கோரி போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இதற்கான தீர்வையே முன்வைக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

## அக்கரைப்பற்று தொழிநுட்பக் கல்லூரியில் இப்தார் நிகழ்வு



**அக்கரைப்பற்று வடக்கு நிருபர்**

அக்கரைப்பற்று தொழில்நுட்பக் கல்லூரியின் இவ்வாண்டிற்கான வருடாந்த இப்தார் நிகழ்வு, கல்லூரியின் திறந்த அரங்கில் புதன் கிழமை (20) அதிபர் எஸ்.யூ.எம். இம்தியாஸின் தலைமையில் நடைபெற்றது.

இஸ்லாமிய மார்க்க சொற்பொழிவுடன் இடம்பெற்ற இந்நிகழ்வில், அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர்கள், இராணுவ அதிகாரிகள் பாடசாலை அதிபர்கள், கல்லூரி உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், அபிவிருத்தி குழுவினர் மற்றும் நலன்விரும்பிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## ஈஸ்டர் தின நினைவேந்தல்களில் பல்லின சமூகத்தவர்களும் பங்கேற்பு

**பெரியபோரதீவு தினகரன் நிருபர்**

மட்டக்களப்பு சீயோன் தேவலாயத்தில் இடம்பெற்ற தற்கொலை குண்டு தாக்குதலில் உயிரிழந்தவர்களின் மூன்றாம் ஆண்டு நினைவு நினைவேந்தல்,

சீயோன் தேவாலயத்திலும் காந்திபூங்கா மற்றும் கல்லடி பாலத்துக் கருகிலுள்ள நினைவு தூபியிலும் வியாழக்கிழமை (21) இடம்பெற்றன.இதில், உயிரிழந்தவர்களின் உறவுகள் உட்பட பொதுமக்கள் கலந்து கொண்டனர்.உயிரிழந்தோருக்கு ஆத்மசாந்தி வேண்டி பிரார்த்தனைகளும்,விஷேட அஞ்சலியும் செலுத்தப்பட்டு.இதில் கலந்துகொண்டோர் மிகக் கவலைதோய்ந்த முகத்துடன் காணப்பட்டனர்.

இதுபோன்று நாட்டின் பல பாகங்களிலும் ஈஸ்டர் தாக்குதலில் பலியானோர் மற்றும் பாதிப்புற்றோருக்காக ஆராதனைகள் நடந்ததுடன்,இத் தாக்குதலுக்குப் பின்னாலுள்ள சக்திகளை ஆடையாளம் காட்டுமாறு அமைதியான ஆர்ப்பாட்டங்களும் நடத்தப்பட்டன. இதற்காக அமைக்கப்பட்ட நினைவுத்தூபிகள் மற்றும் பிரார்த்தனை நடைபெற்ற இடங்களில் வெள்ளைக் கொடிகளும் பறக்கவிடப்பட்டன.இந்த வைபவங்களில் பல்லினத்தையும் சேர்ந்த மக்கள் கலந்து கொண்டனர்.

## வாகரைப்பிரதேசத்தில் மக்கள் குறைகேள் கலந்துரையாடல்

**பாசிக்குடா நிருபர்**

மட்டக்களப்பு வாகரை பிரதேச சபையில் மக்கள் குறை தீர்மானம் என்ற தொனிப்பொருளில், விஷேட நிகழ்வு இடம்பெற்றுள்ளது. பிரதேச சபை உறுப்பினர்கள், சிவில் அமைப்புக்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் ஆகிய தரப்புக்களை ஒன்றணைத்து இந்த நிகழ்வு இடம்பெற்றது. மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், மத்திய அரசாங்கம் மற்றும் பிரதேச சபையால் தீர்க்கப்படவேண்டியவை, குறித்து கலந்துரையாடப்பட்டது.

இதில் குறிப்பாக கதிரவெளியில் அமைக்கப்படவுள்ள இல்மனைற் தொழிற்சாலை,இறால் வளர்ப்பு பண்ணை, காணி அபகரிப்பு, மணல் அகழ்வு, சட்டவிரோத கசிப்பு உற்பத்தி,இளவயது திருமனம்,சிறுவர் துஷ்பிரயோகம், சட்டவிரோத மீன் பிடி நடவடிக்கைக்கான சுருக்கு வலை வேலை வாய்ப்பு, போன்ற பல்வேறு விடயங்களுக்கு எவ்வாறு தீர்வு காண்பது பற்றி கலந்துரையாடப்பட்டது. அத்துடன் பிரதேச சபை தொடர்பான விடயங்களான குடிநீர் பிரச்சினை, வீதி அமைத்தல், தெரு மின் விளக்குகள் பொருத்துதல், மலசல கூடவசதி, யானை வேலி அமைத்தல், மக்கள் விரும்பாத வியாபார நடவடிக்கைக்கு அனுமதிபத்திரம் வழங்குதல், போன்ற விடயங்கள் கவனத்தில் கொள்ளப்பட்டன.

## சாய்ந்தமருதில் எரிபொருளுக்கு வரலாறு காணாத நீண்ட வரிசை



**மாளிகைக்காடு குறூப் நிருபர்**

சாய்ந்தமருது பிரதேச எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றில், எரிபொருள் நிரப்புவதற்காக எரிபொருள் நிரப்பு நிலைத்திலிருந்து இருபுறமும் சுமார் இரண்டு கிலோ மீற்றர் தூரத்திற்கு வரலாறு காணாத நீண்ட வரிசை நேற்று காணப்பட்டது.

அதிகாலையிலிருந்தே வாகனங்கள் தொடராக காணப்பட்டதுடன், சுட்டெரிக்கும் வெயிலில் இளைஞர்கள், வயோதிபர்கள் பெண்கள் எனப் பலரும் நீண்ட வரிசையில் நின்று கொண்டிருந்தனர்.இதனால்,

அக்கரைப்பற்று கல்முனை பிரதான வீதியில் போக்குவரத்து நெரிசலும் ஏற்பட்டது.இதனைச் சீர் செய்வதில் சாய்ந்தமருது வீதிப் போக்குவரத்து பொலிஸார் ஈடுபட்டனர்.

## காரைதீவு மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் விநியோகம்

**நமது நிருபர்**

காரைதீவு விவேகானந்தா விளையாட்டுக் கழகத்தின் தலைவரும் காரைதீவு பிரதேச சபை உறுப்பினருமான லயன் திரு.எஸ்.நேசராசா மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வு காரைதீவு விவேகானந்தா விளையாட்டு கழகத்தின் தலைமை காரியாலயத்தில் விவேகானந்தா விளையாட்டுக் கழகத்தின் செயலாளர் கே.உமாரமணன் தலைமையில் இடம்பெற்றது.

ராமகிருஷ்ண மிஷன் ஆண்கள் பாடசாலையின் அதிபர் திரு. டீ.யோகநாதன் பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன், விவேகானந்தா விளையாட்டுக் கழகத்தின் சிரேஷ்ட உறுப்பினர்களான திரு வேற்குமரன் மற்றும் ஜெயகோபன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

சுமார் ஒரு இலட்சம் பெறுமதியான கற்றல் உபகரணங்கள் கழகத்தின் தலைவர் திரு லயன்.எஸ்.நேசராசாவினால், தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் கருத்து தெரிவித்த நேசராசா, காரைதீவு மண்ணின் கல்வி வளர்ச்சிக்காக எதிர்காலத்தில் பலதரப்பட்ட சேவைகளை செய்ய தயாராக உள்ளதாகத் தெரிவித்தார்.

## மாணவர்களின் விடுகை விழா

**காரைதீவு குறூப் நிருபர்**

அன்னமலை ஸ்ரீ சக்தி வித்தியாலயத்தில் கல்வி பயின்று தரம் ஆறுக்குச் செல்லும் மாணவர்களுக்கான விடுகை விழாவும்,தரம் 01 மாணவர்களை வரவேற்கும் நிகழ்வும் அண்மையில், அதிபர் பொன். பாரதிதாசன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், சம்மாந்துறை வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார்.

பாடசாலையின் இணைப்பாளர் எஸ்.குணரெட்ண, அன்னமலை சமூக செயற்பாட்டாளர் தா.சிவகுமார் ,அன்னமலை வடபத்ரகாளி அம்மன் ஆலய தலைவர் எஸ். சுரேந்திரன் ஆகியோர் சிறப்பு அதிதிகளாக கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில், முதலாந்தர மாணவர்களுக்கு வழங்கப்பட்ட நினைவுச்சின்னம் கற்றல் உபகரணங்களடங்கிய பக்கற்மாலை போன்ற சகல பொருட்களையும் புரவலர் சிவகுமார் தம்பதியர் வழங்கி வைத்தனர்.

விடுகை பெற்று செல்லும் மாணவர்களுக்கான கற்றலுபகரணங்களும் இதன்போது வழங்கப்பட்டன.

## மூதூர் 'ஹஸ்ரா' பாடசாலை வகுப்பறை கட்டிடம் திறந்து வைப்பு

**மூதூர் தினகரன் நிருபர்**

மூதூர் 'ஹஸ்ரா' பாலர் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள், புத்தகப்பைகள் வழங்கப்பட்டு புதிய வகுப்பறை கட்டிடமும் திறந்து வைக்கப்பட்டது.

மூதூர் ஜாமியா சனசமூக நிலையத்தின் தலைவர் கே.எம்.நபீர் தலைமையில், பாலநகர் பாலர் பாடசாலை வளாகத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கல்வி பயிலும் மாணவர்களின் தாய்மார்களும் அழைக்கப்பட்டு புதிய வகுப்பறை கட்டிடம் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மூதூர் பிரதேச சபை தவிசாளர் எம்.எம்.ஏ.அரூஸ், மூதூர் வலயக்கல்வி அலுவலக உதவிக்கல்விப் பணிப்பாளர் வி.எம்.லாபீர், மாவட்ட உள்ளூராட்சி திணைக்கள சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். முரளீதரன், மூதூர் பிரதேச சபை செயலாளர் வி.சத்தியசோதி, பிரதேச சபை உறுப்பினர்களான ஜே.எம்.ஜெசீன், கே.பி. நிஸ்மி மற்றும் பெற்றோர்கள் எனப் பெரும் திரளானோர் கலந்து கொண்டனர்.

## நான்கு வயதுச் சிறுவனுடன் தனியாக தனுஸ்கோடி சென்ற பெண்

**பெரியபோரதீவு தினகரன் நிருபர்**

நான்கு வயது சிறுவனுடன், தனி ஒரு பெண்ணாக தனது குடும்பத்தையும் அழைத்துக் கொண்டு தனுஸ்கோடி

சென்றடைந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதர நிலைமை யை எதிர்கொள்ள முடியாமல் இப்பெண் தனியாக, பிள்ளைகளை அழைத்துக் கொண்டு தனுஸ்கோடி சென்றுள்ளார். இவ்வாறு வருவோர் தொகை அதிகரிக்கலாம் என அஞ்சப்படுவதால்,

சர்வதேச கடல் எல்லை பகுதியில் கண்காணிப்பை தீவிரபடுத்த வேண்டுமென இந்திய கடலோர பாதுகாப்பு குழு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இவர்கள் மூவரும் கடந்த (17 ) மட்டக்களப்பிலிருந்து புறப்பட்டு, பின்னர் தலைமன்னாரிலுள்ள விடுதியில் 3 நாட்கள் தங்கியிருந்து திங்கட்கிழமை (20) அதிகாலை 2 மணியளவில் கடல்வழிப் பயணத்தை ஆரம்பித்துள்ளனர்.

இவ்வாறு புறப்பட்ட இவர்கள், அதிகாலை ஐந்து மணியளவில் தனுஸ்கோடியைச் சென்றடைந்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டம் திமிலத்தீவு பகுதியை சேர்ந்த 37 வயதுடைய வாசினி, அவரது பதினொரு வயது மகள் நைனிக்கா மற்றும் நான்கு வயது மகன் ரங்கீசன் என ஒரே குடும்பத்தை சேர்ந்த மூன்று பேரே, இவ்வாறு சென்றுள்ளனர்.

பைவபர் படகில் புறப்பட்டு திங்கட்கிழமை (20) அதிகாலை சுமார் 3 மணி அளவில் தனுஷ்கோடி அரிசிசல்முனை கடற்கரைக்குச் சென்று இறங்கி உள்ளனர்.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு சென்ற ராமேஸ்வரம் பொலிஸார் இலங்கைத் தமிழர்களை மீட்டு, மண்டபம் காவல் நிலையம் அழைத்து சென்று விசாரணை நடத்தி வருகின்றனர்.

## பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு ரமழான் உலர் உணவுப் பொதிகள்

**கிண்ணியா நிருபர்**



பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கான ரமழான் கால உலர் உணவுப்பொதிகள் புதன் கிழமை (20) கிண்ணியா மத்திய கல்லூரி மைதானத்தில் வழங்கப்பட்டன."குளோபல் இஹ்ஸான்" நிறுவனத்தின் அனுசரணையுடன், கிண்ணியா பிரதேச செயலாளர்

எம்.எச். முஹம்மது கனியின் தலைமையில்,இந்நிகழ்வு இடம் பெற்றது.

கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட முப்பத்தொரு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைச் சேர்ந்த பெண் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கும், நிரந்தர நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் இந்த உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.



வை.எம்.எம்.ஏ பேரவைத் தலைமையகத்தினால் வழங்கப்பட்ட ரூபா 6000 பெறுமதியான உலருணவுப் பொதிகள் நேற்று (21) நிந்தவூர் பிரதேசத்திலுள்ள பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன. நிந்தவூர் வை,எம்,எம்,ஏ தலைவர் ஏ.எல்.ஏ.றபீக் பிர்தௌஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், முன்னாள் உதவிச் செயலாளர் எம். ஐ.உதுமாலெவ்வை, அம்பாரை மாவட்டப் பணிப்பாளர் எம்.ஐ.எம்.றியாஸ், பாலமுனை, அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று பிரதேசத் தலைவர்களும் பங்கு கொண்டு சிறப்பித்தனர். படம்: நிந்தவூர் தினகரன் விஷேட நிருபர்

## அம்பாறை மாவட்டத்தில், முச்சக்கர வண்டிகளில் மீற்றர் பொருத்த கோரிக்கை

**அட்டாளைச்சேனை மத்திய நிருபர்**

அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்களில் பயணிகள் சேவையில் ஈடுபடும்முச்சக்கர வண்டிகள்; அதிக கட்டணம் அறவிடுவதாக பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அண்மைய எரிபொருள் விலையேற்றங்களைத் தொடர்ந்து, நாடளாவிய ரீதியில் முச்சக்கர வண்டிக் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளமை தெரிந்ததே.

எனினும், அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்களில் பயணிகள் சேவையில் ஈடுபடும் முச்சக்கர வண்டிகளின் உரிமையாளர்கள் அல்லது சாரதிகள் அங்கீகரித்த கட்டணத்தை விடவும் அதிக கட்டணம் அறவிடுவதாகவும். இதனால் முச்சக்கர வண்டிப் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுவருவதாகவும்பயணிகள்சுட்டிக்காட்டுகின்றனர்.

சிறிதளவு தூரத்திற்கும் அதிக கட்டணம் கோரும் முச்சக்கர வண்டிகளின் சாரதிகள், தகுதி, தராதரம் பாராது பயணிகளுடன் முரண்பட்டுக் கொள்ளும் சம்பவங்களும் அவ்வப்போது இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களில் சேவையில் ஈடுபடும் முச்சக்கர வண்டிகளுக்கு இதுவரை தூரத்தைக் கணிக்கும் மீற்றர் பொருத்தப்படவில்லை. இதனால் நினைத்த மாத்திரத்தில் அதிக கட்டணம் அறிவிடுவதாக தெரிவிக்கப்படுகின்றது. ஆகையால், அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்களில் தற்பொழுது பயணிகள் சேவையில் ஈடுபடும் முச்சக்கர வண்டிகளுக்கு மீற்றர் பொருத்தி, அதனடிப்படையில் கட்டணம் அறவிடுவதற்கான அவசர நடவடிக்கைகளை சம்பந்தப்பட்டவர்கள் மேற்கொள்ள வேண்டுமென கோரிக்கை விடுக்கப்படுகின்றது.

# நகர்வலம்



# உக்ரைன் போர் ஆப்கான் மீதான உலக கவனத்தை திசைதிருப்பிவிட்டது

## அமெரிக்க ராஜதந்திரி கவலை

உக்ரைன் ரஷ்யா மோதல் காரணமாக ஆப்கானிஸ்தான் நிலைமைகளில் உலக நாடுகள் கொண்டிருந்த கரிசனை வேறு பக்கமாகத் திரும்பிவிட்டதாகவும் அங்கே பொருளாதார சீரழிவும் மக்களின் வாழ்க்கைத் தரமும் படுமோசமாகி வருவதாகவும் ஆப்கானிஸ்தானில் பணியாற்றிய அமெரிக்க இராஜதந்திரியான ரொஸ் வில்சன் தெரிவித்துள்ளார்.

காமா செய்திச் சேவைக்கு அவர் வழங்கிய பேட்டியில், இரண்டாம் தடவையாக ஆட்சிபீடமேறியுள்ள தலிபான்கள் முறையாக ஆட்சி செய்வார்கள் என எதிர்பார்க்கப்பட்டதாகவும் ஆனால் நடைமுறையில் அவர்கள் மாறியிருப்பதாகக் கருத முடியவில்லை என்றும் குறிப்பிட்டிருந்தார்.

ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்க மற்றும் பன்நாட்டுப் படைகளின் வெளியேற்றத்தின் போது காபூலில் பணியாற்றிய இவர் ஒரு இலட்சத்து 24 ஆயிரம் ஆப்கானியர்களின் வெளியேற்றத்துக்கு தான் உதவியதாகவும் அமெரிக்கப் படையினர் தனது முயற்சிகளுக்கு பக்கபலமாக இருந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

"ஆப்கானிஸ்தானில் பல பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வேண்டியிருக்கிறது. ஆனால் உக்ரைன் போர் ஆப்கான் மீதான கவனத்தை திசை திருப்பிவிட்டது. அந்நாடு பொருளாதார மற்றும் மனிதாபிமான ரீதியாக பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. அந்நாட்டுக்கு உதவிகள் தேவைப்படுகின்றன. அமெரிக்கா ஆப்கானிஸ்தானை மறந்துவிடலாகாது. மேலும் அங்கிருந்து வெளியேறி அமெரிக்காவில் தஞ்சமடைந்திருக்கும் எமக்காக வேலைசெய்த ஆப்கானியர்களுக்கு அமெரிக்கப் பிரஜைகள் என்ற வகையில் உதவ வேண்டும்" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

2021 ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டில் ஆப்கானிஸ்தானின் தனிநபர் வருமானம் மூன்றில் ஒரு வீதத்தால் வீழ்ச்சி அடைந்துள்ளதாகவும் 2007 ஆம் ஆண்டு முதல் அந்நாட்டில் ஏற்பட்டு வந்த பொருளாதார வளர்ச்சி தலிபான் வருகையின் பின்னர் வீழ்ச்சி கண்டிருப்பதாகவும் கடந்த புதன்கிழமை வெளியான உலக வங்கி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மோசமான வறுமைக்கு இது இட்டுச் செல்லும் என்றும் உலக வங்கி எச்சரித்துள்ளது.

23 மில்லியன் மக்கள் பட்டினியில் வாடுவதாகவும் 95 சதவீதமான மக்கள் மூவேளையும் உண்பதற்கு போதுமான உணவு கிடைக்காமல் தவிப்பதாகவும் ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்டிருக்கும் கணக்கெடுப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

புதிய அமைச்சரவை நியமனத்தில்

# ஹம்பாந்தோட்டை மாவட்டத்திற்கு எவ்வித கெபினட்டும் இல்லை

ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் அண்மையில் நியமிக்கப்பட்ட அமைச்சரவை நியமனத்தின் போது இம் முறை ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலுள்ள ஒருவரும் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களாக (கெபினட்) நியமிக்கப்படவில்லையென தெரிவிக்கப்படுகிறது.

சென்ற அமைச்சரவையில் இம் மாவட்டத்தைச் சேர்ந்த மூவர் அரசாங்கத்தின் அமைச்சரவையில் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களாக நியமிக்கப்பட்டிருந்தனர்.

இவர்களில் சமல் ராஜபக்ஷ வடிகாலமைப்பு அமைச்சராகவும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் மஹிந்த அமரவீர சுற்றாடல் அமைச்சராகவும், பிரதமரின் புதல்வர் நாமல் ராஜபக்ஷ இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சராகவும் நியமிக்கப்பட்டிருந்தனர்.

இம் முறை அமைச்சரவை நியமனத்தின் போது இவர்களில் யாருக்கும் எவ்வித அமைச்சுப் பதவிகளும் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னாள் அமைச்சர்களான சமல் ராஜபக்ஷ, மஹிந்த அமரவீர ஆகியோர் இலங்கை அரசியலில் சிரேஷ்ட உறுப்பினர்களாவர்.

மேற்படி மாவட்டத்திற்கு புதிய அமைச்சரவையில் பிரதி அமைச்சர் பதவி ஒன்று மாத்திரம் வழங்கப்பட்டமையும் விசேட அம்சமாகும். முன்னாள் பிரதி அமைச்சர் டி. வீ. சானக சுற்றுலா மற்றும் மீன்பிடி பிரதி அமைச்சராக ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு தமிழ்ச் சங்கத்தில்

# பேராசிரியர் சந்திரசேகரம் நினைவஞ்சலிக் கூட்டம்



பேராசிரியர் சோ. சந்திரசேகரத்தின் நினைவஞ்சலிக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் பேராசிரியர் தை. தனராஜ் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் இந்து கலாசார முன்னாள் இராஜாங்க அமைச்சர் பி.பி. தேவராஜ், கிழக்கு பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் மா.செ. மூக்கையா, கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் தலைவர் சட்டத்தரணி என். கண்டீபன், சாஹித்திய ரத்னா தெளிவத்தை ஜோசப், பேராசிரியர் மா. கருணாநிதி ஆகியோர் மலரஞ்சலி செலுத்துவர்.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், மலையக மக்கள் முன்னணியின் தலைவர் வே. இராதாகிருஷ்ணன், இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் கல்விபீட தலைவர் பேராசிரியர் சசிகலா குகமூர்த்தி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் செந்தில் தொண்டமான், புனர்வாழ்வு அமைச்சின் முன்னாள் பணிப்பாளர் ஏ.எம். நஹியா, இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் சமூக விஞ்ஞானத் துறை பேராசிரியர் ஏ. எஸ். சந்திரபோஸ், புனர்வாழ்வு மீள்குடியேற்றம், சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் முன்னாள் சிரேஷ்ட ஆலோசகர் முனைவர் சதீஸ்குமார் சிவலிங்கம், விவேகா பயிற்சி நிலையத் தலைவர் கே. டி. குருசாமி, பேராதனை பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் ஸ்ரீ பிரசாந்தன், தினகரன், வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர், வீரகேசரி பிரதம ஆசிரியர் எஸ்.ஸ்ரீகஜன், நவமணி ஆசிரியர் என்.எம். அமீன், டி. தவக்குமார் ஆகியோர் அஞ்சலி உரையாற்றுவர்.


# 44 ஆவது வருடாந்த பொதுக்கூட்டம்



இலங்கை நிர்வாக மற்றும் நிபுணத்துவ செயலாளர்கள் சங்கத்தின் 44 ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் அண்மையில் கொழும்பு Movenpick ஹோட்டலில் நடைபெற்றது. பெருந்திரளானோர் கலந்து கொண்ட இந்நிகழ்வில் 2022/2023 ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாகிகள் பின்வருபவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தலைவர் ; செந்ட்ரா தோமஸ், உப தலைவர்; ருச்சிரா அபேவர்தன, செயலாளர்; ஷிரீன் ராஜு, உதவிச் செயலாளர்; நிலாந்தி பலிஹவதன, பொருளாளர்; நெரஞ்சலா குணதிலக்க, உதவி பொருளாளர்; அஸ்ரா ரெயால்தீன், ருவீனா காதர் முன்னாள் தலைவர், அயோனி ரங்கலா, ரெபேக்கா வென்டோர்ட், நிர்மலி பெர்னாண்டோ, கயானி அல்விஸ், டெலானி ஜெயசூரியா மற்றும் சஞ்சீவனி பெர்னாண்டோ ஆகியோர் உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

படம்: ருஸைக் பாரூக்

# 'ஓர் ஒப்பனை இல்லாத முகம்' நாளை நூல் அறிமுக விழா



எஸ். கே. காசிலிங்கம் தொகுத்த 'ஓர் ஒப்பனை இல்லாத முகம்' என்ற நூலின் அறிமுக விழா நாளை 24 ஆம் திகதி மாலை 6 மணிக்கு கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் வினோதன் மண்டபத்தில் நடைபெறும்.

பேராசிரியர் வ. மகேஸ்வரன் தலைமையில் நடைபெறும் நூல் அறிமுக விழாவில் எழுத்தாளரும் பதிப்பாளருமாகிய மல்லியப்பூ சந்தி திலகர், சாஹித்திய ரத்தனா தெளிவத்தை ஜோசப், வீரகேசரி பிரதம ஆசிரியர் எஸ். கே. கஜன், தினகரன், வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர், தினக்குரல் பிரதம ஆசிரியர் ஆர். பி. ஹரன், தமிழன் பிரதம ஆசிரியர் ஆர். சிவராசா, கலாபூசணம் கலைச்செல்வன், கலாபூசணம் தம்பிஐயா தேவதாஸ், விவாகப் பதிவாளர் கலைஞர் ஆர். ராஜசேகரன், வைத்திய கலாநிதி ரகுநாதன் நிர்மலா ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொள்வர்.

இலக்கியப் புரவலர் ஹாஷிம் உமர் முன்னிலையில் நடைபெறும் அறிமுக விழாவை உடுவை எஸ். தில்லை நடராசா தொகுத்து வழங்க பூபாலசிங்கம் புத்தகசாலை உரிமையாளர் சிறீதர் சிங் நன்றியுரையாற்றுவார்.

# மெனிக்கின்ன சிவ தேவாலயம் மூலம் பல சமூக நலன்புரி நடவடிக்கைகள்

நாடு முகம் கொடுத்துள்ள சிக்கலான சந்தர்ப்பத்தில் மத தலங்களின் மதத்தலைவர்கள் தலையிட்டு மக்களுக்கு சேவைகளை வழங்க வேண்டும் என மெனிகின்ன சிவ தேவாலய, குருநாகல் தப்பொக்க தேவாலய, பொலன்னறுவை கதுருவெல தேவாலய போன்ற தேவாலயக்களின் தலைமை பூசாரி அமானுஷ்ய விஞ்ஞான கலாநிதி வீரசாமி தெரிவித்தார்.

அவர் இதனை பள்ளேகல சிவ தேவாலயத்தில் புத்தகங்களை வழங்கும் நிகழ்விலேயே தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்.....

மக்கள் உதவியற்றவர்களாக உள்ள வேளையில்தான் கோயில்களுக்கு வருகிறார்கள்.அவர்களுக்கு உதவி செய்ய வேண்டியது எமது கடமையாகும். நான் அதனை சரிவர செய்கின்றேன். நான் மக்களுக்கு உதவும் நடவடிக்கையை முதன் முதலில் சுனாமி அனர்த்தத்தின் போது பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு மக்களுக்கு உதவுவதன் மூலம் ஆரம்பித்தேன். கல்முனை, அக்கரைப்பற்று பிரதேசங்களில் பல பணிகளை ஆற்றினேன்.



எனது செலவில் இதுவரை பௌத்த விகாரைகளுக்கு புத்தர் சிலைகளையும், பிக்கு மாணவர்களுக்காக விடுதிகளையும் அமைத்துக் கொடுத்துள்ளேன். நான் அதனை பிரபலப்படுத்த விரும்புவதில்லை.குறைந்த வருமானம் உடைய குடும்பங்களுக்காக உலர் உணவுகள், பிள்ளைகளுக்காக பாடசாலை உபகரணங்கள் ஆயிரக் கணக்கில் பெற்றுக் கொடுத்துள்ளேன். வருடத்தில் நான்கு தடவைகள் இவ்வாறு பெரும் பொருட்செலவில் தான் இதனை புரிகின்றேன். இது எனக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது.

எமது சமூகத்தில் உள்ள பாரிய பிரச்சினை போதைக்கு எமது இளைஞர்கள் அடிமையாக இருப்பதாகும். அவ்வாறான இளைஞர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கும் நடவடிக்கையும் ஆரம்பித்துள்ளேன். அவ் இளைஞர்கள் தற்போது அதிலிருந்து மீண்டு புதிய வாழ்க்கையை ஆரம்பித்துள்ளார்கள்.

மதத்தலங்களில் இவ்வாறான மக்களுக்கான நலன்புரி நடவடிக்கைகளே நடைபெற வேண்டும் என்பது எனது கருத்தாகும். என்னிடம் உதவி கேட்டு வரும் அனைவருக்கும் இன, மத, குல பேதமின்றி அனைவருக்கும் நான் உதவுகிறேன்.

அனைத்து மக்களும் சந்திக்கும் இடமாக இந்த சிவ தேவாலயம் அமைந்துள்ளது.

நல்லவற்றை செய்யும்போது அதில் தவறுகளை தேடுவார்கள். அதன் பின்னர் ஏசுவார்கள், கற்களால் தாக்குவார்கள் அது சமூகத்தின் தன்மையாகும். அவற்றைக் கருத்தில் கொள்ளாது எமது பயணத்தை தொடர வேண்டும்.

தனது இராஜினாமாவை அறிவித்த

# கூட்டுத்தாபன தலைவருக்கு கோப் குழு மீண்டும் அழைப்பு

கோப் குழுவுக்கு அழைக்கப்பட்டிருந்த போது தனது இராஜினாமாவை அறிவித்த இலங்கை கட்டடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தின் தலைவர் மீண்டும் கோப் குழுவுக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (கோப்) அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் (பேராசிரியர்) சரித ஹேரத் தலைமையில் நேற்று முன்தினம் (21) கூடிய போதே அந்தக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் அழைக்கப்பட்டிருந்தார்.

கடந்த ஏப்ரல் 19 ஆம் திகதி அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவுக்கு வரையறுக்கப்பட்ட இலங்கை கட்டடப் பொருட்கள் கூட்டுத்தாபனம் அழைக்கப்பட்டிருந்ததுடன் இக்கூட்டத்துக்கு அந்தக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் வருகை தருவதில்லை என அன்றைய தினம் வருகை தந்த அதிகாரிகள் தெரிவித்தனர். கூட்டுத்தாபனத்தின் தலைவர் கடந்த ஏப்ரல் 18 ஆம் திகதி முதல் அதாவது கோப் குழுவுக்கு அழைக்கப்பட்டிருந்த தினத்துக்கு முன்னைய தினம் தனது இராஜினாமாவை அறிவித்துள்ளதே இதற்கான கரணம் என அதிகாரிகள் தெரிவித்தனர். எனினும் இது தொடர்பில் பணிப்பாளர் சபையினதும் அமைச்சினதும் அனுமதி இதுவரை வழங்கப்படவில்லை என்பதால் அவரது இராஜினாமா சட்டரீதியற்றது என்பதால் மீண்டும் கோப் குழுவுக்கு அழைக்க நடவடிக்கை எடுத்ததாக குழுவின் தலைவர் இதன்போது தெரிவித்தார். அதற்கமைய, வரையறுக்கப்பட்ட இலங்கை கட்டடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தின் தலைவர் கோப் குழு முன்னிலையில் அழைக்கப்பட்டிருந்தார்.



தான் இந்தக் கூட்டுத்தாபனத்தின் தலைமை பதவியிலிருந்து இராஜினாமா செய்தது, கூட்டுத்தாபனத்தை கோப் குழு முன்னிலையில் அழைத்த காரணமா என கோப் குழுவின் தலைவர் இங்கு வினவினார். ஒரு வர்த்தகரான தனக்கு ஓய்வில்லை என்பதால் இந்தக் கூட்டுத்தாபனத்திலிருந்து இராஜினாமாச் செய்ய தீர்மானித்ததாக அவர் குறிப்பிட்டார்.

பொது நிதியின் கீழ் இயங்கும் நிறுவனமொன்றின் அதிகாரிகளை எந்த நேரத்திலும் கோப் குழு முன்னிலையில் அழைக்க முடியும் என்பதால் அவரை இவ்வாறு அழைத்ததாக கோப் குழுவின் தலைவர் கூறினார். அதேபோன்று, இந்த இராஜினாமா உரிய முறையில் இடம்பெறவில்லை எனவும் கோப் குழுவின் தலைவர் மேலும் தெரிவித்தார்.

காலிமுகத்திடல் போராட்டத்தில்;

# தமிழரை இணைந்து கொள்ள கோரும் தார்மீக உரிமை இல்லை

## கலாநிதி என். குமரகுருபரன் தெரிவிப்பு

இன்றைய நெருக்கடியில் நாமும் தமிழராக, நாமும் இந்நாட்டு மக்களே என போராட்டம் நடத்துவது வேறு. ஆனால் காலி முகத்திடல் போராட்டத்தில் தமிழர் நம்மை இணைந்து கொள்ள கோரும் தார்மீக உரிமையை அதனை முன்னெடுப்பவர்கள் இழந்து நிற்கின்றார்கள் என முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினரும் தமிழ் தேசிய பணிச் சபைத்தலைவருமான கலாநிதி என். குமரகுருபரன் தெரிவித்தார்.

தமிழினம் இவ்விதமான உணவுத் தட்டுப்பாடு பொருளாதார தட்டுப்பாடு மிக மோசமான பெட்ரோல், டீசல் தட்டுப்பாடுகளுக்கு துயரத்துடன் எதிர் நோக்கிய காலகட்டங்களில் பரஸ்பரம் இவர்களும் நம்மவர்கள் இலங்கையர்கள் என குரல் கொடுக்கவில்லை. ஆனால் இந்தியா உணவுப்பொதிகளை வான் வழியாக வந்துகூட போட்டது. அப்பாவிகளின் படுகொலைக்காக கூட தென்னிலங்கை இவ்விதம் போராட்டம் நடத்தவில்லையே. நீதி கிடைக்க கோரவுமில்லையே.

எனவே இன்றைய நெருக்கடியில் நாமும் தமிழராக நாமும் இந்நாட்டு மக்களே என போராட்டம் நடத்துவது இயல்பு. இதுவேறு. ஆனால் காலி முக போராட்டக்காரர்களுடன் இணைந்து கொள்வதென்பது வேறு. இணைந்து கொள்ளுங்கள் என கோரும் தார்மீக உரிமையையும் அதனை முன்னெடுப்பவர்கள் இழந்து நிற்கின்றார்கள்.

காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் மீதான உயர் சமூக நீதி வரைமுறைகள் ரம்புக்கனை போராட்டக்காரர்களுக்கு கிட்டாமல் போனது ஏன் எனும் கேள்வி எழுகின்றது . நீதியிலும் வகுப்பு வாதமா என விசாரணை நடத்தப்பட வேண்டும்.

நாம் இலங்கையர் எனும் உணர்வோடு சுதந்திர போராட்டத்தை முன்னெடுத்தவர்களில் முன்னணி தமிழ் தலைவர்களும் தமிழ், மலே, முஸ்லீம் தலைவர்களும் அடங்குவர்.

சிங்கள தலைவர்களுக்கு நீதி கோரி பிரித்தானியா சென்று வெற்றி கொண்டு அவர்களை விடுவித்தவர் நம் தமிழ் தலைவரே. காலிமுகத்திடல் போராட்டத்தில் இன்று தேசிய கீதத்தை சிங்களத்தில் எழுதி தமிழில் பாடியதை தவறு என எதிர்ப்பை வெளியிட்டவரும் ஒரு பௌத்த பிக்குவே. எனவே நாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை வெற்றிகொள்ள நாமும் எதிர்ப்பை வெளியிடுவோம் என அவர் தெரிவித்துள்ளார்.

“பவள இதழ்களில் ஒளிபொருந்திய வாளாக மின்னும் புன்னகை”

“மைதீட்டி எழுதப்படாத நீண்ட செங்கயல் விழிகள்”

## சீத்தலை சாத்தனாரின் உவமையில்

# எழிலரசி மணிமேகலை



மண்டபத்தின் நடுவில் நறுமணம்வீசும் மிருதுவான மெத்தைகொண்ட பள்ளியறை. அரசிளங்குமரன் பள்ளியில் அமர்ந்திருக்க இரண்டு இளம்பெண்கள் அவன் இருபுறமும் நின்று சாமரம் வீசிக்கொண்டிருந்தனர்.

இளவரசன் உதயகுமாரன் வேகவேகமாக வந்த சித்ராபதியை ஓர் ஆசனத்தில் அமரச்சொன்னான்.

“சித்திராபதி! இப்படி மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்க எதற்கு அவசரமாக வந்தாய்? சொல்லியிருந்தால் நான் தேர் அனுப்பியிருப்பேனே? புத்த பிக்குணியான உன் பெயர்த்தி மணிமேகலை எப்படி இருக்கிறாள் சரி என்ன பருகுகிறாய்?



சில்லென்று பழச்சாறு கொண்டு வரச் சொல்லட்டுமா? யாரங்கே?” என்றான் உதயகுமாரன்.

“மன்னா! நான் வரும்வழியில் நன்கு ஓங்கி வளர்ந்த திருமணிக் காஞ்சிமரத்தைப் பார்த்தேன். அந்த மரத்தின் கிளைகளில் குருகு ஒன்று கூடுகட்டி முட்டையிட்டுள்ளது. பாடல் பெறும் அளவிற்கு ஓங்கிய பரதத்தில் நாடகம் (நாடு+அகம்) போற்றும்வண்ணம் நலன்கள் நிறைந்த, பலரும் ஆசைப்படும் வண்ண மலர் ஒன்று தன் இதழ்விரித்தது. எதற்காக? உதயகுமாரன் என்ற வண்டு ஒன்று அதன்மீது அமர்ந்து அளாவி அதன் தேனைப் பருகுவதற்காக. அந்த மலர் எங்கே என்று கேட்கிறீர்களா? ஊர்ப்புறத்தே உள்ள உலக அறவி என்ற அம்பலத்தில்தான் உள்ளது. கூரியவாள் பொருந்திய அரசிளங்குமரனே! உன்னுடைய தலையில் உள்ள மலர் மாலை வாழ்க!”

சித்திராபதி குருகு என்றது, குருகத்திப் பறவை என்று அழைக்கப்படும் மாதவியை. மணிக்காஞ்சி என்றது மணிமேகலையை என்பதனை உதயகுமாரன் குறிப்பால் உணர்ந்துகொண்டான். கடலில் கப்பல் கவிழ்ந்து வீழ்ந்தவனுக்குச் சிறிய தெப்பம் கிடைத்ததுபோல இருந்தது.

“உவனத்தில் பளிங்கு மண்டபத்தின் உள்ளே சித்திரப்பாவையைப் போலுள்ள மணிமேகலையை ஒருமுறை கண்டேன். ஓவியப்பாவை என்று தவறாக எண்ணி சுவர் முழுவதும் ஆசை அடங்காமல் தழுவி வந்தேன். அவளுடைய இரண்டு கரங்களும் இறைவனைத் தொழும்பொருட்டு மேலே குவிக்கப்பட்டபோது அவளுடைய அழகிய இளமுலைகள் இரண்டும் நெரியக் கண்டேன்.

இதழ்கள் இரண்டும் பவளம்போல் இருந்தன. முத்துக்கள் என்று ஐயப்படும் அளவிற்கு அழகிய பல்வரிசையின் நடுவில் அவளது வாயமுதம் ஊறியவண்ணம் இருந்தது. அந்த இதழ் அமுதத்தால்தான் என் உயிர் உயிர்க்கும் என்பதால் அவள் இதழ்களில் புன்னகை பூத்தது.”சிந்தை முழுவதும் மணிமேகலையின் மேல் இருக்க, உதயகுமாரன் பிதற்றத் தொடங்கினான். சித்திராபதி உள்ளூர சிரித்துக்கொண்டாள்.

“அவள் கண்களைச் சொல்ல வேண்டும். கண்களா அவை? வேல்களை வெற்றி கொள்பவை என்று பார்த்தால், கருங்குவளை மலர்களுக்கும் சவால் விடுக்கும் கயல்விழிகள். சும்மா இருக்குமா அந்தக் கயல் விழிகள்? மணிமேகலை சிந்தை மாறுபட்டாள் என்ற சேதியைக் காது வரைநீண்டு கூறிக்கொண்டிருந்தன. அப்படிப்பட்ட மணிமேகலை எனது உயிருக்கு புன்முறுவல் மூலம் அபயம் அளித்துவிட்டு என் நெஞ்சைத் தன்னுடன் கொண்டுசென்றுவிட்டாள். நான் இங்கே உறக்கம் வராமல் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறேன்”, என்றான்.“இன்னும் என்ன மன்னர் குமாரா? உன் தேரில் சென்று அவளை மீட்டுவந்து உன் அவா அடங்கும்வரை தேனை அள்ளிப்பருகு,” என்றாள் மணிமேகலையின் தாய்வழிப் பாட்டி.

“நானும் அப்படித்தான் எண்ணியிருந்தேன். ஆனால் பார். பொன்மகளோ என்று என்னும் வண்ணம் ஒரு பெண்தெய்வம் என்முன் தோன்றி, நெறிதவறாத செங்கோலைக் காட்டி, மணிமேகலையின்மீது நான் கொண்ட மையலை ஒழித்துவிடச் சொன்னாள். அது தெய்வம்தானா, அல்லது தெய்வத்தன்மை பொருந்திய பெண்ணா என்று எனக்குத் தெரியவில்லை. ஹும்! அன்றிலிருந்து நெஞ்சில் ஆசைக்கனல் எரிய, மணிமேகலையை நெருங்கமுடியாமல் தவிக்கிறேன்” என்றான்.

‘இப்படிப் போகிறதா கதை. தன் பெயர்த்திக்கு மாதவிதான் காவல் இருக்கிறாள் என்று நினைத்தால், ஊரில் உள்ள அத்தனை பெண்தெய்வங்கள் இவள் பின்னால் சுற்றுகின்றனவா? பார்த்துக் கொள்கிறேன்!’ சித்ராபதி உள்ளுக்குள் கறுவிக்கொண்டாள்.

“கனவில் தோன்றி பெண்தெய்வம் பிதற்றிய பிதற்றல் என்று அதனை விடுங்கள் மன்னர்கொழுந்தே! ஆமாம், இந்தத் தேவர்கள் இலட்சணம் தெரியாதா என்ன? அவர்கள் ஆடிய காமவிளையாட்டுகளும் அதற்கு அவர்கள் பட்ட பாடுகளும் ஓராயிரம் உண்டே.” என்றாள்.

கதை கேட்கும் ஆவலில் உதயகுமாரன் நிமிர்ந்து உட்கார்ந்தான்.

“முனிவர் கௌதமரின் மனைவி அகலிகையை அடைவதற்கு இந்திரன் எத்தனை தந்திரம் செய்தான்? பூனையாக வந்தான். தனது குற்றத்திற்காகத் தன் மேனி எங்கும் ஆயிரம் கண்களைப் பெற்றானே! அவன் கதையை விடுங்கள். அக்னிதேவன் ஒருமுறை தர்ப்பைக் காட்டில் சென்றுகொண்டிருந்தபோது ஏழு முனிவர்களின் அழகிய தர்மபத்தினிகள்மேல் தீராத மோகம்கொண்டான். அவன் சிந்தையை அறிந்துகொண்ட அவன் மனைவி சுவாகா, அந்த ஏழு மகளிரில் அருந்ததி தவிர ஏனைய அறுவரின் உருவினை அடைந்து, தன் கணவனின் அவாவை நிறைவேற்றினாள் என்பது தெரியாதா?

தேவர்களின் கதையை என்னிடம் கூறாதீர்கள், மன்னர்குமாரா!” என்ற சித்திராபதி, மேலும் தொடர்ந்தாள்.

**(மிகுதி அடுத்த வாரம்)**

சத்திரியப்பிரியன்...

## கலைக் கதம்பம்

சைத்திரியன்

### நட்பு

கண்ணில் ஒரு மின்னல்
முகத்தில் ஒரு சிரிப்பு
சிரிப்பில் ஒரு பாசம்
பாசத்தில் ஒரு நட்பு

★★★

வானமும் பூமியும் இறைவனின் சொத்து
இன்பமும் துன்பமும் மனிதரின் சொத்து
நீயும் நானும் கடவுளின் படைப்பு
என்றும் பிரியக் கூடாது நம் நட்பு

★★★

எனக்கு கிடைத்த உன் நட்பு போல
அந்த வானத்துக்கும் உன்னுடைய நட்பு
கிடைக்க வில்லை என்று
வானம் சிந்தும் கண்ணீர் துளிதான் மழை

★★★



ஆயிரம் சொந்தம்
நாம்மை தேடி வரும் ஆனால்
தேடினாலும் கிடைக்காத
ஒரே சொந்தம் நட்பு

★★★

என்னோடு நீ இருந்தாலும்
இல்லை என்றாலும் நான்

★★★

மண்ணோடு புதையும் வரை
நெஞ்சோடும் வைத்திருப்பேன் நட்பை
புரியாத நட்புக்கு அருகில்
இருந்தாலும் பயனில்லை
புரிந்த நட்புக்கு பிரிவு ஒரு தூரமில்லை

★★★

நிழல் கூட மாலை நேரத்தில் பிரியும்
என் நினைவுகள் உன்னை விட்டு பிரியாது
நம் நட்பை ஓவியமாய் வரைய நினைத்தேன்
ஆனால் முடியவில்லை ஏன் தெரியுமா?
ரோஜாவை வரைந்து விடலாம் அதன்
வாசத்தை எப்படி வரைய முடியும்?

எழில்

## மருதமுனையில் 'நிழல்'
## கவிதை நூல் வெளியீட்டு விழா



அம்பாறை மாவட்ட தமிழ்மொழி நூலாசிரியர்கள் பேரவையின் ஏற்பாட்டில் மருதமுனை விஜிலி எழுதிய ‘இரண்டாவது தெருவின் நிழல்’ கவிதை நூல் வெளியீட்டு விழா மருதமுனை கலாசார மத்திய நிலையமண்டபத்தில் கவிஞர் எம்.பி.அபுல் ஹஸன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம வைத்திய கலாநிதி எழுத்தாளர் ஐ.எல்.எம். றிபாஸ் நூலின் முதல் பிரதியை பெற்றுக் கொண்டார்.

நூல் பற்றி விமர்சகர் அப்துல் றஸ்ஸாக், பாவேந்தல் பாலமுனைபாறுக், ஊடகவியலாளரும் ஜெஸ்மி எம்.மூஸா ஆகியோர் உரையாற்றினார்கள்.

விமர்சகர் அப்துல் றஸ்ஸாக் நூல் பற்றி உரையாற்றுகையில்:



நிழல்,காலடி, சிலுசிலுத்தமழை, நிலவு, மண்.இருள்,காலம் போன்றதலைப்புக்களில் இடம்பெற்றிருக்கின்ற கவிதைகளில் சொற்களுக்கான அர்த்தவேறுபாடு மாறிக்கொண்டேயிருக்கின்றன. இச்சொற்களுக்கு காலாகாலமாக வழங்கப்பட்டுவந்த பொருள்கள் மறுவாசிப்புச் செய்யப்படுகின்றன.

பழமை நாட்டாரியல் பண்புகளை நவீன கவிதைச் செயற்பாட்டில் கலந்து எழுதுதல் புதைக்கப்பட்ட ரம்மியம் கவிதையில் இலை கறி விற்பவளைத் தேடுதல்,மணல் வாரியில் முருங்கைக்காய் பற்றிய சித்திரம்,அடல் அலைக்குள் அகப்பட்ட கவிதையில் ஆணலை,பெண்ணலைபற்றியசித்தரிப்புக்கள் இவ்வகையானவை.

.மனித வாழ்வு தற்காலமனித இழிவுபோன்றஅம்சங்களை இவரது கவிதைகள் பாடுபொருளாகக் கொண்டுள்ளன.மனிதனை வாசித்தல்,கடதாசி மனிதர்கள் தெரிவிப்பு,மனிதம் சிதைக்கப்படுதல்.அடுத்த நூற்றாண்டு மனிதன் போன்றகவிதைகளில் இப்பொருட்களின் விரிவுபட்ட தன்மையினைக் காணலாம்.

விஜிலி தனது கவிதை பற்றிய அலசல்களை பல்வேறு நிலைகளில் எடுத்துரைக்கின்றார். இதில் தனது கவிதைகளை வகைப்படுத்தப் முனைகின்றார் ஒருவகையில்.இது சுயவிமர்சனமாகும்.உழைத்து விழுந்த கவிதை,என் கவிதையைகொத்திச் சென்றபறவை, கடல் அலைக்குள் அகப்படாதகவிதை,விலங்கிடப்பட்ட கவிதை போன்றவற்றை இதற்கு எடுத்துக்காட்டாகக் குறிப்பிடமுடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

பி.எம்.எம்.ஏ.காதர்...
(படங்கள்: மருதமுனை தினகரன் நிருபர்)

## முகநூல் நேரலையில் நடைபெற்ற உலக கவிதை தின கருத்தரங்கு



வலம்புரி கவிதா வட்டம் உலக கவிதை தினத்தையொட்டி ஏற்பாடு செய்திருந்த கருத்தரங்கம் மற்றும் உலக கவிதை வாசிப்பு நிகழ்வு கடந்த 21ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு முகநூல் நேரலையில் நடைபெற்றது.

டாக்டர் தாஸிம் அகமதுவின் நலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தொடக்கவுரையை மேமன்கவி நிகழ்த்தினார்.

உலக கவிதைகள் சிலவற்றின் வாசிப்பை முல்லை முஸ்ரிபா நிகழ்த்தினார்.


ஈழத்து ஆங்கில கவிஞர் 'ஜீன் அரசநாயகமும் அவரது கவிதைகளும்' எனும் தலைப்பில் கெகிராவ ஸூலைஹாவும்

ஈழத்து சிங்கள கவிஞர் 'ஜீ.பீ சேனநாயக்காவும் அவரது கவிதைகளும் எனும் தலைப்பில் ஹேமச்சந்திர பதிரனவும் பலஸ்தீன கவிஞர் ' மஹ்மூத்; தர்வேஷும் அவரது கவிதைகளும்' எனும் தலைப்பில் வஸீம் அக்ரமும் உரைகளை நிகழ்த்தினர்.

(ஸ)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு கடந்த அரசு பொறுப்பு கூற வேண்டும்

## மஹிந்தானந்த அலுத்கமகே



சபை நிருபர்கள்: லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்

21.04.2022

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு கடந்த அரசு 100 வீதம் பொறுப்பு கூற வேண்டும் என முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமகே தெரிவித்தார். சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர், சட்டமா அதிபரின் கையிலே அடுத்த கட்ட நடவடிக்கை உள்ளதாகவும் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு ஜனாதிபதி தலையீடு செய்ய தயாராக இல்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு 3 வருடங்கள் நிறைவடையும் நிலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற பாராளுமன்ற விவாதத்தில் உரையாற்றிய அவர் மேலும் குறிப்பிட்டதாவது.

எண்ணெய் விலைக்கும் உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கும் தொடர்பு கிடையாது. கடந்த ஆட்சியில் தாக்குதல் நடந்தது. ஆனால் எதிரணி கருப்பு உடையணித்து சபைக்கு வந்துள்ளது. இவர்கள் கருப்பு ஆடையல்ல. சிவப்பு ஆடை அணிய வேண்டும். இயலாமையை ஏற்று தவறை ஏற்றுக் கொள்ளுங்கள். இந்த தாக்குதலுக்கான பொறுப்பை நல்லாட்சி அரசு 100 வீதம் ஏற்க வேண்டும். எந்த நடவடிக்கை எடுக்கவில்லை என எதிரணி கூறினாலும் விசேட நீதிமன்றம் அமைத்து வழக்கு முன்னெடுக்கப்படுகிறது. சட்டமா அதிபருக்கு அழுத்தம் கொடுக்க ஜனாதிபதி தயாராக இல்லை. நல்லாட்சியில் சட்டமா அதிபரையும் பிரதம நீதியரசரையும் அழைத்து யாருக்கு எதிராக வழக்கு தொடர்வது என முடிவு செய்தார்கள். எதிரணியில் மாத்திரமன்றி எமது தரப்பிலும் பிரதமராக பதவி ஏற்க சிலர் உடை தயார் செய்துள்ளனர்.

**நிமல் லங்சா(சுயாதீன எம்.பி)**

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடைபெற்று 3 வருடங்கள் நிறைவடைந்துள்ளது. பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் நிலைநாட்டப்பட வேண்டும். ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்துமாறு ஜனாதிபதியையும் சட்டமா அதிபரையும் சட்டம் ஒழுங்கு அமைச்சரையும் கோருகிறேன். கத்தோலிக்க மக்களுக்கு துரிதமாக நியாயம் வழங்க வேண்டும்.

**ஹெக்டர் அப்புஹாமி (ஐ.ம.ச எம்.பி)**

பாதிக்கப்பட்ட மக்களுக்கு இதுவரை நியாயம் நிலைநாட்டப்படவில்லை. இது தொடர்பில் பாராளுமன்றத்திற்கும் பொறுப்பு உள்ளது.

**முஜீபுர் ரஹ்மான் (ஐ.ம.ச எம்.பி**

உயிர்த்த ஞாயிறு தாக்குதலினால் பாரிய சொத்து சேதம் ஏற்பட்டது. இந்த சம்பவத்தினால் இன ஒற்றுமை, நல்லிணக்கம் பாதிக்கப்பட்டது. சந்தேகத்துடன் பார்க்கும் நிலை ஏற்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட இனக்குழு என்ற வகையில் எமக்கும் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேரிட்டது. சாரா ஜெஸ்மின் இந்தியாவுக்கு தப்பிச் சென்றுள்ளார். அவரை இந்தியாவுக்கு அனுப்பிய பொலிஸ் அதிகாரி அபூபக்கர் சிறையில் இருக்கிறார். சாராவை கைது செய்ய சர்வதேச பொலிஸின் உதவி நாடப்படவில்லை.

சஹ்ரானுக்கு ஆலோசனை வழங்கிய இருவர் எமது ஆட்சியில் கைது செய்யப்பட்டார்கள். அவர்களை இந்த 2020 இல் அரசுவிடுதலை செய்தது. ஆனால் சஹ்ரானுடன் பேசிய ,தேநீர் அருந்தியவர்கள் 2,3 வருடங்களாக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

**மனுஷ நாணயக்கார (ஐ.ம.ச எம்.பி)**


பயங்கரவாதத்தினால் தான் எனது தந்தையை இழந்தேன். நிலந்த ஜெயவர்தனவை அரச சாட்சியாக்கி சாட்சிகளை மறைக்க முயற்சி நடந்தது. சம்பவம் 21 ஆம் திகதி நடந்தாலும் 25 ஆம் திகதி தான் ஐஎஸ். ஐ.எஸ் இதனை தாம் செய்ததாக ஏற்றது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை அறிக்கை சபையில் சமர்ப்பிக்கப்பட்டது. இந்த தாக்குதலுக்கு உள்நாட்டு வெடிபொருட்கள் பயன்படுத்தப்பட்டன. ஐஎஸ்.ஐ.எஸ் தொடர்புட்டிருந்தால் வெளிநாட்டு வெடிபொருட்கள் பயன்படுத்தப்பட்டிருக்கும்.

இந்த தாக்குதலின் பிரதான சூத்திரதாரியை அம்பலப்படுத்த வேண்டும். எமது ஆட்சியில் சர்வதேச ஒத்துழைப்புடன் உண்மையை வெளிப்படுத்துவோம்.

அமைச்சர் பிரசன்ன ரணதுங்க

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் இறந்தவர்களை எதிரணி அகௌரவப்படுத்தக் கூடாது. கடந்த ஆட்சியில் தான் தாக்குதல் நடந்தது. எதிரணி எல்லா காலத்திலும் கருப்பு உடையணிய வேண்டும். ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை செயற்படுத்தப்பட்டிருந்தால் பலருக்கு தண்டனை வழங்கப்பட்டிருக்கும். தாக்குதல் தொடர்பான தகவல் கிடைத்தும் பொறுப்பின்றி செயற்பட்டார்கள்.சதி இருப்பதாக முன்னாள் சட்டமா அதிபர் தெரிவித்தார்.அவருக்கு இதனை சி.ஐ.டிக்கு சென்று கூற முடியும்.






**ரிசாத் பதியுதீன் (ஐ.ம.ச எம்.பி)**

பாதிக்கப்பட்ட கத்தோலிக்க மற்றும் முஸ்லிம் சமூகங்கள் அழுகின்றன. பள்ளிகள் ,கடைகள் தாக்கப்பட்டன. பௌஸ்தீன் என்பவர் வீதியில் கொலை செய்யப்பட்டார். டொக்டர் சாபியை அநியாயமாக விமர்சித்து டொக்டர்கள் குறித்து சந்தேகமாக பார்க்கும் நிலையை ஏற்படுத்தினார்கள். அஸாத் சாலியை கைது செய்தீர்கள். அவர் விடுவிக்கப்பட்டார். நோன்பு நோற்க தயாராக இருக்கையில் என்னை இரவோடு இரவாக கைது செய்து 6 மாதம் தடுத்து வைத்தீர்கள். தொழ,படுக்க வசதி தரவில்லை. எனது அறையை மூடி வைத்தார்கள். 12 மணிநேரம் மூடி வைத்ததால் தொழ முடியாத நிலை ஏற்பட்டது.

முஷரப்.இசாக் ரஹ்மான் அலிசப்ரி ரஹீம் போன்றோர் அமைச்சு பதவி பெற்றுள்ளனர்.எமது கட்சிக்கு வாக்களித்த மக்களிடம் மன்னிப்பு கேட்கிறேன்.

என்னை கைது செய்து ஒரு வருடமாகிறது. என்னை விடுவிக்கவுமில்லை. வழக்கு தொடரவுமில்லை. உண்மையான குற்றவாளிகளை தண்டிக்க வேண்டும். அப்பாவிகளை விடுவிக்கவேண்டும். கொரோனாவினால் இறந்த எமது சமூகத்தினரை தகனம் செய்ய வேண்டாம் என்று கோரியும் பலவந்தமாக தகனம் செய்தீர்கள். சமிந்த லக்சானின் கொலையை கண்டிக்கிறோம். பொருட்கள் விலைகள் உயர்ந்துள்ளன. மக்களுக்கு வாழமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

**வேலுகுமார் (ஐ.ம.ச எம்.பி)**

உயித்த ஞாயிறு தாக்குதலுதல் நடைபெற்று 3 வருடங்கள் கடந்தும் இன்னும் நீதி நிலைநாட்டப்படவில்லை. வெட்கம். நீதியை பெறுவதற்கு இனியாவது ஒன்றினைவோம். தவறு செய்தவர்களுக்கு உரிய தண்டனை வழங்க வேண்டும்.

**ஹரீன் பெர்ணான்டோ (ஐ.ம.ச எம்.பி)**

மகாசங்கத்தினரும் கார்தினலும் முஸ்லிம் மதத் தலைவர்களும் அரசாங்கத்தை விலக கோருகின்றனர். இளைஞர்கள் போராட்டம் நடத்துகின்றனர். மங்கள சமரவீர சொன்ன விடயங்கள் இன்று நடைபெறுகிறது. நாட்டை இனியும் வீழ இடமளிக்காதீர்கள்.

**மஹிந்த அமரவீர (சுயாதீன எம்.பி**

1977 அரசாங்கம் இரு வருடங்கள் நீடித்திருந்தால் கடன் பெறும் நாடாக அன்றி கடன் வழங்கும் நாடாக இலங்கை மாறியிருக்கும். அன்று சில பிரச்சினைகள் இருந்தாலும் இன்று போன்ற நிலைமை இருக்கவில்லை. எமக்கு தேவையான பொருட்கள் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டன. மண்வெட்டி இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. தனியார் துறையும் பங்களித்தது. கேஸ் பெறவும் எரிபொருள் பெறவும் மக்கள் அவதிப்படுகின்றனர். மீனவர்கள் கடலுக்கு செல்ல முடியாதுள்ளனர்.

**சரத் பொன்சேக்கா (ஐ.ம.ச எம்.பி)**

இவ்வாறு துப்பாக்கிப் பிரயோகம் செய்ய அனுமதிக்க முடியாது. உங்கள் அரசாங்கம் தான் உள்ளது. எந்த சீருடையில் இருந்தாலும் இவ்வாறு செய்ய அனுமதிக்க முடியாது. போராட்டம் நடத்தும் குழுவுக்கு எமது முழு ஆதரவை வழங்குகிறோம். அவர்கள் எதிர் கொண்டுள்ள குறைபாடுகளை தீர்க்க வேண்டும்.

**சி. வி. விக்னேஸ்வரன்: யாழ். மாவட்ட எம் பி**

தங்களுக்கு கிடைக்க வேண்டிய உரிமைகளுக்காக போராடுபவர்கள் அடிப்படை வாதிகளல்ல என்பதை இக்காலங்களில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ள இளைஞர்கள் உணர்த்துகின்றனர்.

பௌத்த மக்களின் ஆதரவை மட்டுமே பெற்றுக் கொண்டு ஆட்சிக்கு வரமுடியும் என்றவர்களுக்கு எதிராக தற்போது அந்த மக்களே எதிர்ப்புப் போராட்டங்களில் ஈடுபடுவதைக் காண முடிகிறது.

தமிழ் மக்களுக்கு ஏற்படுத்திய பாதிப்புகளுக்கான விளைவுகளையும் பிரதிபலனையும் இன்று நாடு அனுபவிக்கின்றது. எத்தகைய மாற்றங்கள் ஏற்பட்டாலும் இன்றைய நிலை மாற்றம் அடைவது கடினமாகும்.

நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு புலம்பெயர்ந்தோர் உதவ முடியும். நாம் நாட்டைத் துண்டாடப் போவதில்லை. வடக்கு கிழக்கு மக்களின் அடிப்படை உரிமைகளை விரைவாக அரசாங்கம் பெற்றுக் கொடுக்கும் என்ற நம்பிக்கை உண்டு.

**இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் (ஐ.ம.ச எம்.பி)**

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் நியாயம் நிலைநாட்டப்படாதது குறித்து சந்தேகம் உள்ளது. பாதிக்கப்பட்டவர்களுக்கு விரைவில் நியாயம் நிலைநாட்டப்பட வேண்டும். தமது இருப்புக்காக அன்றி தமது இருப்புக்காக செயற்படும் இடமாக பாராளுமன்றம் மாறியுள்ளதாக மக்கள் கருதுகின்றனர். வம்முறைகளுடனே இளைஞர்களின் எழுச்சியை கண்டுள்ளோம். ஆனால் இந்த இளைஞர்கள் எம்.பி பதவி கோரவில்லை. பொருளாதார நெருக்கடி போன்றே அரசியல் நெருக்கடியும் ஏற்பட்டுள்ளது. சிறந்த நாடொன்றை உருவாக்க அனைவரும் பங்களிக்க வேண்டும்.



எமது நாட்டின் நற்பெயரை மீள உருவாக்க வேண்டும். மகாசங்கத்தினரும் கத்தோலிக்க மதத் தலைவர்களினதும் கோரிக்கைகளை அரசு செவிமடுக்க வேண்டும்.

**ராஜாங்க அமைச்சர் இந்திக்க அநுருத்த**

எமது மக்கள் இன்றும் நியாயத்தை எதிர்பார்க்கின்றனர். மாறி மாறி குற்றச்சாட்டுகளை முன்வைத்து இந்த பிரச்சினையை குழப்ப வேண்டாம் என கோருகிறேன்.உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடைபெற்று ஒன்றரை மணி நேரத்தின் பின்னர் தான் நான் நடந்ததை அறிந்தேன். நான் ஆலயத்தில் இருந்தேன். கட்டுவாபிடியவில் 14 வீடுகள் நிர்மாணிக்க சஜித் பிரேமதாஸ பெயர்ப்பலகை திரைநீக்கம் செய்தார். 5 சதம் கூட செலவிடவில்லை.சியொன் ஆலயத்திற்கும் நிதி வழங்கப்படவில்லை. நாம் நிதி ஒதுக்கி அரச நிறுவனத்தின் கீழ் வீடுகள் நிர்மாணிக்கப்பட்டன. ஆலயத்தையும் காண்பித்து இவர்கள் பிரசாரம் செய்தார்கள். அந்த மக்களுக்கு கிடைக்க வேண்டிய வற்றை வழங்காமல் புகைப்படம் மாத்திரமே பிடித்தார்கள்.

---

# வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழான 04 கட்டளைகளுக்கு சபை அனுமதி

வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் நிதி அமைச்சரினால் விதிக்கப்பட்ட நான்கு கட்டளைகளுக்குப் பாராளுமன்றம் நேற்று அனுமதி வழங்கியது.

இதற்கமைய, 2021.11.23 திகதிய 2255/8 ஆம் இலக்க, 2021.12.21ஆம் திகதிய 2259/9 ஆம் இலக்க, 2021.12.31ஆம் திகதிய 2260/72 ஆம் இலக்க, 2022 சனவரி 11 ஆம் திகதிய 2262/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட கட்டளைகள் விவாதமின்றி சபையில் அங்கீகரிக்கப்பட்டன.

கீழ்வரும் இணைப்புக்களில் இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல்களைப் பார்வையிடலாம்

http://documents.gov.lk/files/egz/2021/11/225508_T.pdf

http://documents.gov.lk/files/egz/2021/12/225909_T.pdf

http://documents.gov.lk/files/egz/2021/12/226072_T.pdf

http://documents.gov.lk/files/egz/2022/1/226215_T.pdf

பாராளுமன்றம் நேற்று முற்பகல் 10.00 மணிக்கு கூடியதுடன், எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் வேண்டுகோளுக்கிணங்க, உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு சபையில் ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

இன்றைய தினத்துக்காக ஒதுக்கப்பட்டிருந்த வாய்மூல விடைக்கான கேள்விகள் பிறிதொரு நாளுக்கு ஆற்றுப்படுத்தப்படும் என சபாநாயகர் சபைக்கு அறிவித்தார்.

அத்துடன், ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார அவர்களினால் 21வது அரசியலமைப்புத் திருத்தத்துக்கான தனிநபர் சட்டமூலம் நேற்று முற்பகல் பாராளுமன்ற செயலாளர் நாயகத்திடம் கையளிக்கப்பட்டது.

தற்போதைய நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கு அரசியலமைப்பைத் திருத்துவது தொடர்பில் ஆராயும் நோக்கில் பாராளுமன்றத்தில் உள்ள சகல கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவின் உறுப்பினர்கள் பங்குகொண்ட விசேட கூட்டம் கௌரவ சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேர்தன அவர்களின் தலைமையில் பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெற்றது.

தற்போதைய நெருக்கடி நிலை குறித்து மாலை 4.30 மணி வரை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கருத்துக்களைத் தெரிவித்தனர்.

பி.ப 4.30 மணிவரை நடைபெற்ற விவாதத்தைத் தொடர்ந்து சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான கேள்விகளின் கீழ் பாராளுமன்ற உறுப்பினர் குணதிலக ராஜபக்ஷ, கொவிட் 19 நிலைமையினால் பாடசாலைகளின் பாடவிதானங்களைப் பூர்த்திசெய்ய முடியாமல்போனமை மற்றும் பரீட்சைகள் நடத்த முடியாமல் போனமை குறித்து கல்வி அமைச்சரிடம் கேள்வி எழுப்பினார். அத்துடன், பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி குமாரி விஜேரத்ன பல்கலைக்கழகங்களினால் நடத்தப்படும் அமைதிப் போராட்டங்களுக்கு ஏற்படுத்தப்படும் இடையூறுகள் குறித்து பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரிடம் கேள்வியெழுப்பினார்.

---

# ராஜபக்ஷ குடும்பத்தினர் சொத்து சேகரித்திருந்தால் வழக்கு தொடருங்கள்

## நாமல் ராஜபக்ஷ எம்.பி சவால்

**லோரன்ஸ் செல்வநாயகம்,ஷம்ஸ் பாஹிம்**

உலகில் எங்காவது ராஜபக்ஷ குடும்பத்தினர் சொத்து சேகரித்து வைத்திருந்தால் உலகில் எந்த ஒரு நாட்டிலும் வழக்கு தொடருமாறு முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் கோரினார். பாராளுமன்றித்தில் நேற்று முன்தினம் உரையாற்றிய அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

டிஜிட்டல் நாணய மோசடி குற்றச்சாட்டை எதிரணி முன்வைத்துள்ளது. இது தொடர்பில் விசாரணை நடத்தி சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கோருகிறேன். 2015 இன் பின்னர் பொய்க்குற்றச்சாட்டுகளை முன்வைத்து வழக்கு தொடரப்பட்டது. விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. 05 வருட ஆட்சியில் உலகம் முழுவதும் சென்று மறைத்து வைத்துள்ள சொத்துக்களை தேடினர. ஆனால் வழக்குகளிலிருந்து நீதிமன்றம் விடுவித்தது. உலகில் எங்காவது எமது குடும்பத்தினர் சொத்து சேகரித்து வைத்திருந்தால் உலகில் எந்த ஒரு நாட்டிலும் வழக்கு தொடர முடியும். கடந்த 12 வருடங்களாக நான் எனது சொத்து விபரங்களை பாராளுமன்றத்திற்கு வழங்கி வருகிறேன். கணக்காய்வு செய்யவும் தயாராக இருக்கிறேன்.

தங்கக் குதிரை, லம்போகினி என பல குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டது. எம்முடன் இருந்த மனுஷ நாணயக்கார மறுபக்கம் சென்று தவறான தகவல்களை வழங்கினார். அதனை எதிரணி நம்பி ஏமாந்தது.

வீதியில் இறங்கியுள்ள பெரும்பான்மையான இளைஞர்கள் நேர்மையாக போராடுகின்றனர். ஆனால் சிலர் இதனை பயன்படுத்தி அரசியல் இலாபம் பெறுகின்றனர். போராட்டம் நடத்துவோரை சபாநாயகர் சந்திக்க வேண்டும். அவர்கள் கட்சி ஆரம்பித்து செயற்படவும் தேர்தல் ஆணையாளரை சந்திக்கவும் வாய்ப்பு வழங்க வேண்டும் என்றார்.

---

# ஆட்சியைக் கைப்பற்றுவதே எதிர்க்கட்சியின் குறுகிய நோக்கம்

## சபையில் முன்னாள் அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன

**லோரன்ஸ் செல்வநாயகம் ஷம்ஸ் பாஹிம்**

எத்தகைய அழிவுகளுக்கும் துணைபோயாவது ஆட்சியை கைப்பற்ற வேண்டுமென்ற நோக்கத்திலேயே எதிர்கட்சியினர் செயற்படுவதாக முன்னாள் அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை காண்பித்து ஆட்சிக்கு வர முதுகெலும்பில்லாதவர்களே இவ்வாறு செயற்படுகின்றனரென குறிப்பிட்ட அவர் ஆசனங்கள் வெற்றிடமாகும் வரை காத்துக் கொண்டிருப்பது வெட்கக்கேடானதென்றும் அவர் சபையில் தெரிவித்தார். உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் சம்பந்தமாக பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, கடந்த 19ஆம் திகதி சபையில் உரையாற்றிய போது, ஆர்ப்பாட்டக்காரர்களை ஊக்குவித்து போராட்டங்களை தூண்டிவிடுவது போன்ற கருத்துக்களையே முன்வைத்தார். அதன் மூலம் அவர்களது அரசியல் நோக்கம் தெளிவாகிறது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு எமது அரசாங்கமே பொறுப்புக்கூற வேண்டுமென எதிர்க்கட்சியினர் தெரிவித்து வருகின்றனர். 2019ஆம் ஆண்டு மைத்திரிக்கும் ரணிலுக்கும் இடையே நடைபெற்ற திருமணத்தில் பிறந்த குழந்தையே உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலாகும்.

அந்த அரசாங்கத்தினர் நாட்டின் புலனாய்வுப் பிரிவினரதும் படையினரதும் முதுகெலும்புகளை உடைத்தனர். அதன் விளைவே சஹ்ரானின் குண்டுவெடிப்பாகும்.

இப்போது எமது அரசாங்கத்தின் மீது கைநீட்டுகின்றனர். எனினும் நாட்டு மக்கள் உண்மை நிலையை அறிவரென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

---

ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரம்

# பாராளுமன்றத்துக்கு பெற்றுக்கொள்ள மூன்றிலிரண்டு பெரும்பான்மை அவசியம்

## சபையில் எஸ்.பி.திசாநாயக்க

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

ஜனாதிபதியிடமுள்ள நிறைவேற்று அதிகாரத்தை பாராளுமன்றத்திற்கு பெற்றுக் கொள்ள வேண்டுமென்றால் அதற்காக பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகள் அவசியமென முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தை இல்லாதொழிப்பது தொடர்பில் எதிர்க் கட்சியினர் நேற்று முன்தினம் சபையில் சமர்ப்பித்த தனிநபர் பிரேரணைக்குப் பதிலளித்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் போது 19ஆவது அரசியலமைப்பு திருத்தம் முறையாக கொண்டுவரப்படவில்லை. அதன் காரணமாகவே அனைத்திலும் பிளவுகள் ஏற்பட்டன. ஜனாதிபதியும் பிரதமரும் தனித்தனியே செயற்படும் நிலை உருவானது. அதற்கிணங்க தற்போது அரசியலமைப்பில் மாற்றம் கொண்டு வருவது என்பது சாதாரணமானதல்ல அவ்வாறு அதை நினைத்து செயற்படவேண்டாம்.

உலகின் மிக சிறிய அரசியலமைப்பாக அமெரிக்காவின் அரசியலமைப்பு உள்ளது. எனினும் அது மிகவும் பலம் வாய்ந்தது. 19வது அரசியல் திருத்தத்திற்கான 9 நிபந்தனைகளை உச்ச நீதிமன்றம் நிராகரித்தது.

அதேபோன்று மேலும் 14 உப நிபந்தனைகளையும் உச்சநீதிமன்றம் நிராகரித்தது என்பதையும் குறிப்பிட வேண்டும். அத்தகைய பலவீனமான ஒரு அரசியல் அமைப்பாக 19ஆவது திருத்தம் அமைந்திருந்தது. அந்த பலவீனமே நாட்டின் பாதுகாப்பை சீர்குலைத்து ஈஸ்டர் குண்டுத் தாக்குதலுக்கு வழி வகுத்தது.

ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் தடுத்திருக்க வேண்டியதொன்று.

அனுராதபுர ஜூனியர் கொல்ப் வீரர்கள்

# திருகோணமலை ஈகிள்ஸ் கொல்ப் லிங்க்ஸ் சைனா பேயில்



**திருகோணமலை குறூப் நிருபர்**

ஆதித்ய வீரசிங்க மற்றும் சங்கனத் ஹெசரா ஆகியோர் வயது பிரிவு பிரிவில் வெற்றி பெற்றனர்.

இலங்கை கொல்ப் கனிஷ்ட அபிவிருத்திக் குழு, இளம் திறமைகளை வளர்ப்பதற்கான அதன் அடிமட்ட பயிற்சியில், பயிற்சியில் இருக்கும் கனிஷ்ட கொல்ப் வீரர்களுக்கான இரண்டு நாள் கொல்ப் போட்டியை அனுராதபுரத்தில் ஏப்ரல் 9 மற்றும் 10 வார இறுதியில் சீனக்குடாவில் திருகோணமலையில் நடத்தியது. திருகோணமலையில் உள்ள ஈகிள்ஸ் கொல்ப் லிங்க்ஸ் சைனா பே மைதானத்தில் முறையே 9 – 14 வயது மற்றும் 15 – 18 வயதுக்கு உட்பட்ட பெண்களுக்கான சிவப்பு குறிப்பான்கள் மற்றும் ஆண்களுக்கான டீஸ் மஞ்சள் குறிப்பான்கள் என இரண்டு வயது பிரிவுகளில் 18 வயதுகளுக்கு மேல் போட்டிகள் நடத்தப்பட்டன. இலங்கை கொல்ப் நிர்வாகக் குழுவான ஸ்ரீலங்கா கொல்ப், இலங்கை விமானப்படையுடன் கைகோர்த்து, அனுராதபுரத்தில் உள்ள இளையவர்களுக்கு பயிற்சி மற்றும் இலவச அணுகலை எளிதாக்குவதுடன், நாடு முழுவதும் விளையாட்டின் வளர்ச்சியை மேலும் ஊக்குவித்து, இரண்டு பயிற்சிகளையும் தொடர்ந்து விளையாடுகிறது. 36 ஓட்டைகள் கொல்ப் போட்டியைத் தொடர்ந்து விளையாட்டின் விதிகள் மற்றும் மனப் பக்கத்தைப் பற்றிய தீவிரப் பயிற்சியை உள்ளடக்கிய ஒரு நாள் முழுவதும் கொல்ப் விளையாட்டிற்கு இளைஞர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

ஜூனியர்களிடையே மகிழ்ச்சிகரமான உற்சாகம் இருந்தது, அவர்கள் அனைவரும் இணைப்புப் பாடத்தை விளையாடுவதையும் கடினமான சூழ்நிலையையும் அனுபவித்தனர்.

தீவிர பயிற்சி நிகழ்ச்சியானது இலங்கை கொல்ப் பயிற்சியாளர் ப்ரியா ஹேமந்தவினால் நடத்தப்பட்டது, அவர் விளையாட்டின் அனைத்து அம்சங்களிலும் வீரர்களுக்கு உதவுவதற்காக வார இறுதி முழுவதும் இருந்தார்.

# பங்களாதேஷ் தொடரிலிருந்து வெளியேறும் பெதும் நிஸ்ஸங்க



இலங்கை அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான பெதும் நிஸ்ஸங்க பங்களாதேஷ் அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் விளையாட மாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐசிசி டெஸ்ட் சம்பியன்ஷிப்புக்கான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுவதற்காக இலங்கை அணி, அடுத்த மாதம் பங்களாதேஷிற்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளது.

இலங்கை டெஸ்ட் அணியின் மூன்றாமிலக்க துடுப்பாட்ட வீரராக செயற்பட்டுவரும் பெதும் நிஸ்ஸங்கவுக்கு முதுகுப்பகுதியில் ஏற்பட்ட உபாதை பூரணமாக குணமடையாததன் காரணமாக அவர் அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இறுதியாக இந்திய அணிக்கு எதிராக நடைபெற்றுமுடிந்த முதல் டெஸ்ட் போட்டியில் பெதும் நிஸ்ஸங்க விளையாடிய போதும், முதுகுப்பகுதியில் ஏற்பட்ட உபாதை காரணமாக இரண்டாவது டெஸ்ட் போட்டியில் விளையாடவில்லை. குறிப்பிட்ட உபாதை இதுவரை குணமடையவில்லை என்பதால் அவர் அணியிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளார்.

பெதும் நிஸ்ஸங்க இலங்கை அணிக்காக 7 டெஸ்ட் போட்டிகளில் மாத்திரம் விளையாடியிருந்தாலும், 44.90 என்ற ஓட்ட சராசரியில் 494 ஓட்டங்களை குவித்துள்ளார். இவ்வாறான நிலையில் இவரின் இழப்பு இலங்கை அணிக்கு பின்னடைவை கொடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பங்களாதேஷிற்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் இலங்கை அணி முதல் டெஸ்ட் போட்டியில் எதிர்வரும் 15 தொடக்கம் 19ம் திகதிவரை விளையாடவுள்ளதுடன், இரண்டாவது டெஸ்ட் போட்டி 23 தொடக்கம் 27ம் திகதிவரை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கரப்பந்தாட்ட பயிற்றுவிப்பாளராக அம்ஜத் நியமனம்

**( மாளிகைக்காடு குறூப் நிருபர்)**

விளையாட்டுத்துறை அமைச்சினால் நாடளாவிய ரீதியில் இலங்கையின் தேசிய விளையாட்டான கரப்பந்தாட்டத்தை பிரபல்யப்படுத்தி கிராமப்புறங்களிலுள்ள இளைஞர் யுவதிகளின் திறமைகளை வெளிக்கொணரும் வகையில் புத்தளம் மாவட்டத்திற்கான கரப்பந்தாட்ட பயிற்றுவிப்பாளர்களை தெரிவு செய்வதற்கான பரீட்சையும் நேர்முகத்தேர்வும் அண்மையில் புத்தளம் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

சாய்ந்தமருதை பிறப்பிடமாகக் கொண்ட இவர் கல்முனை ஸாஹிரா தேசியக்கல்லூரியின் பழைய மாணவரான இவர் பாடசாலை காலங்களில் பாடசாலை மட்டம் , வலய மட்டம் , மாவட்ட மட்டம் , மாகாணமட்டம் மற்றும் தேசிய மட்டங்களில் குறுந்தூர ஓட்டம் , அஞ்சலோட்டம் , தடைதாண்டி ஓட்டம் என்பவற்றிலும் பெரு விளையாட்டுக்களான கிரிக்கெட் , காற்பந்து , கரப்பந்தாட்டம் , கபடி போன்றவற்றிலும் பங்கேற்று தனது பாடசாலைக்கும் இப்பிரதேசத்திற்கும் பெருமை சேர்த்தவராவார்.

மேற்படி பயிற்றுவிப்பாளருக்கான பரீட்சையில் கூடுதலான புள்ளிகளைப் பெற்றதுடன் நேர்முகப்பரீட்சையிலும் சித்தியடைந்து இவர் இப் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.



# ஐ.என்.ஆர் கிரிக்கெட் வெற்றிக்கிண்ணம்

## சம்மாந்துறை விளையாட்டு கழக அணி சம்பியன்

**சம்மாந்துறை கிழக்கு தினகரன் நிருபர்**

சம்மாந்துறையில் அமைந்துள்ள ஐ.என். ஆர் மோட்டார்ஸ் நிறுவனத்தின் 12 வருட பூர்த்தியை முன்னிட்டு மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி ஒன்றினை சம்மாந்துறை கவுண்டி விளையாட்டு கழகத்தின் ஏற்பாட்டில் சனிக்கிழமை (02) சம்மாந்துறை பொது விளையாட்டு மைதானத்தில் நடை பெற்றது.



இச் சுற்றுப்போட்டியில் அம்பாறை மாவட்டத்தில் உள்ள பலம் பொருந்திய 14 அணிகள் கலந்து கொண்டன.

இறுதிச்சுற்றுப்போட்டி நியூவ் சன் விளையாட்டு கழக அணிக்கும் சம்மாந்துறை விளையாட்டு கழக அணிக்கும் இடையே நடை பெற்றது.

இறுதிச்சுற்றுப்போட்டியில் நேரத்தை கவனத்தில் கொண்டு 4 ஓவர்கள் ஒரு ஓவரில் 4 பந்துகள் மொத்தமாக 20 பந்து வீச்சுக்கள் என நிர்ணயிக்கப்பட்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சம்மாந்துறை விளையாட்டு கழக அணி 4 ஓவர்கள் முடிவில் 3 விக்கெட்டுக்களை இழந்து 34 ஓட்டங்களை பெற்றுக்கொண்ட நிலையில் வெற்றி இழக்காக நியூவ் சன் விளையாட்டு கழக சம்மாந்துறை அணிக்கு 35 ஓட்டங்கள் வெற்றியிலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

இன் நிகழ்வில் பிரதம அதிதியாக ஐ.என். ஆர் நிறுவனத்தின் உரிமையாளர் எம்.எச் நூர் முஹம்மட் கலந்துகொண்டதுடன் அதிதியாக சம்மாந்துறை இளைஞர் பாரளுமன்ற உறுப்பினர் அமீர் அப்னான் கலந்துகொண்டார். இச் சுற்றுப்போட்டியை பார்வையிடுவதற்காக பொது மக்கள் அதிகளவில் வந்திருந்தனர்.

இரண்டாவதாக துடுப்பெடுத்தாடிய நியூவ் சன் விளையாட்டு கழக சம்மாந்துறை அணி 4 ஓவர்கள் முடிவில் 3 விக்கெட்டுக்களை இழந்து 27ஓட்டங்களை பெற்றது.ஈற்றில் சம்மாந்துறை விளையாட்டு கழக அணி 7 ஓட்டங்களினால் வெற்றியை தமதாக்கி சம்பியன் பட்டம் வென்றது. இத் தொடரில் வெற்றியீட்டிய சம்மாந்துறை விளையாட்டு கழக அணிக்கு 10000 ரூபா பணப்பரிசும் வெற்றிக்கிண்ணமும் வழங்கி வைக்கப்பட்டதோடு நியூவ் சன் விளையாட்டு கழக சம்மாந்துறை அணிக்கு 5000 ரூபா வெற்றிக்கிண்ணமும் வழங்கப்பட்டது.

இத் தொடரின் போட்டியின் ஆட்ட நாயகனாக சம்மாந்துறை விளையாட்டு கழக அணி வீரர் ரமீஸும் , தொடரின் ஆட்ட நாயகனாக சம்மாந்துறை விளையாட்டு கழக அணி வீரர் இஸ்மத்தும் தெரிவுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

செர்பிய பகிரங்க டென்னிஸ்:

# காலிறுதிப் போட்டிகளில் ஜோகோவிச் - ரூபெல்வ் வெற்றி!



ஆண்களுக்கான செர்பியா பகிரங்க டென்னிஸ் தொடரின் காலிறுதிப் போட்டிகளில், செர்பியாவின் நோவக் ஜோகோவிச்சும், ரஷ்யாவின் ஹென்ரி ரூபெல்வும் வெற்றிபெற்று அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

காலிறுதிப் போட்டியொன்றில், செர்பியாவின் நோவக் ஜோகோவிச், சக நாட்டு வீரரான மியோமிர் கெக்மனோவிக்கை எதிர்கொண்டார்.

பரபரப்பாக நடைபெற்ற இப்போட்டியில், முதல் செட்டை மியோமிர் கெக்மனோவிக், 64 எனக் கைப்பற்றினார்.

இதனைத்தொடர்ந்து சுதாகரித்துக் கொண்ட நோவக் ஜோகோவிச், அடுத்த இரண்டு செட்டுகளையும் 6-3, 6-3, எனக் கைப்பற்றி அரையிறுதிக்கு முன்னேறினார்.

மற்றொரு காலிறுதியில் ரஷ்யாவின் ஹென்ரி ரூபெல்வ், செக் குடியரசின் ஜிரி லெஹெக்காவுடன் மோதினார்.

விறுவிறுப்பாக நடைபெற்ற இப் போட்டியின் முதல் செட்டை, செக் குடியரசின் ஜிரி லெஹெக்கா 6-4 எனக் கைப்பற்றினார்.

இதனைத்தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது செட்டில், இருவரும் விட்டுக்கொடுக்காமல் ஆக்ரோஷமாக விளையாடிதால், செட் டை பிரேக் வரை நீண்டது.

இதில் இறுதி வரை சிறப்பாக விளையாடிய ரஷ்யாவின் ஹென்ரி ரூபெல்வ், செட்டை 7-6 எனக் கைப்பற்றி பதிலடி கொடுத்தார். இருவரும் தலா ஒரு செட்டைக் கைப்பற்றியதால், வெற்றியை தீர்மானிக்கும் மூன்றாவது செட், இரசிகர்களின் எதிர்பார்ப்பை எகிற வைத்தது. இதில் பெரிதளவான நெருக்கடிகள் இல்லாமல், ஜிரி லெஹெக்காவை எதிர்கொண்ட ஹென்ரி ரூபெல்வ், செட்டை 6-2 என இலகுவதாக கைப்பற்றி அரையிறுதிக்குள் அடியெடுத்து வைத்தார்.

# மாவனெல்ல கண்டியன் கழகம் சம்பியன்

**( மாளிகைக்காடு குறூப் நிருபர்)**

மாவனெல்ல இசுறு விளையாட்டுக்கழகம் ஒழுங்கு செய்திருந்த கிரிக்கெட் வசந்தம் சுற்றுப் போட்டியில் மாவனெல்ல கண்டியன் விளையாட்டுக்கழகம் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

"இனங்களுக்கிடையிலான ஐக்கியத்தை விளையாட்டுத்துறையினூடாக கட்டியெழுப்புவோம் " எனும் தொனிப்பொருளில் லகமுவ வித்தியாலய மைதானத்தில் அண்மையில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த அணிக்கு 7 பேர் கொண்ட மேற்படி கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் மாவனெல்ல கண்டியன் விளையாட்டுக்கழகம் இலுக்வத்த விளையாட்டுக்கழகத்தை தோற்கடித்து சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.



சம்பியன்களாக மாவனெல்ல கண்டியன் விளையாட்டுக்கழகத்திற்கு சம்பியன் கிண்ணமும் 30,000 ரூபா பணப்பரிசும் வழங்கப்பட்டதுடன் ஆட்ட நாயகனாக தெரிவு செய்யப்பட்ட கண்டியன் விளையாட்டுக்கழக லக்சித பரவீன் மதுசங்க , சிறந்த பந்து வீச்சாளராக தெரிவு செய்யப்பட்ட கண்டியன் விளையாட்டுக்கழக லக்மி விக்ரமரெட்ண , சிறந்த துடுப்பாட்ட வீரராக தெரிவு செய்யப்பட்ட இலுக்வத்த விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த சதிஸ் சுக்ரி ஆகியோருக்கு கிண்ணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

# கல்முனை லீடர் அஸ்ரப் பெடரேசனின் ரீ சேர்ட் அறிமுக நிகழ்வு

**(சாய்ந்தமருது விசேட நிருபர்)**



கல்முனை லீடர் அஸ்ரப் பெடரேசனின் வருடாந்த இப்தார் நிகழ்வும்,டி சேர்ட் அறிமுக நிகழ்வும் கல்முனை ஆஸாத் பிளாஸா மண்டபத்தில் அமைப்பின் தலைவரும், தொழிலதிபருமான யூ.எல் நௌபர் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இந் நிகழ்வுக்கு கல்முனை மாநகர சபை முதல்வர் சட்டத்தரணி ஏ.எம் ரக்கீப்,கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலி, கல்முனை முஹைத்தீன் ஜும்மா பெரிய பள்ளிவாசல் தலைவர் டாக்டர் எஸ்.எம்.ஏ அஸீஸ், கல்முனை மாநகர சபை உறுப்பினர்களான சட்டத்தரணி ஏ.எம்.ரோஸன் அக்தார் ,ஏ,சி.ஏ சத்தார், ஏ.எம் பைறோஸ் ,கல்முனை வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிறைவேற்று பொறியியலாளர் இஸட்.ஏ.எம் அஸ்மீர், கல்முனை பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் எம். ஜெயிஸான்,டாக்டர் எ.சி எம் அமீன்,சட்டத்தரணி சாரீக் காரியப்பர்,அமைப்பின் போசகர்கள், அமைப்பின் ஆலோசகர்கள், அமைப்பின் உயர் பீட முகாமைத்துவ சபை உறுப்பினர்கள், அமைப்பின் அங்கத்தவர்கள், பாடசாலை அதிபர்கள், முன்னாள் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்கள், பிற அமைப்புகளின் பிரதிநிதிகள், ஊடகவியளாலர்கள், அமைப்பின் நலன் விரும்பிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

மேலும் இந் நிகழ்வில் மௌலவி அல்ஹாஜ் பி.எம்.ஏ ஜலீல்(பாகவி) சிறப்பு மார்க்க சொற்பொழிவு இடம்பெற்றது.

இந் நிகழவின்போது அமைப்பின் ரி சேர்ட் உத்தியோகபூர்வமாக கல்முனை பிரதேச செயலாளரினால் அறிமுகம் செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.